# தமிழ்-ஹிந்தி சொல்வழக்கு அகராதி

# तमिल-हिन्दी कहावत कोश

*Original in Tamil with Hindi Translation*

சேகரிப்பு , மொழி பெயர்ப்பு : காமாட்சி சுப்ரமணியன்

संकलन व अनुवाद : कामाक्षी सुब्रह्मण्यन

-: प्रकाशक :-

ஹிந்தி ஹ்ருதய்

हिन्दी हृदय

चेन्नै-41

# தமிழ்-ஹிந்தி சொல்வழக்கு அகராதி

# तमिल-हिन्दी कहावत कोश

## ஆயிரங்காலத்துப் பயிர்

(பழமொழியும், பழகிய மொழியும்
பழக்கிய மொழியும்)

**Original in Tamil with Hindi Translation**

## बात बात में बात

## कढ़े हज़ार साल, पढ़े हज़ार साल

(कहावतें, मुहावरे, पदबन्ध और
अन्यान्य प्रयोग)

சேகரிப்பு, மொழிபெயர்ப்பு : **காமாட்சி சுப்ரமணியன்**

संकलन व अनुवाद : **कामाक्षी सुब्रह्मण्यन**

-: प्रकाशक :-

ஹிந்தி ஹ்ருதய்

**हिन्दी हृदय**

1, सुब्रह्मण्यन एवेन्यु, वाल्मीकि नगर,

तिरुवान्मियूर, चेन्नै-41

फोन नं. 4410022

# தமிழ்-ஹிந்தி சொல்வழக்கு அகராதி
# तमिल-हिन्दी कहावत कोश

சேகரிப்பு, மொழிபெயர்ப்பு : **காமாட்சி சுப்ரமணியன்**

संकलन व अनुवाद : **कामाक्षी सुब्रह्मण्यन**

*உதவி*

1. டாக்டர் எஸ். சுப்ரமணியன் 'விஷ்ணுப்ரியா'
2. டாக்டர் எஸ். விஜயா
3. டாக்டர் எஸ். பவானி சங்கர்
4. திரு. சஞ்சய் ஜோஷி

*सहायता :*

1. डॉ. एस. सुब्रह्मण्यन 'विष्णुप्रिया'
2. डॉ. एस. विजया
3. डॉ. एस. भवानी शंकर
4. श्री संजय जोशी

*अभिकल्प :* कु. यू. अष्टलता


भाग - I रु. 130/-

भाग - II रु. 100/-

*Publisher :*

**HINDI HRIDAYA**

1, Subramanian Avenue
Valmiki Nagar, Tiruvanmiyur,
Chennai - 600 041.
Phone : 4410022

# PREFACE

I am delighted to note that Hindi Hridaya is bringing out a volume of ancient, time-honoured and yet equally current Tamil Proverbs translated into Hindi by Shrimathi Kamakshi Subramanian, assisted by Dr. S. Subramanian Vishnupriya, Dr. S. Vijaya, Dr. S. Bhavanishankar and Shri Sanjay Joshi.

Language has been the master tool which man, in his endless adventure after knowledge and power, has shaped for himself, and which, in its turn, has shaped the human mind as we know it. It has continuously extended and conserved the store of knowledge upon which mankind has drawn for centuries since the dawn of history. It has furnished the starting point of all our sciences. It has been the instrument of social cohesion and of moral law, and through it human society has developed and found itself. **Language, indeed, has been the soul of mankind.**

Proverbs, epigrams, maxims and sayings are the established and time-tested tools of any great language. Language is only in part an individual instrument. It is in the main the community instrument used for community purposes. As such it tends to launch out on a career of its own, to which individuals contribute very much as the coral insect contributes to the growth of a coral reef or island. Action can give us the feeling of being used, but only words can give us the sense of weight and purpose. Meanings receive their dignity from words instead of giving into them. Words form the thread on which we string our experiences. The art of words is to use them creatively, to select and arrange them to inspire the minds, stir the heart and lift the spirit. Words are a dynamic force for changing men and nations.

FEB 2003

In this context I would like to recall the following beautiful words of **Ralph Waldo Emerson** :

"We infer the spirit of a nation in great measure from the language, which is a sort of monument to which each forcible individual in a course of many centuries has contributed a stone. And, universally, a good example of this social force is the veracity of language, which cannot be debauched. In any controversy concerning morals, an appeal may be made with safety to the sentiments which the language of the people express. Proverbs, words and grammar-inflections convey the public sense with more purity and precision than the wisest individual."

Tamil is a great and ancient language which abounds in thousands of proverbs which have enriched the life and literature of the Tamils for over five thousand years. A good proverb is a diamond on the finger of a man of wit and a pebble in the hand of a fool. The wide spread currency of several ancient Tamil Proverbs in day to day speech even today only proves that a fine proverb is too hard even for the tooth of time, and is not worn away by all the centuries, serving a rich and tasty food for every epoch. There is a proverb in Tamil for dealing with every situation or crisis or problem or dilemma. A proverb has been compared to a scorpion, because as the sting of a scorpion lies in it's tail, so also the force of a proverb rests in the conclusion.

One of the Sangam Works belonging to the class / group of '*பதினெண் கீழ்க்கணக்கு*' goes by the name '*பழமொழி நானூறு*". Many verses compiled during the Sangham period have been embellished with proverbial expressions. The great epics such as Jivaka Cintamani, Kamba Ramayanam, Kanda Puranam etc., reveal the proverbial expressions of their respective periods.

St. Thirunavukkarasar, in one of his hymns on Thiruvarur, has beautifully couched ten adages while expressing his past futile activities and purposeless life. (4th Thirumurai; Pathikam 5). In the beginning of the 20th century, many works dealing with proverbs and adages in Tamil had appeared.

Likewise in Sanskrit Language also, proverbs and adages are called "Prachinokti", Vyavahakarika Bhasha", "Vyavahara Bhashita" etc. Maxims go by the specific name, "Nyaya" such a "Sthanu Purusha Nyaya", "Rajju Sarpa Nyaya" etc.

The Ramayana, Mahabharatha, Puranas and even some of the Vedic hymns have been embellished by appropriate and scintillating proverbial expressions.

I congratulate the authors for bringing out a volume containing translation of hundreds of Tamil Proverbs which have withstood the ravages of time into Hindi. Efforts and exertions of this kind will promote great awareness and emotional appreciation of the different languages and cultures of India, strongly sustaining, supporting and even reinforcing the slowly crumbling edifice of national unity.

**N. MAHALINGAM**

Chairman

Sakthi Group of Companies

# AUTHOR'S PREFACE

I would very much prefer my preface to be in Tamil or Hindi but as I have to reach both the linguistic groups, I am placing my prefatorial sentiments in English.

Having been educated in Tamil during my school days, if has been to me, a language like almost alternate palpitation. I have been collecting sayings and proverbs from my childhood days. I learned Hindi as the third language and developed a kind of expertise by becoming a Teacher of Hindi. I remember Livingston Gull's statement "The best way to learn is to teach".

My one passion in Hindi was reading Munshi Premchand and every time I read him, I could sense the striking similarity in his rustic diction with the proverbs, sayings & maxim current in Tamil. I have been matching them all these years. I had also occasion to go through 'A classified Collection of Tamil Proverbs by Rev. Hermen Jansun and A Dictionary of Tamil Proverb by Rev. John Cayan. I also collected proverbs and John Cayans phrases from the following books *பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், மனவாசம், தென்பாண்டி சிங்கம், துடிப்பின் எல்லை, கள்ளிகாட்டு இதிகாசம்* and many other books in Tamil Penned by giants of literature. I have found matching expression in Premchand, Prasad, Rangeya Raghav, Yashpaal, Amritlal Nahar, Bala Souri Reddy, R. Sourirajan and many other writers in Hindi.

A life long ambition fell into frame and is here before you.

Two persons have deeply influenced me Rukmini Devi Arundale of **Kalakshetra** under whom I worked for more than three decades and Kumararani Meena Muthiah of Chettinad Vidyashram who has been inspiration to me all these years.

I am grateful to my husband Dr. S. Subramanian Vishnupriya, to my close friend Dr. S. Vijaya, to my son Dr. S. Bhavani Shankar to my daughter in Law Jyotshna & Shri Sanjay Joshi of SIDBI for helping me in this boon during various stages of compilation.

I am grateful to Dr. N. Mahalingam, Chairman, Shakti Group of Companies & Shri. M. Dharmarajan, General Secretary, S.B.I.O.A for their Scholarly Prefaces.

**KAMAKSHI SUBRAMANIAN**

# FOREWORD

It gives me great pleasure to come across the first volume of Tamil proverbs and sayings with Hindi Translation, compiled and authored by Mrs. Kamakshi Subramanian, assisted by Dr. S. Subramanian, Dr. S. Vijaya, Dr. S. Bhavani Shankar and Shri. Sanjay Joshi. Yet another proud publication of the Hindi Hirdaya, the book contains a *number of Tamil proverbs, sayings* and maxims in original with Hindi translation, making an interesting reading in both the languages.

Proverbs, sayings are always the collective expression of wit and wisdom of all nations and their culture, which have withstood the test of time through ages. They are not only thoughts put in a nutshell but also are words having impact on people. All nations, regions, and religions have placed in prominence these proverbs in various literature and religious books. The book of proverbs as published in the Bible is an example.

Proverbs, which constitute wisdom literature, are also wealth of tradition of a Nation and culture, handed down from generation to generation mainly to uphold values to its people. It instructs discipline, develops mental clarity and perception. It is no wonder the proverbs and sayings are innumerable in Tamil, the most ancient and classical language. The author has not spared any pain to patiently search for, collect, preserve, classify and provide a parallel Hindi translation in lucid language which no doubt will be welcomed by Hindi knowing population all over the world. It shall have a special place in the hearts of Tamil-Hindi diglots.

I heartily congratulate the author Smt. Kamakshi Subramanian for her valuable contribution to the growth of reference literature in Hindi as well as in Tamil.

# அ

1. அக்கரைக்கு இக்கரை பச்சை, அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
2. அக்கன்னா, அரியன்னா, உனக்கு வந்தகேடென்ன?
3. அக்கு லேது, பிக்கு லேது, பீத்த முக்குக்கு புல்லக்கு வேது.
4. அக்கச்சி உடைமை அரிசி, தங்கச்சி உடமை தவிடா?
5. அக்னி பிரவேசம் செய்த சீதையைப் போல.
6. அக்னி தேவனை குளிப்பாட்டி வைச்சாப் போல.
7. அக்னி பந்தலிலே வெண்ணை பதுமை ஆடுமா?
8. அக்னியைத் தின்னு சீரணிக்கறப் பிள்ளைக்கு, அல்லித்தண்டு எம்மாத்திரம்?
9. அகடவிகடமாய்ப் பேசுகிறான்.
10. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
11. அகத்தி ஆயிரம் காய்த்தாலும், புறத்தி புறத்தியே.
12. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்.
13. அகலக் கால் வைக்காதே.
14. அகல உழுவதை ஆழ உழு.
15. அகப்பட்டதை சுருட்டிக்கறவனாச்சே.
16. அகோரத பசி விபரீத சோரன்.
17. அங்கே சுத்தி இங்கே சுத்தி, அடி மடியிலே கையை வைக்கறான்.
18. அங்கே மழை பெய்தால் இங்கே சாரலாவது அடிக்காதா?
19. அங்குசத்துக்கு அடங்கி போகும் யானை போல.
20. அங்குமிருப்பன், இங்குமிருப்பான் ஆக்கின சோத்துக்கு பங்குமிருப்பான்.
21. அங்கே சுத்தி இங்கே சுத்தி புறப்பட்ட இடத்துக்கே வந்தாச்சு.
22. அங்காடி கூடையை அதரபெதர அடிக்காதே.
23. அச்சு வெல்லம் தின்ன மாதிரி இளிச்சிக்கிட்டே இருக்கான்.
24. அச்சிலே வரலேன்னா என்ன, மொடாலே வாத்துட்டுப் போறது.
25. அச்சாணி இல்லாத சக்கரம் போல.

1. दूर के ढोल सुहाने, पार का घास, भाए बैल को।

2. बभूत रमाया तो क्या भूत समाया।

3. अन्टम फन्टम छोड दो बाबू हो गयी तेरी हार।

4. भरे भंडार बडे भैया का खाली भंडार छोटे का।

5. यथा सीता का अग्नि प्रवेश।

6. रंग ऐसा जैसे नहाये अगन का गोला।

7. आग की महफिल में मक्खन की प्रतिमा कैसे नाचे।

8. जो आग को हज़म करे वह हल्के भोजन से क्यों डरे।

9. हँसी मज़ाक के लहज़े में बोलता है।

10. चेहरा दिल का आइना है।

11. घर भरा साग तो कहो किस काम का।

12. खाई में पड़ा मगर कहे वही वैकुंठ है।

13. असंभव प्रयास न करना। छलांग मारा, नाले के बीच में गिरा।

14. फैलने से पैठना अच्छा।

15. हाथ आये कब्जे में गये। झपटकर लपेटनेवाला।

16. ढोंगी साधु बडा डाकू।

17. अंगुली पकडकर पहुँचा पकड लेना; मुट्ठी पकडी अंगूठी चुरा ली।

18. आप के खेत में बरसात, हमें थोडी बूंद ही सही।

19. अंकुश के आगे आज्ञाकारी हाथी सा।

20. ऊधो का लेना, न माधो का देना।

21. सुबह का भूला साँझ को घर आये।

22. थोक माल को कभी न छितराना।

23. गुड़ पर चींटी सा फैला मुँह।

24. साँचे में ढले नहीं तो, क्या ऐसे ही चले।

25. जैसे पहिया बिन धुरी का।

26. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

27. அச்சுப் பிச்சு ஆத்தைப் பார்த்துக்கோ என்பது போல.

28. அசட்டுக்கு அகங்காரம், முசுட்டுக்கு முன் கோபம்.

29. அசந்தா ஆளை முழுங்கி ஏப்பம் விட்டுடுவான்.

30. அசலாத்து நெய்யே, என் பொண்டாட்டி கையே என்றனாம்.

31. அசகாய சூரன்.

32. அசட்டுக்கு அறுபது நாழியும் வேலைதான்.

33. அசலும் வட்டியுமாத் திருப்பிட்டான்.

34. அசலுக்கு அசலும் போச்சு, வட்டிக்கு வட்டியும் போச்சு.

35. அசலுக்கே மோசம்.

36. அங்கயர்கண்ணி, கண்ணு போடாதேடி.

37. அஞ்ஞாத வாசம் போன பாண்டவாளைப் போல.

38. அஞ்சும் மூணும் உண்டானால், அறியாப் பொண்ணும் சமைக்கும்.

39. அஞ்சு பெத்தால் அரசனும் ஆண்டி.

40. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்.

41. அஞ்சினவனைக் குஞ்சும் விரட்டும்.

42. அட்சர லட்சம் பெறும்.

43. அட்டையை(பூச்சி) எடுத்துத்தொட்டியில் கிடத்தினாலும், அது கிடக்கும் குட்டையில்.

44. அட்ட தரித்திரம் ஆத்தாவீடு, அதிலும் தரித்தரம் அத்தை வீடு.

45. அட்டத்தைப் பாருன்னா, புட்டத்தைப் பார்க்குறான்.

46. அட்டமத்து சனிய்யை வட்டிக்கு வாங்கினது போல.

47. அட்டமத்து சனி பிடித்தது, பிட்டத்துத் துணியும் உரித்து கொண்டது.

48. அடக்கமான இதயம் அனைவரின் அன்பைப் பெறும்.

49. அடக்கம் அமரருள் வைக்கும்; அடங்காமை அழிவைத் தரும்.

50. அடாவடித்தனமா இருக்கு

51. அடி உதவறாப் போல அண்ணன் தம்பி உதவுவானா?

26. धुरी नहीं तो गाड़ी चले न दो कदम भी।

27. घनचक्कर! घर को देख लो।

28. बुद्धु अहंकार में, चिढचिढा गुस्से में।

29. सुस्ताये तो डकार जायेगा।

30. परायी मिठाई, पत्नी के हाथ की सफाई।

31. मुकद्दर का सिकन्दर।

32. बुद्धू सदा भरे पानी, सदा चरे बैल।

33. मूल का मूल, ब्याज का ब्याज भी,लौटा दिया आज ही।

34. मूल भी लुटा, ब्याज भी गया।

35. मूल ही धूल बन जाय।

36. दूर हो बुरी नज़र वाले।

37. अज्ञातवासी पांडवों जैसा।

38. कम उम्र में माँ बनी तो बनेगी सयानी।

39. पाँच बेटियाँ और राजा बन जाए रंक।

40. सहमे तो चप्पे-चप्पे में भूत।

41. डरे को चूज़ा भी धमकायेगा।

42. अक्षर-अक्षर लक्ष बराबर।

43. जोंक से करे कौन नोक झोंक।

44. न मायका रास आये न ससुराल।

45. आकाश का देखने को कहे तो धरती देखता है।

46. साढ़े-साती से लडे कौन।

47. साढे साती में उड गयी धोती भी।

48. विनयशील हृदय सर्वजित है।

49. विनय स्वर्गीय और धूर्तता नारकीय।

50. धांधली चलती है।

51. लातों का भूत बातों से नहीं मानता।

52. அடிக்கும் ஒருகை, அணைக்கும் மறு கை.

53. அடிக்கும் காற்றிலே எடுத்துத் தூற்ற வேண்டும்.

54. அடிக்கிற கைதான் அணைக்கும்.

55. அடிக்கும், பிடிக்கும் சரியாப்போச்சு.

56. அடி அதிரசம் குத்துக் கொழுக்கட்டை.

57. அடிச்சி வைச்ச சிலையாட்டம் உட்கார்ந்திருக்கான்.

58. அடிபட்ட நாய் கடிக்காம விடாது.

59. அடிபட்ட பாம்பு கொத்தாம விடாது.

60. அடிமாட்டு விலைக்குக் கேக்கறான்.

61. அடிச்சி விட்ட பாம்பும், பிடிச்சி விட்டத் திருடனும் ஒண்ணு போலத்தான்.

62. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் அசையும்.

63. அடியாத மாடு படியாது.

64. அடியேங்கறதுக்கு ஆளைக் காணுமாம், பிள்ளைக்குப் பெயர் ஆறாவமுதனாம்.

65. அடிச்சிப் போட்ட பெருச்சாளி போல.

66. அடிநாக்கிலே நஞ்சும், நுனி நாக்கிலே அமிர்தமுமா?

67. அடியைப்பிடி, மடியைப்பிடி, அகப்பட்டவன் மென்னியைப் பிடி.

68. அடி ஓய்ந்தால் அங்காடிக்கு வர வேண்டும்.

69. அடித்து வளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வை ஆகாது.

70. அடுத்தவன் சொத்துக்கு ஆலாய்ப் பறக்கிறான்.

71. அடுத்தாரைக் கெடுத்து அன்னம் இட்டாரைக் கன்னம் இடுவதுபோல.

72. அடுத்த வீட்டு நெய்யே, என் பொண்டாட்டி கையே என்றானாம்.

73. அடுப்பங்கரையே திருப்பதி, ஆம்படையானே கைலாசம்.

74. அடுப்பங்கரையிலே பூனைத் தூங்கறது.

75. அடுக்களைப் பூனை போல்.

76. அடுப்பை அணைத்தால்தான் கொதிப்பு அடங்கும்.

77. அடுத்தவன் வாழப் பொறுக்கமாட்டானே.

52. मारे भी वह, तारे भी वह।

53. बहती गंगा में हाथ धो लेना।

54. धत् कहे और गले लग जाय।

55. मार भी प्यार भी हो गया बराबर।

56. मार पीट खाये यार, पीठ पर खुशी खुशी।

57. प्रतिमा-सा बैठा है।

58. पिटा कुत्ता काटेगा ही।

59. लाठी खाया साँप, डसकर ही रहेगा।

60. गरज़ देखकर कम दाम पे माँगता।

61. लाठी खाये साँप और मार खाये चोर चुप न रहेंगे।

62. रसरी आवत जाततें सिल पर पड़त निसान।

63. मार खाये तो मान ले बैल।

64. ब्याह के लिए छोरी नहीं, पूत का नाम प्रताप।

65. अधमरा छंछूदर-सा।

66. मुँह में राम राम बगल में छुरी।

67. उँगली पकड़कर पहुँचा पकड़ लेना।

68. सस्ता बने तो बाज़ार में आये।

69. मूछ को मालिश कर पालो, लड़के को डांट डपटकर पालो।

70. पराये माल के लिए करे बेगार।

71. जिस थाली में खाया उसीमें छेद डाला।

72. औरों का माल और अपनों के हाथ। पूड़ी बनाये महाराज परोसे बीवी।

73. घर ही संसार, पति ही परमेश्वर।

74. बिल्ली सोये चूल्हे में।

75. रसोई की बिल्ली जैसी।

76. आँच थमे तो उबाल थमे।

77. परायी शान मन में अखरे।

78. அண்டத்திற்கொத்தது பிண்டத்திற்கு.

79. அண்டை வீட்டுக்காரன் அன்போடு இருந்தா மூணாம் வீட்டுக்காரன் பகை என்ன செய்யும்?

80. அண்டி வந்தவனை ஒண்டிக் கொண்டவன் காப்பத்தினாப் போல.

81. அண்ட நிழல் இல்லாமல் போனாலும், பேர் என்னவோ ஆலால விருட்சம்.

82. அண்டை வீட்டுக்காரி பிள்ளைப் பெற்றுக் கொண்டாளென்று, உலக்கை எடுத்து அடித்துக் கொண்டாளாம்.

83. அண்ணாமலையார் அருள் இருந்தா மன்னார்சாமி மயிர் பிடுங்குமா?

84. அண்டி பிழைக்கும் ஜீவன்.

85. அண்டத்தை சுமக்கிறவனுக்கு சுண்டைக்காய் பாரமா?

86. அண்ணனுக்குக் கல்யாணம், அவசரக் கோலம்.

87. அண்ணன் பெண்டாட்டி அரைப் பெண்டாட்டி, தம்பி பொண்டாட்டி தன் பெண்டாட்டி.

88. அணில் பங்காவது இருக்கட்டுமே.

89. அணை கடந்த வெள்ளத்தை அடைப்பாருமுண்டோ.

90. அத்திப் பூத்ததுபோல, ஆவாரம் காய்ச்சது போல.

91. அத்திப் பூத்தாப் போல.

92. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.

93. அத்தைக்கு மீசை முளைச்சா.

94. அத்தை பகையும் இல்லை, அம்மாமி உறவும் இல்லை.

95. அத்தை மகள் அறையிலிருக்க ஊரார் மகளோடு ஊர்கோலமா?

96. அத்தனையும் சேர்த்துட்டு உப்பு போட மறந்தாப் போல.

97. அதிர்ஷ்டம் வந்தால் தவிட்டுப் பானையிலும் தனம் இருக்கும்.

98. அதிக படிப்பு மட்டும் உண்மை மனிதர்களை உண்டாக்கி விட முடியாது.

99. அதிகாரி வீட்டில் திருடி தலையாரி வீட்டில் ஒளித்து வைத்தானாம்.

100. அதிகாரத்தினால் சாதிப்பதை விட அன்பினால் சாதித்து விடலாம்.

101. அதிகாலையிலே இருள் அதிகமானா, விரைவில் விடியப் போறதுன்னு அர்த்தம்.

78. औक़ात बराबर इज्ज़त मिले।

79. पड़ोसी अपना है तो जग पराया हो तो क्या?

80. शरणार्थी का उद्धार आश्रित से ही। छाया को बचाये साया।

81. पंथी को छाया नहीं, नाम बड़ा बरगद का। नाम बडे दर्शन थोडे।

82. पड़ोसिन ने पूत जना, अपने पेट पर मूसल मार लिया।

83. जाको राखै साइयां, मारि न सक्कै कोय।

84. पराश्रित प्राणी/परान्न भोजी जीव।

85. जो धरती थामे कंधों पर आसमान जिसकी उंगलियाँ पर उसे किस बात का डर।

86. बेगानी शादी में अब्दुल्ला दीवाना।

87. साली आधी घरवाली, जेठानी भी अपनी-सी।

88. थोडी सी मदद बस गिलहरी-सी।

89. आकूलप्लावित को रोके थामे कौन?

90. ईद का चाँद सा। गूलर के फूल समान।

91. ज्यों ईद का चाँद।

92. जैसे मौसी की मूंछ।

93. किया कराया पानी फिर गया।

94. भाई सा बडा दुश्मन नहीं, बहन से बडी साथिन नहीं।

95. मंगेतर को छोड़ और से संग क्यों?

96. सर झुकाया, पर सलाम न कहा।

97. देनेवाला छप्पर फाड़कर देता है।

98. पोथी पढ़ि पढ़ि जग मुवा, पंडित भया न कोय।

99. अधिकारी के घर से चुराकर मुखिया के घर में छिपाया।

100. कानी भाभी से रानी भाभी अच्छी।

101. ऐसी कोई रात नहीं, जिसकी सुबह न हो।

102. அதிசயமடி அம்மங்காரே அம்மி புரண்டு ஓடுகிறது.

103. அதை விட்டாலும் கதியில்லை, அப்புறம் போனாலும் வழியில்லை.

104. அத்தோடு நின்றது அலைச்சல், கொட்டோடு நின்றது குலைச்சல்.

105. அதிக ஆசை அதிக நஷ்டம்.

106. அதிகாரிக்கு முன்னும், கழுதைக்கு பின்னும் போகக் கூடாது.

107. அதிர்ஷ்டமும், ஐஸ்வரியமும் ஒருவர் பங்கல்ல.

108. அதிர்ஷ்டம் கெட்டதுக்கு அறுபது நாழியும் தியாச்சியம்.

109. அது எங்கும் நிறை பரப்பிரம்மம்.

110. அது அதுக்கு ஒரு கவலை, அம்மாவுக்கு எட்டு கவலை.

111. அதுவே கூத்து, அதிலே வேற கோமாளியா.

112. அதை அதை வைக்கிற இடத்திலே தான் வைக்கணும்.

113. அந்தியில் அசுவத்தாமன் பட்டத்துக்கு வந்தாப்போல.

114. அந்தியில் பிடித்த மழையும், ஆளைப்பிடித்த சதையும் லேசில் விடுமா என்ன?

115. அந்திச் சோறு உந்திக்கு ஒட்டாது.

116. அந்தம் உள்ளவன் ஆட வேண்டும், சந்தம் உள்ளவன் பாட வேண்டும்.

117. அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் முடிச்சுப் போட்டாப்போல.

118. அப்புறம் தின்னற பலாக்காய்க்கென்னா, இன்னிக்குத் திங்குற களாக்காய் மேல்.

119. அப்பனுக்கே அரைக் கோமணமாம், அதிலே இழுத்துப் போர்த்திக்கடா மகனே என்றானாம்.

120. அப்பனாவது பாட்டனாவது, வெள்ளையப்பன்தான் வேண்டியவன்.

121. அப்படி போடு அரிவாளைன்னானாம்.

122. அபத்தபஞ்சாங்கத்துக்கு அறுபது நாழியும் ராகுகாலம் தான்.

123. அப்பனுக்கே உபதேசம் பண்றவனாச்சே.

124. அப்பத்துக்கு மேலே நெய் மிதக்கறதுன்னா, கேக்கறவனுக்கு மதி எங்கே போச்சு?

125. அபாயமில்லாமல் அபாயத்தைத் தாண்ட முடியாது.

102. अचंभा देखो, आकाश खडा बिना खंभा।

103. जो मिले, उससे हिलमिल जाओ। हाथ आए को छोड दिया तो साथ जाए कौन?

104. छींक और खांसी आये चले जाये।

105. लालच बुरी बलाय। हबस बडी तो क़हर हुआ।

106. अफ़सर के आगे और गधे के पीछे मत जइयो बेटा।

107. खुलती किस्मत बारी बारी मिलती दौलत बारी बारी से।

108. बुरा जमाना आता है तो छाया भी जुदा हो जाती है।

109. यत्र तत्र सर्वत्र व्याप्त परब्रह्म। कुएँ में खाई में हर कहीं साईं है।

110. अपनी अपनी परेशानी, माँ को सब की परेशानी।

111. एक तो करेला, वह भी नीम चढा।

112. अपनी-अपनी जगह सब ठीक।

113. आखिर ईख से गुड़ तो निकला।

114. साँझ की बरसात और तोंद की चर्बी, जल्दी न जाये।

115. साँझ का भोजन तन में जमे न।

116. सुंदर को नाचना चाहिए और सुरीले को गाना।

117. मुल्ला गंगा नहाये क्या फ़ायदा?

118. कल के हीरे से आज की कौड़ी बेहतर, कल के मोर से आज का कबूतर अच्छा।

119. बाप फटीचर, बेटे से कहा कम्बल ओढ़कर सोना। बेटे ने कहा लगोटी में आधी ले लो।

120. बाप बडा न भैया, सबसे बडा रुपैया।

121. ऐसा मारो, उबर न पाये।

122. शंकालु मन के लिए हर क्षण असगुन।

123. इतना होशियार कि बाप की चोटी सँवारे।

124. पूड़ी चू पडी - घी, चलो मान लिया।

125. खतरा उठाओ, खतरा सँभालो।

126. அப்பத்துக்கு மேலே நெய்மிதந்தா, அப்பம் தெப்பம் போகும்.

127. அம்மா பாக்கியம் சம்பா விளைந்தது, பாவி பாக்கியம் பதராய் விளைந்தது?

128. அம்மா கோண்டு.

129. அம்மணப்பேட்டையிலே, கோவணம் கட்டியவன் பைத்தியம்.

130. அம்மாவாசைச்சோறு என்றைக்கும் அகப்படுமா?

131. அம்மாவாசைக்கு அம்மாவாசை ஒரு ஆம்பிள்ளைன்னு என்னத்துக்கு வாழறது?

132. அம்மைக்கு அமர்க்களமா ஆக்கிப்படை எனக்கு அமர்க்களமா பொங்கிப்படை.

133. அம்பட்டன் குப்பையைக் கிளறினா என்ன கிடைக்கும்.

134. அம்மனோ சாமியோ ஆட ஆரம்பிச்சாச்சு.

135. அம்மன் வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்க வேண்டாமா?

136. அம்மி மிடுக்கோ, அரைப்பவன் மிடுக்கோ?

137. அம்மாமி வாயைக் கிண்டினா, அத்தனையும் பழமொழியாம்.

138. அம்பலக் கழுதை அம்பலத்தில் கிடந்தாலென்ன, அடுத்த திருமாளிகையில் கிடந்தாலென்ன?

139. அமர்த்தனுக்கும் காணி வேண்டாம், சமர்த்தனுக்கும் காணி வேண்டாம்.

140. அம்மாவாசை இருட்டிலே பெருச்சாளி போனதே வழி.

141. அம்பில்லாத வில்லும், பணமில்லாத மனிதனும் வீண்.

142. அய்யாசாமிக்குக் கல்யாணம், அவரவர் வீட்டிலே சாப்பாடு.

143. அயன் இட்ட கணக்கு யாருக்கும் தப்பாது.

144. அரங்கள் சொத்து அக்கரை ஏறாது.

145. அரசனும் ஆண்டியும் ஒண்ணாகுமோ?

146. அரசமரத்தைச் சுத்திட்டு, அடிவயத்தைத் தொட்டுப் பார்த்துண்டாளாம்.

147. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.

148. அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாச்சு.

149. அரசன் ஆட்சிக்கு ஆகாசவாணியே சாட்சி.

150. அரசன் குடுமியையும் பிடிக்கலாமென்று, அம்பட்டன் வேலையை விரும்பினதுபோல.

126. कमाई बढ़ी, खतरा बढ़ा। भरा खलिहान बलाए आसमान।

127. बहू का सुहाग खेत में सोना अपना सुहाग भूख में रोना।

128. माँ का लाडला।

129. नंगों की बस्ती में लंगोटिया पागल।

130. मुफ्त का माल रोज-रोज मिलेगा क्या?

131. किये काम दोहराने के लिए पुरुष क्यों?

132. मैया को खूब भोग चढाओ, साथ मेरे लिए भी।

133. नाई की टोकरी में बाल ही बाल।

134. सनक सवार तो नाचन लागे।

135. भगवान क्या दे, पुजारी ही देता है।

136. काम से नाम या नाम से काम।

137. चाची मुँह खोले तो कहावत ही कहावत।

138. गधा घर में रहे या घाट में।

139. पूत सपूत तो का धन संचय? पूत कपूत तो का धन संचय?

140. मावस की रात में छछुंदर के साथ।

141. बिन बाण का कमान और बिन पैसे का इनसान किस काम का।

142. माथुर की बारात, हाथी दामाद, अपने अपने घर में आराम से भोज।

143. चित्रगुप्त का लिखा टाले न टले।

144. मंदिर की मिल्कियत है, कोई खेल नहीं।

145. राज-रंक कहाँ बराबर?

146. मनौती से कैसे माँ बने कोई।

147. भगवान के घर में देर है, अंधेर नहीं।

148. मिला भूपति छोडा पति, न पति मिला न भूपति।

149. अच्छे शासन के लिए आकाशवाणी साक्षी।

150. राजा का सिर हाथ में और नाई की खुशी।

151. அரச பிரதட்சிணத்திற்குப்போட்டு, நைவேத்தியத்திற்கும் வைக்கலாம்.

152. அரபிக் குதிரையானாலும், ஆள் ஏறி நடத்த வேண்டும்.

153. அரச மரத்தடி பிள்ளையார்போல.

154. அரசனும் ஆண்டியாவான், ஆண்டியும் அரசனாவான்.

155. அரிசியை இறைத்தால் ஆயிரம் காக்கை.

156. அரியும், சிவனும் ஒண்ணு, இதை அறியாதவன் வாயிலே மண்ணு.

157. அரிசி கொடுத்து அக்கா உறவு என்ன வேண்டியிருக்கு.

158. அரிசி என்று அள்ளிப் பார்ப்பாருமில்லை, உமி என்று ஊதிப் பார்ப்பாருமில்லை.

159. அரைப் பணத்திலே கல்யாணமாம், அதிலே கொஞ்சம் வாண வேடிக்கையாம்.

160. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

161. அரண்மனையில் வாசம், ஐந்து பைசாவுக்கு தாசன்.

162. அரிசி தர வேண்டாம், தவிடாவது தரலாம் தானே.

163. அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒரு கேடா?

164. அரிசி ஆழாக்கு ஆனாலும், அடுப்புக் கல்லு மூணு வேணும்.

165. அரிப்பெடுக்கறவன் தானே சொறிஞ்சிக்கணும்.

166. அரிதாரம் பூசிண்டாச்சு.

167. அருள் வேணும், பொருள் வேணும், ஆகாய வாணித் துணையும் வேணும்.

168. அருமை அறியாதவன் வீட்டுக்குப் போனால் பெருமை குறைந்து போகும்.

169. அரைவேக்காடு.

170. அரைப்பணம் கொடுத்து அழச்சொல்லி, முக்கால் பணம் கொடுத்து ஓயச்சொன்னாப் போல.

171. அரைச்சொல் வித்தை கொண்டு அம்பலம் ஏற ஆசைப்படலாமா?

172. அரையிலே புண்ணும், அண்டையிலே கடனும் ஆகாது.

173. அரைக்குப்புடவை கேட்க உடன்பிறந்தான் வீட்டுக்குப் போனா, மதனி ஈச்சம் பாயைக் கட்டிண்டு எதிருக்க வந்தாளாம்.

174. அரைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.

151. भोग भी चढाना, भोज भी कराना।

152. घोडा आसमानी हो चढना तो आदमी को हो।

153. घाट का गणेश।

154. राजा भी रंक बनेगा, रंक भी राजा।

155. पैसा बिखरा तो आये भिखारी।

156. अगुनहि सगुनहि नहि कछु भेदा।

157. लेन-देन पर रिश्ता क्यों?

158. न उठाया, न ठुकराया।

159. कौड़ी में शादी, आधे में आतिशबाजी।

160. डरी आंखें, भरी आंखें।

161. ऊँची दूकान, फीका पकवान।

162. नाज नहीं तो क्या, भूसा ही सही।

163. चावल बिन भात, नमक की क्या जरूरत।

164. चावल थोड़ा ही क्यों न हो, चूल्हा तो चाहिए ही।

165. खाज हो तो खुजली करें।

166. भेष बना ही लिया। रंग चढा लिया अब भंग करे क्यों?

167. माया भी चाहिए, राम भी चाहिए।

168. तुलसी तहाँ न जाइए, कंचन बरसे मेघ। पहचान नहीं तो आने का अरमान क्यों?

169. अधपकी खिचडी, न काम का न दाम का।

170. दमड़ी देकर नौकरी दी, रुपया देकर बरखास्त करे।

171. कच्ची विद्या से पक्की शान हो कैसे।

172. कमर में घाव और पडोस में उधार ठीक नहीं।

173. मदद माँगने मायके गयी, माँ चली आयी पहनी आधी धोती।

174. अधजल गगरी छलकत जाय, भरी गगरिया चुपके जाय।

175. அரைவித்தைக் கொண்டு அம்பலம் ஏறினாலும் அரைவித்தை முழு வித்தையாகுமா?

176. அரைச்ச மாவையேத் திரும்பத் திரும்ப அரைக்கறாப் போல.

177. அல்லல்பட்டு அழுத கண்ணீர் செல்வத்தைக் குறைக்கும்.

178. அல்லி தர்பார் தான்.

179. அல்லி ராணின்னு நினைப்போ.

180. அல்பாயுசுக்காரனுக்கு சித்தெறும்பு சாக்கு.

181. அல்பனுக்கு பவிசு வந்தா அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.

182. அல்லிப் பூ வயிற்றில் அவரைக்காய் காய்க்குமோ.

183 அலை ஓய்ந்த கடல் போல.

184. அலை ஓய்ஞ்சு சமுத்திரத்தில் குளிக்க முடியுமோ?

185. அலை எப்ப ஓயறது, சமுத்திரத்திலே எப்போ குளிக்கறது.

186. அலை பாயற மனசை அடக்கி ஆள்.

187. அலை மோதும் கடலில் அல்லி வளராது.

188. அலங்காரமா, அலங்கோலமா?

189. அலங்காரமில்லா அழகு எடுபடாது.

190. அலங்காரவல்லி நாச்சியார் போல இருக்கா?

191. அலசி ஆராய்ஞ்சி பார்க்கணும்.

192. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

193. அவசரக் கோலம் அள்ளித் தெளிச்சாளாம்.

194. அவலமாய் வாழ்பவன் சுலபமாய் சாவான்.

195. அவனே இவனே என்பதைவிட சிவனே சிவனே என்பது நல்லது.

196. அவன் ஊரார் வயிற்றில் அடித்தால், விதி அவன் வயிற்றில் அடித்துவிட்டது.

197. அவனுக்கு யானை பலம்.

198. அவன் நாக்கிலே சரஸ்வதி தாண்டவமாடுகிறான்.

199. அவனவன் நிழல் அவன் பின்னால்தானே வரும்.

175. अधपकी खिचड़ी कहाँ पेट भरें।

176. पिष्ट पेषण करना कै को उलटाकर खाना बनाना।

177. दुखिया के आँसू दौलत चाट जाये।

178. महिला साम्राज्य घघरिया पलटन।

179. बड़ी अप्सरा हो, रानी रुठे अपने सुहाग ले।

180. बेवक्त मौत के लिए चींटी भी काफी।

181. रंक चले सिर छत्र धराई।

182. बबूल की डाली में गुलाब कैसे?

183. थमी लहरवाले सागर सा।

184. समन्दर की लहरें थमे तो नहायेंगे।

185. कब लहर थमे और कब नहाये।

186. चंचल मन पर लगाम लगाओ।

187. सागर तट पर धान न उपजे। लहरों में खिले कमल, देखा सुना न कान।

188. सजावट कहे या बनावट।

189. सुन्दरता को भी सजावट चाहिए।

190. अलंकृत अप्सरा-सी।

191. सोच-विचार कर देखना चाहिए।

192. उसका साथ तगडा हाथ फिर कौन करे हमपर घात।

193. गड़बड़ घोटाला।

194. अस्तव्यस्त जीवन, मरण का निमंत्रण।

195. इधर-उधर माँगने से ईश्वर से माँगना अच्छा। सलाम बाबू से दुआ बेहत्तर

196. जैसा बोया वैसा पाया / तोको फूल को फूल है, वाको है तिरसूल।

197. वह तो हाथीनुमा है/ हाथी साथ तो जोडी बराबर।

198. उसकी जीभ पर सरस्वती का निवास है।

199. आप की परछाई आप के साथ। तेज दौड पर साथ परछाई।

200. அவனவன் மனசே அவனுக்கு சாட்சி.

201. அவன் காட்டிலே மழைதான்.

202. அவசரத்துக்கு அருக்கஞ்சட்டியிலும் கை நுழையாது.

203. அவன் வம்புக்கும், இவன் தும்புக்கும் சரி.

204. அவசரக்குடுக்கை.

205. அவசரப்பட்டுத் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுண்டாப் போல.

206. அவசரக்காரனுக்கு புத்திமட்டு.

207. அவலக் குடித்தனத்தை அம்பலப் படுத்தாதே.

208. அவன் போட்ட கணக்குத் தப்புமா?

209. அவன் மகன் அங்கதன் தானே?

210. அவலை நினைச்சிண்டு உரலை இடித்த கதையாயிருக்கு.

211. அவ தரித்திரம் தான் அவளுக்கு முன்னாலே வந்து நிக்கறதே.

212. அவ்வளோ பெரிய யானைக்கு இத்தனூன்டு கண்ணுபோல.

213. அவளுக்கென்ன, முடியிருக்கறவ, வலக் கொண்டையும் போடுவா, இடக் கொண்டையும் போடுவா.

214. அவன் எப்பவும் ஏணிப்படிதான்.

215. அவன் நாலும் தெரிந்த நுழைநரி.

216. அவன் தென்னம் பிள்ளை போல.

217. அவிழ்த்துவிட்ட கண்ணுக்குட்டிபோல.

218. அவிசாரி தாலி கட்டிக்க ஆசைப்பட்டாப்போல.

219. அவுத்து விட்ட குதிரைபோல.

220. அவிழ்த்து விட்ட ஆட்டு மந்தை போல.

221. அவுத்துப் போட்டுட்டு ஆடறவன் மத்தியிலே அரைத்துணி உடுத்தறவன் பைத்தியம்.

222. அவன் சொன்னதே சட்டம், இட்டதே பிச்சை.

223. அவன் உப்பைத்தின்னு வளர்ந்தவன் தானே.

224. அவன் சரியான ஆள்காட்டி.

200. अन्तःकरण ही साक्षी है। दिल की गवाही खुदा की गवाही।

201. उसके पौ बारह। क्या नसीब मूते तो जले दिया?

202. बेसब्री में खुला दरवाज़ा भी ठोकर देगा।

203. अदल का बदला।

204. जल्दबाज। चक्कर पैर में और खुजली हाथ में, कोई काम बने न साथ में।

205. जल्दबाजी में खुद की हानि।

206. बेसब्री हिमाकत है। सब खोया, सदा खोया।

207. घरकी गरीबी को जमाने की नजरों में न चढाओ।

208. उसके हिसाब - किताब में भूल-चूक ?

209. उसका बेटा बलवान है। अंगद उसका बेटा है

210. कहीं पे निगाहें, कहीं पे निशाना।

211. उसकी फूटी-कौड़ी उसी के दामन में।

212. इतना बड़ा हाथी और ये छोटी आँखें।

213. उसको क्या हर आन खुशी। झुल्फ फैले जाल सा, छूएं ज़मीन को

214. बेचारा हमेशा सीढी सा, चढ़ाये दूसरों को।

215. वह तो रंगा-सियार है।

216. वह झाड़ का अंकुर सा।

217. जैसे उछलता बछड़ा।

218. वेश्या चाहे मंगलसूत्र।

219. बेलगाम घोड़े-सा।

220. भटकती ढोर-सी।

221. नंगों के बीच में लंगोटिया सयाना नहीं।

222. उसकी बात कमान, उसकी भीख वरदान।

223. उसका नमक खाया है। उसकी लौनी से निकला पुतला सा।

224. वह बराबर भेदिया है। चुगलखोरी में माहिर।

225. அவனுக்குத் தெரியாமல் இவனுக்கும், இவனுக்குத் தெரியாமல் அவனுக்கும், எவனுக்கும் எதுவுமே தெரியாமல் எல்லோருக்கும் தண்ணி காட்டறவன்.

226. அவிட்டத்துப் பெண், தொட்டதெல்லாம் பொன்.

227. அவனவன் விதைத்ததை அவனவன் அறுப்பான்.

228. அதுவீடா, குருவிக் கூடுன்னா அது.

229. அவுத்து விட்ட கோவில் காளை போல.

230. அழகுக்கு அழகு செஞ்சாப் போல.

231. அழகுக்கு இட்டா ஆபத்துக்குதவும்.

232. அழகு இருக்கு அரசாள, அதிர்ஷ்டம் இருக்கு மாடு மேய்க்க.

233. அழிந்த கொல்லையில் ஆனை மேய்ந்தால் என்ன, குதிரை மேய்ந்தாலென்ன?

234. அழைத்தவருக்கு ஆதிமூலம், அழையாதவர்க்கு நிர்மூலம்.

235. அழையாதார் தலைவாசல் மிதியாதே.

236. அழையாத வீட்டில் நுழையாத விருந்தாளி.

237. அழ அழச் சொல்லுவா தன் மனுஷா, சிரிக்க சிரிக்க சொல்லுவா ஊர் மனுஷா.

238. அழுதாலும் பிள்ளை அவள்தானே பெறணும்.

239. அழற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டறாப்போல.

240. அழுத பிள்ளை பால் குடிக்கும்.

241. அழகாய் மலர்வது விரைவில் வாடும்.

242. அழுதால் துக்கம், சொன்னால் வெட்கம்.

243. அள்ளாம குறையாது, இல்லாம புகையாது.

244. அளகாபுரியிலும் விறகு தலையன் உண்டு.

245. அள்ளிக் குடிக்கத் தண்ணியில்லை, அவள் பெயர் கங்காதேவி.

246. அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம் போல.

247. அள்ளித்தெளிச்ச அலங்கோலம்.

248. அளவோடு பெற்றால் வளமோடு வாழலாம்.

249. அளக்கிற நாழி அகவிலை அறியுமா.

250. அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் விஷம்.

225. इसको, उसको, सबको ठेंगा दिखानेवाला।

226. सितारा बुलंद तो सोने का स्पर्श।

227. जो बोया सो काटा। रीपे बिरवा आक का आम कहाँ ते होय?

228. वह घर नहीं, घोंसला है।

229. जैसे शिवजी का वृषभ। कौन रोके, कौन थामे?

230. सुन्दरता को क्यों अलंकार।

231. गहने पहने समय पर काम आये।

232. रूप तो राजा बनने लायक, काम गधा चराने का।

233. उजडे बाग में हाथी चरे या घोडा?

234. बुलाये तो भगवान का सहारा, चुप रहे तो सर्वसंहार।

235. तुलसी तहाँ न जाइए, कंचन बरसे मेघ। तिथि नहीं तो अतिथि न बने।

236. अमी पियावत मान बिन, रहिमन मोहि न सुहाय।

237. अपने सुधारे आंसू की धारे पड़ोसी सुधारे मज़ाक के सहारे।

238. अपना काम खुद ही तो करना है।

239. ज्यों रोते बच्चे को मिठाई दिखाये।

240. मुँह खोलो, काम बनेगा।

241. खिलते हैं गुल यहाँ, खिलके मुरझाने को।

242. न कहते बना, न सहते बना।

243. जहाँ धुआँ वहाँ आग।

244. कुबेर की नगरी में भी दो-एक भिखारी होंगे।

245. आँख का अंधा, नाम नयन सुख।

246. कभी न हो खाली, अक्षय पात्र जैसा।

247. बिखरी बात, बिगड़ी बात।

248. बस दो चार, उम्र भर सुख भरा संसार।

249. घर बंधा बुद्धू बाज़ार का भाव क्या जाने।

250. अधिक हो तो हर कहीं बाधा।

251. அள்ளித்துள்ளி அரிவாள் மணையில் விழுந்தானாம்.

252. அள்ளப் போனாலும் அதிர்ஷ்டம் வேணும்.

253. அள்ளிக் கொண்டு போகறச்சே, கிள்ளிக் கொண்டு வருகிறான்.

254. அளவற்ற செல்லவம் உடையவர்களுக்கு அளவற்ற தேவைகளுமுண்டு.

255. அளவான சாப்பாடு ஆயுள் நீட்டிப்பு.

256. அற்பனுக்கு பவுசு வந்தா அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.

257. அற்பர் சிநேகிதம் பிராண சங்கடம்.

258. அறப்படித்தவன் அங்காடி போனால் விற்கவும் மாட்டான் வாங்கவும் மாட்டான்.

259. அறம் கெட்ட நெஞ்சு நிறம் கெட்டு அழியும்.

260. அறக்கப்பறக்க பாடுபட்டாலும் படுக்கப் பாய் இல்லை.

261. அறியாத ஊருக்குப் புரியாத வழி காட்டினாப்போல.

262. அறிந்தவர் பேசுவதில்லை பேசுவோர் அறிந்ததில்லை.

263. அறிந்து அறிந்து செய்த பாவத்தை அழுது அழுது தொலைக்க வேண்டும்.

264. அறிவு உடையார் ஆவது அறிவார்.

265. அறியாவிட்டால் அசலைப் பார், தெரியா விட்டால் தெருவைப் பார்.

266. அறிவாளிகளின் கூட்டம் உயிருள்ள நூல் நிலையம்.

267. அறிவற்ற நண்பனை சேர்வதை விட, அறிவுள்ள விரோதியை அடைவது மேல்.

268. அறிவும், ஒழுக்கமும் வாழ்க்கை வண்டியின் இருசக்கரங்கள்.

269. அறுந்த செருப்பு காலுக்கு உதவாது.

270. அறுந்த கைக்கு சுண்ணாம்பு கொடுக்க மாட்டானே.

271. அறுபதும் இருபதும் ஒண்ணாகுமா?

272. அறுப்பு காலத்தில் எலிக்கு ஜாலி.

273. அறுவடை காலத்தில் எலிக்கும் ஐந்து பெண்சாதியாம்.

274. அறப்படித்த பூனை காலிப் பானையில் தலையை விடும்.

275. அறையில் ஆடி அம்பலத்தில் ஆட வேண்டும்.

276. அறையில் நடப்பதையெல்லாம் அம்பலத்துக்கு கொண்டு வரலாமோ?

251. उछल - कूद कर गले में फाँसी।

252. भीख माँगने के लिए भी किस्मत चाहिये।

253. लूट मची है, थोडा तुम भी ले लो।

254. बेशुमार दौलत, बेशुमार जरूरत।

255. कम खाओ, उम्र बढाओ।

256. रंक बने राजा, तो छत्र धरे रात भर।

257. नीच संगत, प्राण संकट।

258. भोंदू बाज़ार गया न बेचा न खरीदा।

259. अधार्मिक मन आत्मघात समान।

260. जी तोड मेहनत की, पर भर पेट भोजन नहीं मिला।

261. न जान न पहचान, कहे यही सही।

262. जो जाने बोले ना, जो बोले जाने ना।

263. जान कर करे पाप, रो-धोकर करे माफ़।

264. ज्ञानी कल की जाने।

265. ज्ञान न हो तो मूल देखना, पहचान न हो तो पडोस से परखना।

266. ज्ञानी का संग जीवित पोथी समान।

267. नादान दोस्त से, दाना दुश्मन बेहतर।

268. जीवन गाड़ी के दो पहिये ज्ञान और आचरण।

269. फ़ीता नहीं तो जूता क्या?

270. इतना कंजूस कि थूक भी निगल जाये।

271. साठ और बीस में नाता क्या?

272. फसल कटे तो चूहों का बाजार गरम।

273. फसल कटे तो हर चूहे की पांच चुहिया।

274. भूखी बिल्ली खाली घड़ा न छोड़े।

275. मंच पर जाने से पहले, पूरी तैयारी जरूरी है।

276. घर की बात चौपाल पर क्यों?

277. அன்னாடம் காய்ச்சி.

278. அன்னக்காவடி அன்னதானம் செஞ்சாப்போல.

279. அன்ன மயம் பிராண மயம்.

280. அன்னமிட்ட வீட்டிலே கன்னம் வைத்தாப் போல.

281. அன்னம் ஒடுங்கினால், அஞ்சும் ஒடுங்கும்.

282. அன்னப் பிடி வெல்லப் பிடி ஆச்சுது.

283. அன்னாடம் காய்ச்சி விருந்துக்கு அழைத்தாப் போல.

284. அன்னிய மாதர் அவதிக்குதவார்.

285. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறிக.

286. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்.

287. அன்புக்குத் திறக்காத பூட்டே இல்லை.

288. அன்பு ஆட்சி செய்யுமிடத்தில் அச்சமில்லை.

289. அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?

290. அன்ன நடை நடக்கப்போய், தன் நடையும் போச்சாம்.

291. அன்பு என்னும் இழை இருந்தால், அது ஐந்து தலைமுறையும் தாண்டி வரும்.

292. அன்றைய பகைவன் இன்றைய நண்பன்.

293. அன்னக் காவடியும், உஞ்சி விருத்தியும் சம்பந்தி ஆனாப்போல.

294. அனுபவம் பேசுகிறது.

295. அனல்பட்ட மெழுகு போல.

296. அன்றாடம் பிழைப்பே உன்பாடு, என்பாடு.

297. அன்று தின்ன சோறு ஆறு மாதத்திற்கு ஆகுமா?

298. அன்று குடிக்கத் தண்ணியில்லை, ஆனைமேல அம்பாரி வேணுமாம்.

299. அனங்காநல்லூர் ஜல்லிக்கட்டு காளை போல.

300. அஸ்தியில் புளியைக் கரைக்கறது.

277. रोज कमाये, रोज खाये।

278. जैसे भिखारी खिलाये भोज।

279. अन्नमय हो तो प्राणमय होगा।

280. जिस थाली में खाये, उसीमें छेद डाले।

281. खिलाये तो प्यार।

282. खाना मिला एक कौर भी न समाया।

283. खाली हाथ, भेजे पान सुपारी तीन गाँवों में।

284. परायी स्त्री वक्त पर काम न आये।

285. सोई मीत है जो भीर परे ठहराय।

286. प्यार न जाने कोई बंधन।

287. प्यार की चाबी खोल दे सारे कमरे/ इक प्यार की चाभी से खुल जाता है नौ कमरों का ताला।

288. प्यार किया तो डरना क्या?

289. क़िस्मत का लिखा होकर रहेगा।

290. कौवा चले हंस की चाल।

291. प्रेम बंधन जन्म लय का सार है।

292, कल का दुश्मन, आज का दोस्त।

293. बूढ़ा है घोड़ा, लाल है लगाम, कैसी यह जोड़ी मिलाये मोरे राम।

294. अनुभव बोलता है।

295. आँच में पिघलते मोम सा।

296. रोज का चक्कर ही मुश्किल से चलता है।

297. शाम गयी भोज गया।

298. पीने को पानी नहीं, दूध-मलाई की माँग।

299. पछहिया बैल जैसा।

300. बड़ी घबराहट में जिस्म पानी पानी।

301. அங்கயர்கண்ணி கண்ணு வைக்காதேடி.

302. அஷ்டகோணல், அதிலும் ஒட்டகக் கோணல்.

303. அசை போட்டு தின்னுவது மாடு, அசையாமல் தின்னுவது வீடு.

304. அண்டையில் வா என்றால் சண்டைக்கு வருகிறாயே?

305. அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சு.

306. அனுபவம் மெதுவாகத்தான் கற்பிக்கும், தவறுகள் அதற்குரிய செலவுகள்.

307. அன்பு மயமாக இருக்கலாம், ஆனால் அடிமையாயிடக்கூடாது.

308. அனாதைக்குத் தெய்வமேத் துணை.

309. அனுமானுக்குத் தன் பலம் தெரியாது.

310. அனுமான் வாலில் வைச்ச தீ போல.

311. அனுமான் வால் போல நீண்டுண்டே போறது.

312. அங்கிங்கென்னாதபடி, எங்கும் நிறைந்திருப்பவன்.

313. அரிச்சந்திரன் வீட்டுக்கு அண்டை வீடு.

314. அவசர சுறுக்கே, அரிவாள்மனை கருக்கே.

315. அன்று கண்டதை அடுப்பில் போட்டு, ஆக்கினப் பானையைத் தோளில் போட்டுக் கொண்டு திரிவது போல.

316. அப்பாசாமிக்குக் கல்யாணம், அவா அவாத்துலே சாப்பாடு, கொட்டு மேளம் கோவிலிலே, வெற்றிலைப் பாக்கு கடையிலே, சுண்ணாம்பு சூளையிலே.

317. அறுகம் கட்டையும் ஆபத்துக்குதவும் / சிறு துரும்பும் பல்குத்த உதவும்

318. அற்பத்துடப்பமானாலும் உள் தூசியை அடக்கும்.

319. அக்காள் இருக்கிற வரையில் மச்சான் உறவு.

320. அடியிற்றால் நுனி விழாமலிருக்குமா?

321. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச்சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராகு.

322. அஷ்டமத்துச் சனி பிடித்தது, புட்டத்துத் துணியும் உரித்துக் கொண்டது.

323. அரிசிக்குத்தக்க உலையும், ஆம்படையானுக்குத்தக்க வீராப்பும்.

301. बुरी नजरवाले तेरा मुँह काला।

302. ऊँट की पीठ-सा।

303. गाय खाये थोड़ा, घर खाये सब कुछ।

304. साथ बुलाया तो हाथापाई करने लगे।

305. जिनसे डरना है, उनसे डरो।

306. अनुभव सिखाये धीरे-धीरे, गलती सुधरे साथ-साथ।

307. प्यार सही, गुलामी नहीं।

308. अनाथ का नाथ एकनाथ।

309. बजरंगबली जाने न अपना बल।

310. कपिराज की पूंछ की आग सी।

311. हनुमान की पूंछ-सा बढ़ता जाता है।

312. यत्र-तत्र सर्वत्र विद्यमान।

313. यह तो हरिश्चन्द्र का पड़ोसी है।

314. तेज क्या कहें, ज्यों तलवार की धार।

315. रोज की चक्की, रोज का आरा।

316. शंभु की शादी, अपने अपने आंगन में भोजन, मन्दिर में शहनाई, दूकान में पान सुपारी।

317. छोटी सूई पाट दे खाई।

318. बेकार झाड़ू भी धूल करे दूर।

319. जब तक भाभी तब तक रिश्ता।

320. मूल कटे तो टहनी गिरेगी ही।

321. जिसकी क़िस्मत खोटी उसकी फ़ट गयी लंगोटी।
जिसकी क़िस्मत तगड़ी उसके सिरपर पगड़ी।

322. खोटे ग्रह जांघिया उतार दे।

323. चावल के बराबर हांडी, पति की तबीयत के बराबर मस्ती।

324. அன்பே பிரதானம், அதுவே வெகுமானம்.

325. அளகேசன் (குபேரன்) ஆனாலும் அளவு அறிந்து செலவு செய்யணும்.

326. அக்கிரமமான ஊரில் கொதிக்கிற மீனும் சிரிக்குமாம்.

327. அரிசி என்று அள்ளிப் பார்ப்பாருமில்லை, உமி என்று ஊதிப் பார்ப்பாருமில்லை.

328. அதிசயமான ரம்பை, அரிசி கொட்டுகிற தொம்பை.

329. அழகிலே பிறந்த பவளக் கொடி.

330. அரைக்காசை ஆயிரம் பொன்னாக்குகிறவளும் பெண், ஆயிரம் பொன்னை அரைக்காசாக்குகிறவளும் பெண்.

331. அரிசி பகையும், ஆம்படையான் பகையும் உண்டா?

324. प्यार के ज्वार से कौन बड़ा पुरस्कार। इश्क में उभरा ज़न्नत में उतरा।

325. आमदनी अठन्नी, खर्चा रुपया, लुट जाये राजा सुनो मेरे भैया।

326. अन्धेर नगरी चौपट राजा, कायदा नहीं, फ़ायदा नहीं।

327. जजमान बहते पानी में - किंकर न इधर न उधर।

328. क्या खूब यह चेहरा, देखने से पहले आंखें बन्द।

329. सुन्दरता की जीती प्रतिमा।

330. कौड़ी को नारी बना दे करोड़ी, करोड़ी को वही बना दे कौड़ी।

331. भोजन से क्या दुश्मनी, भर्ता से क्या अनमनी?

# ஆ

1. ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கலையாம்.

2. ஆக்கிப்பெருக்கி அரசாள வைத்தேன், தேய்த்துப் பெருக்கி திரிசமன் பண்ணாதே.

3. ஆகாசக் கோட்டைக்கட்டி அதில் வாழப் போகுமோ?

4. ஆகாசத்தைப் பார்த்துத் துப்பினால் அது மேலே தானே விழும்.

5. ஆகாசத்துக்கு வழி எங்கே என்றால் போகிறவன் தலைக்கு மேலே என்றானாம்.

6. ஆகாயத்தில் எரிந்தால் அங்கேயே நிற்குமா?

7. ஆகாத பொண்டாட்டி கைப்பட்டாக் குத்தம், கால் பட்டாக் குத்தம்.

8. ஆகும் காலம் வந்தால் தேங்காய்க்குள் இளநீர் தானே சேரும்.

9. ஆகும் காய் பிஞ்சிலேத் தெரியும்.

10. ஆங் காலம் (ஆகும் காலம்) ஆகும்; போங் காலம் (போகும் காலம்) போகும்.

11. ஆங்காரம் பிடிச்ச ஆம்படையாள் (மனைவி) ஆத்துக்காரனையே (கணவன்) முழுங்கினாப் போல.

12. ஆ(பசு) வேறு நிறமாயின் பால் நிறம் மாறுமோ?

13. ஆகாயத்தில் கோட்டை கட்டி, அந்தரத்தில் பந்தல் போட்டுடுவானே.

14. ஆச்சரியமும், அற்புதமும் ஒருவாரத்துக்குத்தான்.

15. ஆச்சானுக்குப் பீச்சான், மதனிக்கு உடன் பிறந்தான்.

16. ஆசை இருக்கு தாசில் பண்ண, அதிர்ஷ்டமிருக்கு மாடு / கழுதை மேய்க்க.

17. ஆசைப்பட்ட பண்டம் ஊசிப்போச்சு.

18. ஆசை நோய்க்கு அமிழ்தம் (அமிர்தம்) பலிக்குமா?

19. ஆசைக்கு அளவுண்டோ?

20. ஆசை வெட்கம் அறியாது.

21. ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள்.

22. ஆசையிலே மண் விழுந்தால் போல.

1. उम्र भर करता रहा इंतजार, सब्र नहीं और जरा इंतजार।

2. बड़ी कोशिश से बढ़ाया, बेसबर हो मिटा न देना।

3. हवाई किला बनाकर कोई रहे कैसे उसमें?

4. आसमान पर थूको तो मुँह पर गिरेगा ही।

5. कहाँ तेरी गुज़र? जिधर तेरी गुज़र!

6. आसमान में फेंका तो वहाँ चिपकेगा क्या?

7. पसन्द नहीं तो हर बात ग़लत।

8. वक्त आया तो हर काम बनेगा।

9. होनहार बिरवान के होत चीकने पात।

10. आये तो आये, गये तो गये।

11. रानी रूठे तो राजा खडे बाज़ार।

12. गाय कजरी पर दूध सफेद ही।

13. हवाई किला और वहीं बना शामियाना।

14. अचरज की सांस, बस सप्ताह भर।

15. सारे रिश्ते गोरखधंधे।

16. आँखें आसमान में, पैर कीचड़ में। नाम बड़े पर दर्शन थोडें।

17. पसंद की चीज़ बेकार गयी।

18. इच्छा की प्यास अमृत भी बुझा न पाये।

19. एक दिल, लाख अरमान।

20. लाज छोड़ो, मौज मनाओ।

21. प्यार की प्यास, बुझते देर नहीं।

22. सारे अरमानों पर पानी फेर गया।

23. ஆசைக்கு இல்லை அளவென்ற எல்லை.

24. ஆசைக்கும் உண்டோ அடைக்கும் தாழ்.

25. ஆசை இருக்கு ஆனை மேல் ஏற, அம்சம் இருக்கு கழுதை மேய்க்க.

26. ஆசை அறிவை வென்றுவிடும்.

27. ஆசை பேராசையானால் கிட்டினதும் கை நழுவிப் போயிடும்.

28. ஆசை உள்ள மட்டும் அலைச்சலும் உண்டு.

29. ஆகிறது அரைக்காசில் ஆகும், ஆகாதது ஆயிரம் பொன்னாலும் ஆகாது.

30. ஆட்டம் போட்ட வீட்டுக்கு விட்டம் ஒரு கேடா?

31. ஆட்டம் காலி, படுதாமிச்சம்.

32. ஆட்டம் முடிந்த கூடத்து மேடை போல.

33. ஆட்டுக்குத் தோற்குமா கிழப் புலி.

34. ஆட்டக்காரிக்கு வாய் பெரிசு, அஞ்சாறு அரிசிக்கு கொதி பெரிசு.

35. ஆட்டாளுக்கு ஒரு மோட்டாளம், மோட்டாளுக்கு ஒரு மொண்டிக்குதிரையாம்.

36. ஆட்டைக்கடிச்சி, மாட்டைக்கடிச்சி, மனுஷனையே கடிக்க ஆரம்பிச்சுடுத்து

37. ஆட்டுக் குட்டியா அடங்கிட்டான்.

38. ஆடு நனையறதேன்னு ஓநாய் அழுத்தாம்.

39. ஆட்டுக்குத்தாடி போல, ஒப்புக்கு ஒரு பதவி.

40. ஆடு கட்ட இடமில்லை, ஆனைவாங்கப் போறானாம்.

41. ஆடு பிடிக்கப் போய் ஒநாயிடம் அகப்பட்டுக்கொண்டாப்போல.

42. ஆடுலேயும் ஆடு, சரியான செம்மறியாடு.

43. ஆட்டுக்கு வேகம் பள்ளத்தில், ஆனைக்கு வேகம் மேட்டில்.

44. ஆடு வெட்டி சாமி கும்பிட்டு, கோழி வெட்டி கூர்மா போட்டானாம்.

45. ஆடுதின்னால் அழகு, மாடுதின்னால் மட்டமா?

46. ஆடு அடித்தால் அந்தப்பக்கம், அகப்பைத் தட்டினால் இந்தப் பக்கம்.

47. ஆடு மேச்சாப்போலேயும் ஆச்சு; அண்ணனுக்குப்பொண்ணு பார்த்தால் போலேயும் ஆச்சு.

23. इच्छा की कहाँ सीमा?

24. अरमान पर लगाम कहाँ?

25. गांठ में एक पैसा। ढेर सारी इच्छा।

26. इच्छा बुद्धि को चाट जायेगी।

27. अरमान लालसा बने तो हाथ का भी छूट जायेगा।

28. इच्छा बड़ी, परेशानी बड़ी।

29. बनना है तो पल भर में, वरना युग गुजर जायेगा।

30. खंडहर के लिए वितान क्यों?

31. खेल खतम, परदा लटका।

32. नाटक के बाद के रंगमंच सा।

33. बकरे से हारता नहीं बूढा बाघ भी।

34. मुँहजोर तवायफ़, पुरजोर चावल।

35. नौकर का चाकर, चाकर का टट्टू।

36. इधर स्वाहा, उधर स्वाहा, जहाँ देखो वहां स्वाहा।

37. मेमने की तरफ चुप हो गया।

38. बकरी भीगे और सियार की आँखों में आँसू।

39. अजागल स्तन-सा बेकार।

40. बकरी के लिए जगह नहीं, हाथी खरीदने गया।

41. आसमान से टपका, खजूर पे अटका।

42. भेड़ तो भेड़, सर फिरा भेड़।

43. बकरी की ताकत खाई में, हाथी की ताकत चढ़ाव में।

44. भोज चाहे तो देवी के लिए बकरी काटे।

45. बकरी खाये तो सही, गाय खाये तो खराब क्या?

46. बकरी मारे भरपेट खाये, कुछ नहीं तो यों ही सोये।

47. बकरी भी चराया और भाभी को भी ढूँढ लिया।

48. ஆட்டுக்கு வால் அளந்துதான் வைச்சிருக்கான்.

49. ஆட்டைத்தூக்கி மாட்டிலே போட்டு, மாட்டைத்தூக்கி மந்தையிலே போகுங்கற கதையாயிருக்கு.

50. ஆடும் காலம் தலைகீழாக விழுந்தாலும் கூடும் புசிப்புத்தான் கூடும்.

51. ஆடாதது எல்லாம் ஆடி அவரைக் காயும் பறிச்சாச்சு.

52. ஆடி செவ்வாய் நாடி பிடித்தால் தேடிய கணவன் ஓடியே வருவான்.

53. ஆடிப்பட்டம் தேடிவிதை.

54. ஆடிக்கு ஒரு நாள், அமாவாசைக்கு ஒரு நாள்.

55. ஆடிக்காத்திலே அம்மியும் குழவியும் பறக்கறச்சே இலவம் பஞ்சு எம்மாத்திரம்.

56. ஆடி கழிஞ்ச ஐந்தாம் நாள் கோழி அடிச்சிக்கும்பிட்டானாம்.

57. ஆடி ஆடி ஓய்ஞ்சாச்சு.

58. ஆடி களைச்சி அடங்கிட்டான்.

59. ஆடின ஆட்டம் கொஞ்சமா நஞ்சமா, அதுக்கெல்லாம் அனுபவிச்சித்தானே ஆகணும்.

60. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.

61. ஆடை பாதி, ஆள் பாதி.

62. ஆடிக் கண்டகாலும், பாடிக்கண்ட வாயும் சும்மாவா இருக்கும் !

63. ஆடத்தெரியாதவ முத்தம் கோணல் என்றாளாம்.

64. ஆடறமாட்டை ஆடிக் கற பாடறமாட்டைப் பாடிக் கற.

65. ஆடி ஓடி நாடியில் அடங்கிப் போச்சு.

66. ஆண்டிபெத்தது அஞ்சும் குரங்கு / ஆண்டிப் பெத்தது அத்தனையும் அவலம்.

67. ஆண்டி பூனை வளர்த்த கதை போல.

68. ஆண்டி கோமணத்திற்காக குடும்பம் வளர்த்தால் போல.

69. ஆண்டி மகன் ஆண்டியானால் நேரமறிந்து சங்கு ஊதுவான்.

70. ஆண்டி மடம் கட்டின கதையாச்சு.

71. ஆண்ட பொருளை அறியாதார் செய்தவம் மாண்ட மரத்திற்கு அணைத்த மண்.

48. बकरी की पूंछ माप कर ही है।

49. इधर का माल इधर, उधर का माल घोटाला।

50. दौडदौडाकर पैर थके, वही मिला जो लिखा था।

51. उछल-कूद करके काम बना लिया।

52. परख और पहचान हो तो पति परमेश्वर आयेगा ही।

53. सही समय पर सही काम।

54. ईद का चाँद। गूलर का फूल।

55. बडे बडों की हस्ती नहीं तो तिनके की पूछे कौन?

56. अब पछताए होत क्या, चिड़िया चुग गयी खेत।
हाथी बह जाए और गधा पूछे कितना पानी?

57. अब मैं नाच्चो बहुत गोपाल।

58. थका-माँदा सुस्त पड़ा।

59. किये को भोगना ही पडेगा।

60. अच्छे कपड़े न हो तो शख्सियत आधी हो। वस्त्र से बडा अस्त्र नहीं।

61. आधी खूबी कपडों की, आधी खूबी आदमी की।

62. नाचते पैर और गाता गला खामोश रहे कैसे?

63. नाच न जाने कहे आँगन टेढ़ा।

64. जिससे बने काम तैसा करे उपाय।

65. क्या खेला खूब तमाशा था अब सब कुछ है खामोश।

66. साधु के पाँचों बच्चे बेकार।

67. जैसे बिल्ली पाले साधु महाशय।

68. कौपीन के लिए परिवार बसाये साधु सा।

69. करत करत अभ्यास तें जडमति होत सुजान।

70. ठुड्डी की चाल पर कब बनते मकान।

71. अनजान की करनी बेकार की भरनी।

72. ஆணவம் ஆளைக்கொல்லும் ஆத்திரம், அறிவைக் கொல்லும்.

73. ஆணி அடிச்சாப்போல.

74. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ.

75. ஆண்டிக்கு இந்த மடம் இல்லைன்னா, சந்தை மடம்.

76. ஆணுக்குப் பெருமை பெண்ணாலே.

77. ஆணும் பெண்ணும் வாழ்க்கை வண்டியின் இரு சக்கரங்கள்.

78. ஆணுக்குப் பெண் சளைத்தவன் அல்ல.

79. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.

80. ஆத்து நிறையத் தண்ணிபோனாலும், நாய் நக்கித்தானே குடிச்சாகணும்.

81. ஆத்து மீனும் குளத்து மீனும் ஒண்ணாகுமா?

82. ஆத்திலே போட்டாலும் அளந்துதான் போடணும்.

83. ஆத்திலேக் கரைச்ச பெருங்காயம் போல.

84. ஆத்து நீரை வெள்ளமா கொண்டு போயிடும்.

85. ஆத்தோடத்தண்ணி போனாலும் அள்ளித்தானேக் குடிக்க முடியும்.

86. ஆத்திரமுடையான் கோத்திரமறியான்.

87. ஆத்தமாட்டாதவனுக்கு ஆயிரத்தெட்டு பொன்னரிவாளாம்.

88. ஆத்தோரத்து அரசமரம் போல.

89. ஆத்திலே ஒரு கால் சேத்திலே ஒரு கால்.

90. ஆத்துமணலை எண்ணினாலும் எண்ணிப்புடலாம் அவனாசையை எண்ண முடியுமோ.

91. ஆத்திலே முங்கி முங்கிக்குளிச்சாலும் போற பாவம் தானே போகும்.

92. ஆத்து மணலை எண்ண முடியுமோ.

93. ஆதாயம் இன்றி ஆற்றைக்கட்டி இறைப்பானோ.

94. ஆதாயம் இல்லாம செட்டி ஆதன் ஆத்தோடப் போவானா?

95. ஆத்து நிறையத் தண்ணிப் போறச்சே அள்ளிக்குடிச்சா குறையப் போறதா, மொண்டு குடிச்சாத் தெரியப்போறதா?

96. ஆத்தோரத்துப் பிள்ளையார் போல.

97. ஆதியும் அந்தமும் இல்லாதது.

72. अहंकार मारे आदमी को, क्रोध मारे बुद्धि को।

73. पत्थर की लकीर सा। गढा खूंटा सा।

74. जो गुज़र गये उनपर आँसू बहाना बेकार। लाख बहाये आंसू, गये नहीं लौटते।

75. साधु बाबा कभी इधर कभी उधर।

76. शौहर की शान बीवी की बान से।

77. नर-नारी जीवन गाड़ी के हैं दो पहिये।

78. नारी नर से दो-दो मात्रा भारी।

79. क्रोधी कम अकल का।

80. नदी भर दूध तो भी कुत्ता बस चाटकर पिये।

81. घर का साग, बाजार का साग नहीं बराबर।

82. फेंकना भी, गिन गिन के फेंकना।

83. नदी में घुला दूध सा।

84. घर की चीज़ कौन ले जायेगा।

85. बहते पानी को भी चुल्लू में भरकर ही पीना है।

86. गुस्से में रिश्ते दिखते नहीं।

87. काम न जाने औज़ार से क्या फ़ायदा।

88. जैसे कगार का पेड़ आज ठहरा, कल गिरा।

89. न घर का न घाट का।

90. सितारों का शुमार हो सकता, पर अरमानों का नहीं।

91. गंगा नहाने से पूरा पाप नहीं कटता।

92. नदिया की रेत गिनती कौन करे?

93. बिना फ़ायदे के नदी क्यों उलीचे।

94. बिन फायदा बनिया बिस्तर बांधे क्यों?

95. बहती गंगा में हाथ धोना। लुटते खज़ाने में सब का ठिकाना।

96. जैसे घाट के देवता।

97. न आदि न अन्त। न आगाज़ न अंजाम।

98. ஆந்தைக்கு எது பிடிக்கும், இருட்டுதானே.

99. ஆந்தைபோல பேந்த பேந்த முழிக்கறான்.

100. ஆப்புலே சிக்கிண்ட குரங்கு போல.

101. ஆபத்து சமயம்னா ஒரு ஈ காக்கா கூட உதவாது.

102. ஆபத்துக்கு பாவமில்லை / தோஷமில்லை.

103. ஆபத்துக்குச் சொன்ன பொய் குத்தமாகாது.

104. ஆபத்து வந்தால் உற்ற நண்பனை அறியலாம்.

105. ஆம்படையான் அடிச்சாலும் அடிச்சான், கண்புளிச்சைப் போச்சு.

106. ஆம்படையான் மேலேக் கோவத்தை பிள்ளை மேலே காட்டினானம்.

107. ஆம்பிள்ளையைப் பார்த்து வெட்கப்பட்டு அரைத்துணியை எடுத்து முகத்தை மூடிண்டாளாம்.

108. ஆம்பிள்ளைக்கு ஒரு சட்டம், பொம்பிள்ளைக்கு ஒரு சட்டமா?

109. ஆமணக்கிலே நெய் ஒழுகறதுன்னு சொன்னா கேக்கறவனுக்கு மதி எங்கே போச்சாம்.

110. ஆமாம் சாமி போடறவன்.

111. ஆமை கடிச்சா மருத்துண்டு பொறாமை கடிச்சா மருந்துண்டோ.

112. ஆமை குளத்தைக்கெடுக்கும், ஊமை ஊரைக் கெடுக்கும்.

113. ஆமையும் முயலும் கதைதான்.

114. ஆமை ஜயிச்சி முயல் தோத்தாப் போல.

115. ஆமே (வீடே) கோவில், ஆம்படையானே தெய்வம்.

116. ஆய உபாயம் அறிந்தவன் அரிதல்ல வெல்வது.

117. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்து போதும்.

118. ஆயிரம் காக்கைக்கு ஒரே கல்.

119. ஆயிரம் பட்டும் அவலம் ஆச்சு, கோயிலைக் கட்டியும் குறை ஆச்சு.

120. ஆயிரங் காலத்துப்பயிர்.

121. ஆயிரம் பாட்டுக்கு அடித் தெரியும், நூறுபாட்டுக்கு நுனி தெரியும்.

98. उल्लू को अंधेरा ही पसंद।

99. उल्लू-सा गुटर गुटर देखता है।

100. कीलोत्पाटि वानर-सा।

101. जब बुरा वक़्त आता है, छाया भी जुदा हो जाती है।

102. आफ़त की हालत में दोष कमी क्या देखे।

103. जान बचाने के लिए झूठ भी बोल सकते हैं। जान बचाने सच से छूट।

104. मुसीबत में सच्चे मित्र की पहचान होती है। रहिमन सोई मीत है भीर परे ठहराय।

105. पति ने चपत लगायी, आँखें साफ़ हो गयीं।

106. पति को छोड़ा, बेटे को लताड़ा।

107. शरम की भी हद होती है। लज्जा में लहंगा मुँह पर।

108. कानून क्या मर्द के लिए अलग और औरत के लिए अलग।

109. रेत से तेल निकला, सुननेवाला क्या गधा।

110. जी हुज़ूरी करनेवाला। हाँ जी हाँ जी, बहन नहीं भांजी।

111. जलन का जला कभी न उबरे।

112. तालाब को गंदा करे कछुआ, गाँव को बिगाड़े गूंगा।

113. एक था कछुआ और एक था खरगोश।

114. जैसे कछुआ जीते, खरगोश हारे।

115. घर ही मंदिर, घरवाला ही देवता। पति ही परमेश्वर।

116. होशियार कामयाब हो तो उसमें अचरज क्या?

117. एक सड़ी मछली सारा तालाब गंदा करे।

118. एक कंकड, हजार कौए गायब।

119. कुछ भी करे कोई फ़ायदा नहीं।

120. हजारों सावन की बहार।

121. हर-फन-मौला, पर बेकार। कुछ इधर, कुछ उधर पर सब कुछ कहीं नहीं।

122. ஆயிரம் பேரைக் கொன்னவன் அரை வைத்தியன்.

123. ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் கூடாது.

124. ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணு.

125. ஆயிரம் உளிவாய்ப்பட்டு ஒரு லிங்கம் ஆக வேண்டும்.

126. ஆயிரம் உடையான் அமர்ந்திருப்பான் அரைப் பணம் உடையான் ஆடி விழுவான்.

127. ஆயிரம் காடுகளை உண்டாக்கும் ஆற்றல் ஒரு விதைக்கு உண்டு.

128. ஆயிரம் காக்கைக்குள் ஒரு அன்னப்பட்சி அகப்படுவது போல.

129. ஆயுசு கெட்டியானால் ஔடதம் பலிக்கும்.

130. ஆயிரம் மைல் பயணம் போறதுக்கும் முதலடியை எடுத்து வெச்சுதானே ஆகணும்.

131. ஆயிரம் தலை வாங்கி அபூர்வசிந்தாமணின்னு நினைப்பு.

132. ஆரல் (மதில்) மேல் பூனை அந்தண்டை பாயுமோ, இந்தண்டை பாயுமோ?

133. ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக்கோனே காரியத்தில் கண்வையடாத் தாண்டவக்கோனே.

134. ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது.

135. ஆமை வேகம்.

136. ஆலம் விழுது போல.

137. ஆலும் வேலும் பல்லுக்குறுதி.

138. ஆலமரம் தாழைத்திருந்தால் தானே அதனடியில் உட்கார முடியும்.

139. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

140. ஆலமரம் பழுத்த தென்று, பறவைக்கு யார் சீட்டு அனுப்பினது.

141. ஆலமரத்தைத் தாங்கும் விழுது போல.

142. ஆலை இல்லா ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரை.

143. ஆலைக்கு அகப்பட்ட சோலை கரும்பு போல.

144. ஆலய தரிசனம் பாப விமோசனம்.

145. ஆலய மணி ஓசைபோல.

146. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

122. नीम हकीम, खतरा-ए-जान / वैद्यराज नमस्तुभ्यम् यमराज सहोदरम्।

123. कंचन बरसे मेह, घमंड न करे गेह।

124. एक अच्छा काम, बोलो हजारों झूठ।

125. छेनी से बनती है मूर्ति बस काटते काटते।

126. अधजल गगरी छलकत जाय, भरी गगरिया चुपके जाय।

127. एक बीज अरण्य का आधार।

128. हजार कौओं में से एक हंस सा।

129. जान चोखा तो दवा काम करेगी।

130. हजार कोस का फ़ासला, पहले कदम से शुरु।

131. माने अपने को ज्यों सर्वसंहारी।

132. भित्ती पर बैठी बिल्ली न जाने किस ओर।

133. इशारों पर नाचो पर इरादों पर टिको।

134. घर में कछुआ आये या अदालत का अमीना आये, दोनों बराबर।

135. वाह! कछुए की चाल।

136. जैसे वट की जड जहाँ पडे वहाँ बढे।

137. बबूल की टहनी, दाँत की ताकत/गिरता दाँत देख बबूला रोये।

138. वट फैला हो तो नीचे बैठ सकते हैं।

139. बबूल दाँत की ताकत, गिनती बोल की ताकत।

140. फल पका है, पंछी को कहां से चिट्ठी मिली?

141. ज्यों वट की जड़ पेड़ को थामे।

142. अंधों में काना राजा।

143. चक्की में पिसता ईख-सा।

144. मंदिर के दर्शन, पाप से विमोचन।

145. ज्यों मंदिर की घंटा ध्वनि, सुनि-सुनि मन में रमे राम।

146. मंदिर जाना सदा पुण्य है।

147. ஆலயத்திற்கு அருகிலிருப்பவன் கடைசியில் தான் கடவுளை தரிசிக்க வருவான்.

148. ஆவது அஞ்சிலேத் தெரியும், காய்ப்பது பிஞ்சிலே தெரியும்.

149. ஆவதும் ஆகாததும் அவனவன் அதிர்ஷ்டம்.

150. ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே.

151. ஆவணியில் தாலி கட்ட புரட்டாசியில் பொண்ணு பார்த்தானாம்.

152. ஆழத்தோண்டி புதைச்சாச்சு.

153. ஆழ உழுது அரும்பாடு பட்டாலும், பூமி விளையறதுதான் விளையும்.

154. ஆழ மறியாமல் காலை விடாதே.

155. ஆழ்வார் சாதித்தது ஆயிரம் அம்மையார் சாதித்தது பதினாயிரம்.

156. ஆழி பொங்கினால் ஊழி நிச்சயம்.

157. ஆவும் (பசு) தென்னையும் ஐந்து வருஷத்தில் பலன்தரும்.

158. ஆள் ஆளைக்குத்தும், ஆள்மிடுக்குப் பத்து பேரைக் குத்தும்.

159. ஆள் மெத்தக் கூடினால், மீன் மெத்தப் பிடிக்கலாம்.

160. ஆள் பாதி, ஆடை பாதி.

161. ஆள் அரவம் கேட்டுக் குறுக்குக் கோழி கொக்கரக்கோ என்றால் போல.

162. ஆள் செய்யாததை நாள் செய்யும்.

163. ஆள் கண்டு ஏங்குமாம் ஆலங்காட்டு நரி.

164. ஆளுக்கு ஏத்த ஆசாரமும், ஊருக்கு ஏத்த உபசாரமும்.

165. ஆளைப் பார்த்தால் அழகுதான், ஏரில் கட்டினால் குழுவு தான்.

166. ஆளைப் பார்த்தால் அழகுமலை, வேலையைப் பார்த்தால் குழவு மலை.

167. ஆள் அழகா, துப்பட்டிக்காரா.

168. ஆற்றங்கரையில் நிற்கும் அரசமரம், காத்தடிச்சாலும் போச்சு வெள்ளம் வந்தாலும் போச்சு.

169. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

170. ஆற்றுக்குமிஞ்சி ஹரஹரா போட்டாலும் சோற்றுக்கு மிஞ்சி தான் சொக்கேசன்.

147. मंदिर के पास, भगवान से दूर।

148. होनहार बिरवान के होत चीकने पात।

149. बने - बिगड़े अपनी किस्मत।

150. मारे नारी, तारे नारी।

151. थाम के करे काम तो बने कैसे धाम।

152. गहरा गाड़ दिया।

153. खोदे गहरा, बहे पसीना, फिर भी धरती जितनी धरती उतना देती।

154. सोच समझकर कदम बढ़ाना।

155. बडों ने बहुत किया, पर छोटे ने कमाल कर दिया। बडे मियाँ तो बडे मियाँ, छोटे मियाँ सुबहान अल्लाह।

156. सिंधु उमड़े तो प्रलय ही होगा।

157. गाय और नारियल का पेड़ पाँच साल में फल दे।

158. आदमी बहुत कुछ करे, अक्कड और ज्यादा करे।

159. संघे शक्ति कलौ युगे। एक से एक मिले तो क़तरा बन जाता है दरिया।

160. आदमी की सूरत पहनावे की मूरत में।

161. जकड़ पड़ते ही सिहर पड़ता है।

162. हम करें न करें, वक्त मेहरबान ही है।

163. शहर के पड़ोस का सियार आदमी से घबराता नहीं।

164. जैसा देश वैसा भेष।

165. सुन्दर तो है पर बेकार / काम का न काज का।

166. क्या खूबसूरत समाँ पर बिल्कुल बेकार?

167. कपडे अच्छे, चेहरा सुन्दर।

168. कगारे का पेड़ हवा में गिरे या बहाव में।

169. जाया करो भी तो सोच समझ के।

170. भूखे भजन न होय गोपाल।

171. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.

172. ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால்.

173. ஆற்றில் கரைத்த புளி போல.

174. ஆற்று மணலை எண்ண முடியுமா?

175. ஆற்றுவாருமில்லை, தேற்றுவாருமில்லை.

176. ஆற்றைப் பார்த்தால் அறிவு, இறங்கி நீந்தினால் அனுபவம்.

177. ஆறின புண்ணை ஏன் கிளறிண்டிருக்கே.

178. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.

179. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.

180. ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே தீர்ப்பு.

181. ஆறு நிறையத்தண்ணி போனாலும், நாய்க்கி நக்கி தானே குடிக்க முடியும்.

182. ஆறு கடலை நோக்கி தானே போகும்.

183. ஆறு மாசம் பழுத்தாலும் விளாமரத்தில் வௌவால் சேராது.

184. ஆறுதான் கடலை நாடுமே தவிர, கடல் ஆறை நாடாது.

185. ஆறறிவுடைய பிராணி.

186. ஆறு நிறைந்து வெள்ளம் கரை புரண்டு ஓடினாலும் பாத்திரமளவு தானே நீரை மொள்ள முடியும்.

187. ஆறு பாதி, சோறு பாதி.

188. ஆனது ஆச்சு இது ஆண்டவன் போட்ட முடிச்சு.

189. ஆனியோ கூனியோ என்றானாம்.

190. ஆனான ஆளெல்லாம் தந்தனதா தாளம் போடறச்சே, கோணல் கொம்பு மாடு கொம்பைக் கொம்பை அசைச்சுதாம்.

191. ஆனை ஏறினால் மாவுத்தன் குதிரை ஏறினால் ராவுத்தன்.

192. ஆனைக்குட்டி கொழுக்கவில்லை யென்று உட்கார்ந்து அழுததாம் சிங்கக்குட்டி.

193. ஆனைக்கும் பூனைக்கும் ஈடாகுமா?

194. ஆனைக்கும் பானைக்கும் சரி.

195. ஆனாக்க அந்த மடம், ஆகாட்டி சந்தை மடம்.

171. रेत के लिए मिट्टी पकड़।

172. न घर का, न घाट का / न इधर के रहे न उधर के।

173. नदिया में धुली शक्कर की पोटली सी।

174. रेत को कौन रस्सी बनाये / बीस को कौन अस्सी बनाये।

175. न समझनेवाला न समझानेवाला।

176. बहता पानी देखे तो अच्छा, बेहत्तर तर जाये तो।

177. भरे घाव को क्यों हरा बनाते हो। गड़े मुर्दे क्यों उखाडते हो।

178. मौत तो एक दिन सुनिश्चित है, आज हो या फिर बाद में हो।

179. जो बीत गयी सो बात गयी।

180. नदी चली अपनी राह, राजा चले मन की राह।

181. पहुँच से बढ़कर गिरफ्त कहाँ।

182. नदी बहे सागर की तरफ। आकाशात् पतितं तोयम् गच्छति सागरम्।

183. चाह नहीं तो राह कहाँ?

184. कुआँ प्यासे के पास नहीं जाता।

185. विवेकी समझदार है।

186. जितना समाये उससे ज्यादा कहाँ?

187. आधा तीतर, आधा बटेर।

188. जो भी हुआ राम का खेल।

189. सब अच्छा सगुन है।

190. हाथी बह गये, गधा पूछे कितना पानी।

191. हाथी चढ़े तो माहौत, घोड़ा चढ़े तो सवार।

192. हाथी का बच्चा मोटा नहीं, आँसू बहाये शेर का बच्चा।

193. हाथी और चींटी में है क्या बराबरी?

194. हाथी बराबर साथी कहाँ?

195. बने तो राजा नहीं तो रंक।

196. ஆனாக்க வெள்ளித்திரை, ஆகாட்டி சின்னத்திரை.

197. ஆனா அச்சிலே வாக்கறது, ஆகாட்டி மொடாவுலே வாக்கறது.

198. ஆனை மேலே ஏறினாலும், அம்பலத்திலே இறங்கத்தானே வேணும்.

199. ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

200. ஆனை போனாலும் அடிச்சுவடு போகாது.

201. ஆனை மேயும் காட்டிலே ஆடுமேயவா இடமில்லை.

202. ஆனை மேலப் போறவனை சுண்ணாம்பு கேட்டது போல.

203. ஆனானப்பட்டக் குதிரையெல்லாம், மண்ணைக் கல்லை தின்னுகையில், குருட்டுக் குதிரை கோதுமை ரொட்டிக்கு அழுததாம்.

204. ஆனையைக் கொன்றவன், பூனையை வெல்லமாட்டானா?

205. ஆனையை முழுங்கறவனுக்குப் பூனை சுண்டைக்காய்.

206. ஆனையை வித்வானுக்கும், பூனையைக் குறவனுக்கும் கொடு.

207. ஆனை வேகம் அங்குசத்தால் அடங்கும்.

208. ஆனை தழுவின கையால் ஆட்டுக்குட்டியைத் தழுவுவதா?

209. ஆனை ஏறி திட்டி வாசலில் நுழைவது போல.

210. ஆனை கவரும் பூனைத் திருடும்.

211. ஆனை விழுந்தாலும் குதிரை மட்டம்.

212. ஆனை பசிக்குச் சோளப் பொரி.

213. ஆனைக்கும் அடி சறுக்கும்.

214. ஆத்தாள் அம்மணம், கும்மோணத்தில் கோதானம்.

215. ஆட்டைத் தோளிலே போட்டுண்டு ஊர்முழுக்கத் தேடினானாம்.

216. ஆடி (மாதம்) பழஞ்சோறும், ஆதண்டங்காய் வற்றலும் தேடித் தின்றவனுக்குத் தெய்வ லோகம் கிடைக்கும்.

217. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில், பூனை இருந்த புலம்பி அழுகிறது.

218. ஆனைக்குட்டிப் போடும் என்று நம்பி, லத்தி போட்டது.

219. ஆட்டிலே ஆயிரம், மாட்டிலே ஆயிரம், வீட்டிலே கரண்டி பாலில்லை.

220. ஆக்கி அரைத்துப் போட்டவன் கெட்டவன், வழிகாட்டி அனுப்பினவன் நல்லவன்.

196. बने तो परदे पे, वरना टी.वी. पर।

197. ठीक करे तो ठीक, वरना जो भी करे वह ठीक।

198. हाथी पर चढ़े तो भी मंदिर में उतरना ही पड़ेगा।

199. हाथी चले धीरे धीरे, घंटा ध्वनि पहले सुनायी दे।

200. सर्वे पदा हस्ती पदे निमग्ना।

201. हाथी जहाँ चरे वहाँ बकरी भी चर सकती है।

202. हाथी पर सवार से चूना मांगना।

203. साई भूखा और राई पूछे भर पेट। घोडा खाये घास, गधा मांगे फूस।

204. हाथी को मारा, बिल्ली किस खेत की मूली?

205. हाथी को जो निगले उसके लिए बिल्ली राई।

206. हाथी विद्वान को दो, बिल्ली बंजारे को।

207. हाथी की दौड अंकुश तक ही।

208. हाथी खिलाया अब क्या भेड चराऊँ।

209. हाथी पर से थूका अब घर आऊँ कैसे?

210. हाथ की होशियारी बिल्ली की चोरी।

211. हाथी लेटे भी घोडा बराबर।

212. ऊँट के मुँह में जीरा।

213. हाथी भी कभी-कभी फिसले।

214. माँ भूखी, गाँव में गोदान।

215. हथेली में आँवला और पेड़ चढा तलाश में / गोद में छोरा नगर ढिंढोरा।

216. कलेवा खाये वही जिसकी किस्मत है खरी।

217. जहाँ हाथी चरता था वहाँ खरगोश चिल्लाता।

218. ऊँची दुकान, फीके पकवान।

219. भरी-पूरी गोशाला पीने को एक कटोरी दूध नहीं।

220. जिसने आश्रय दिया वह बुरा, जिसने बिदाई दी वह अच्छा।

221. ஆட்டுக் குட்டிக்கு ஆனையை காவு கொடுக்கிறதா.

222. ஆனையை விற்று பூனைக்கு வைத்தியம் பார்த்தாப் போல.

223. ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரை (சிறுதுளி பெருவெள்ளம்).

224. ஆடு கெட்டவன் ஆடித்திரிவான், கோழி கெட்டவன் கூவித்திரிவான்.

225. ஆடு கடிக்கறதுன்னு, இடையன் உறி ஏறிப் பதுங்கினாப் போல.

226. ஆனை கொழுத்தால் வாழைத் தண்டு, ஆண்பிள்ளைக் கொழுத்தால் கீரைத் தண்டு.

227. ஆனை ஒருகுட்டிப்போட்டாலும் பலனுன்டு, பன்னி பத்துக்குட்டி போட்டும் எதுக்குப்பயன்?

221. दमड़ी फायदा के लिए, करोडों का नुकसान क्यों?

222. जैसे मकान बेचकर घर का किराया दिया।

223. बूंद-बूंद से बनता सागर।

224. बकरी खो गयी तो में में करे, मुरगा खो गया तो बाँग दे।

225. बाबा मेरी बकरी काटे, बचाओ मुझको, बचाओ मुझको।

226. हाथी में मस्ती खाना बन्द जवान मे मस्ती ख़ाना बन्द।

227. हाथी का एक बच्चा, सुअर के सौ बच्चे।

# இ

1. இடையன் கெடுத்தது பாதி, மடையன் கெடுத்தது பாதி.
2. இக்கரைக்கு அக்கரை பச்சை.
3. இக்கரை பாகனுக்கு அக்கரையில் பந்தல்.
4. இகமா பரமான்னு முழிக்கிறான்.
5. இங்கிதம் தெரிந்தால் வாழ்க்கை இனிக்கும்.
6. இங்கிதம் தெரியாதவனுக்கு சங்கீதம் தெரிந்து பயன் என்ன?
7. இஞ்சி தின்ன குரங்கு போல.
8. இடம் மாறி வந்து விட்ட செம்மறி ஆட்டுக்குட்டி போல.
9. இடவப் பாதி மழைதான் இஷ்டத்துக்கு மூடாக்குப் போட்டுக் கொட்டும், புரட்டாசி மேகம் போக்குக் காட்டி ஏய்க்கும்.
10. இடக்கனுக்கு வழி எங்கே? கிடக்கிறவன் தலை மேலே.
11. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும்.
12. இடம் இல்லாத இடத்திலே இளையாளும் பிள்ளைப் பெத்துக்க வந்தாளாம்.
13. இட்டார் பெரியோர், இடாதார் இழிக்குலத்தோர்.
14. இட்டவர்கள் தொட்டவர்கள் கெட்டவர்கள். இப்போது வந்தவர்கள் நல்லவர்கள்.
15. இடம் கிடைச்சான்னா கை ஊன முடியும்.
16. இட்டு ஆளாப் பெண்ணுக்குச் சுட்டாலும் தெரியாது.
17. இட்டுக் கெட்டார் எங்குமில்லை.
18. இட்டவன் இடாவிட்டால் வெட்டுப் பகை.
19. இடிச்ச புளி போல.
20. இடியோசைக் கேட்ட நாகம் போல.
21. இடிக்கிற மேகம் பொழியாது.
22. இட்ட எழுத்துக்கு ஏற ஆசைப்பட்டால் கிடைக்குமா?
23. இட்டதெல்லாம் கொள்ளும் பட்டி மகன் கப்பறை.
24. இடித்தவள் புடைத்தவள் இங்கே இருக்க எட்டிப்பார்த்தவள் கொட்டிக் கொண்டு போனாளாம்.

1. भोला आधा खाये, बुद्धू बाकी खाये।

2. दूर के ढोल सुहाने।

3. इस तट पर तरकारी उस तट पर साझेदारी।

4. इस पार या उस पार, बोलो अब किस पार?

5. समझदारी मिठास की बराबरी।

6. समझदारी न हो तो सरगम गाकर क्या फ़ायदा?

7. बन्दर क्या जाने अदरक का स्वाद।

8. गुमराह मेमने जैसी।

9. सावन भादों में मूसलधार, अश्विन क्वार में बादल बेकार।

10. जहाँ चाह, वहाँ राह। ढीठ चले दूसरों के सिर पर।

11. उँगली पकड़कर पहुँचा पकड़ लेना।

12. चूल्हा खाली, मेहमानों की भीड़। कमरा एक, सौतिन का भी पाँव भारी।

13. दें तो साई, नहीं तो कसाई।

14. साथ दिया साथ रहा करे, अभी जो आये अच्छे।

15. घर न संभाले तो क्या संभाले।

16. जो न जाने देना और खाना, वह न जाने जीना।

17. देना खोना नहीं देना पाना नहीं।

18. सदाव्रत करनेवाला चुप रहे तो हो जाये दुश्मनी।

19. गोबर गणेश-सा।

20. मेघ गरजन सुने साँप सा।

21. गरजते बादल बरसते नहीं।

23. भिखारी की भूख में सब कुछ स्वाहा।

22. किस्मत का लिखा होकर रहेगा।

24. साहू कमाऊ बैठे रहे, चोर लुटेरा उठाके जाय।

25. இடுகிற தெய்வம் எங்கும் இடும்.

26. இடுப்புத்துணி மறந்த மனுசனாட்டமா?

27. இடும்பனுக்கு வழி எங்கே? இருக்கிறவன் தலை மேலே என்றாற் போல.

28. இடுப்பிலே இரண்டு காசு இருந்தால் சுருக்கென்று இரண்டு சொல்வரும்.

29. இடுபவர் பிச்சையை கெடுக்கிறதா?

30. இணங்கினால் தித்திப்பு, பிணங்கினால் கசப்பு.

31. இத்தனை நாள் கைக்கெட்டாத களாக்காய் நாளைக்குப் பறிச்ச வைச்சப் பலாப்பழம்.

32. இத்தனை அத்தனையானால், அத்தனை எத்தனையாகும்?

33. இது என்ன கம்பசூத்திரமா?

34. இது ஆடு புலி ஆட்டம்.

35. இது என்ன கீரி பாம்பு விளையாட்டா இருக்கு.

36. இது குலாசாரம், அது வயிற்றாச்சாரம்.

37. இதயம் உறுதியானால் சுண்டெலியும் யானையைத் தூக்கும்.

38. இந்திராதி தேவர்க்கும் வந்திடும் தீவினை.

39. இந்தப் புல்லுக்குத் தெரியும் இது புல்லாங்குழல் இல்லையென்று.

40. இந்த வீட்டுத்தாம்பாளத்தை நான் இரவல் தரமாட்டேன்.

41. இந்தக் கூழுக்கா இத்தனை திருநாமம்?

42. இந்தப் பூனையும் பால் குடிக்குமா?

43. இந்தக் கைக்கொடுப்பது, அந்த கைக்குத் தெரியக் கூடாது.

44. இந்த அம்மாவாசைக்கும் வெட்கமில்லை, வருகிற அம்மாவாசைக்கும் மானமில்லை.

45. இந்திரனை சந்திரனை இலையாலே மறைப்பாள். எம தர்மராஜனை கையாலே மறைப்பாள்.

46. இப்போதான் விதை போட்டிருக்கு.

47. இமய மலையோடு பரங்கிமலையை ஒப்பிட முடியுமா?

48. இமாலயத்தவறு.

49. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது

25. देनेवाला छप्पर फ़ाड़के देता है।

26. बिलकुल सुध-बुध खोया सा।

27. उद्दण्ड अपनी राह खुद बना लेता है।

28. गाँठ में दाम, बोली कड़ुवी घोली।

29. दान में बढ़ते हाथ को क्यों रोके।

30. माने तो सैया मोरे, न माने तो बैरी।

31. आज का आम, कल का कटहल।

32. मरज़ की क्या दवा है, यह कोई बीमार क्या जाने।

33. यह क्या! ऐसी कमाल की बात!

34. यह बकरी बाघ का खेल सा है।

35. यह क्या साँप नेवले का खेल है।

36. उदर निमित्तं बहुकृत वेषं / पेट भरा और सेठ बना।

37. दिल में ताकत है तो चूहा भी हाथी को कंधों पर उठायेगा।

38. इंद्र हो या चंद्र हो सब पर ललाट का मंत्र है।

39. यह घास जाने कि वह बाँस नहीं, दूब के दम में मुरली कहाँ?

40. अपनी चीज़ कभी उधार नहीं।

41. इस बासी भात के लिए इतनी हलचल।

42. ऐसा बैठा ज्यों बगुला भगत।

43. गुप्त दान महा दान।

44. बेशरमी का मौसम आया तो जाता नहीं।

45. इंद्र, चंद्र और काल को भी इशारे पर वह नचायेगी।

46. अभी अभी बीज बोया है।

47. कहाँ राजा भोज कहाँ गंगू तेली।

48. महामेरु सी भूल।

49. पलकों की गलती पुतली न जाने।

50. இயல்பாய் மணக்காத சந்தனக் கட்டை இழைத்தாலும் மணம் தராது.

51. இரப்பவனுக்கு எங்கும் பஞ்சமேயில்லை.

52. இரட்டைக் குதிரை சவாரியா?

53. இரண்டு கை சேர்ந்தால் தானே ஓசை.

54. இரண்டு கழுதை வயசாகிறது.

55. இரவல் சோறு பஞ்சம் தாங்குமா?

56. இரவல் சீலையை நம்பி, இடுப்பு சீலையை எறிந்தாளாம்.

57. இரவு முழுக்க ராமாயணம் கேட்டுட்டு, சீதைக்கு ராமன் சித்தப்பா என்றானாம்.

58. இரவுக்குள் உறங்கும் சூரியனைப் போல.

59. இரண்டு ஆட்டிலே ஊட்டின குட்டி போல.

60. இரத்த பாசம் விடுமா?

61. இராமன் விட்ட பாணம், திரும்பிப் பார்த்தா காணும்.

62. இருக்கிறதை விட்டு விட்டு பறக்கறதைப் பிடிச்சாப்போல.

63. இருக்கற அன்னிக்கு எருமை மாடு போலத்தின்ன வேண்டியது.

64. இருந்தும் கொடுத்தான் சீதக்காதி, இறந்தும் கொடுத்தான் சீதக்காதி.

65. இராப்பட்டினி கிடந்தவன் உரித்த வாழைப்பபழம் விற்கிறதா என்று விசாரித்தானாம்.

66. இருந்தவன் எழுந்திருக்கிறதுக்குள்ளே, நின்றவன் நெடுந்தூரம்.

67. இருந்தும் கெடுத்தான் இருளாண்டி, செத்தும் கெடுத்தான் இருளாண்டி.

68. இரும்புத் தட்டற இடத்திலே ஈக்கு என்ன வேலை?

69. இருந்தா இந்த மடம், இல்லேன்னா சந்தை மடம்.

70. இரும்புத் தூணைக் கரையான் அரிக்குமோ?

71. இருதலைக் கொள்ளி எறும்பு போல.

72. இருட்டு உள்ளு, குருட்டுப் பெண், சுருட்டுப் பாய்.

73. இருட்டுக் குடி வாழ்க்கைத் திருட்டுக்கு அடையாளம்.

74. இருளன் பிள்ளைக்கு எலிக்குஞ்சு கருப்பா? (பயப்படுதல்)

50. खुद महक नहीं तो घिसने से क्या फायदा?

51. भिखारी को कभी अकाल नहीं।

52. दो घोडों पर सवारी?

53. एक हाथ से कहाँ बजती ताली?

54. दो गधों की उमर।

55. भिक्षा से अकाल नहीं मिटता।

56. उधार के कपड़े पर कमर के कपड़े को फेंक दिया।

57. रात भर रामायण सुना सबेरे राम का भाई रावण कहा।

58. रात में सोता सूरज-सा।

59. ज्यों दो माँ की बच्ची।

60. खून आखिर खून है / खून का रिश्ता कभी न सस्ता।

61. राम का तीर छूटे, फिर न मिले।

62. हाथ का छोड़कर उड़ता पकड़े।

63. तर माल मिले तो भरपेट खाये। मिले तो खाये नहीं तो भूखे।

64. हाथी जिये नौ लाख का या मरे नौ लाख का।

65. रात भर भूखा सबेरे माँगे छिलका उतरा केला।

66. जो ठहरा हारा, और जो चला जीता।

67. पास रहे या दूर रहे काँटा तो काँटा है।

68. नक्कारखाने में तूती की आवाज़।

69. हो तो नवाब, न हो तो फ़कीर।

70. चूहा खा गया लोहा, कौन करे विश्वास?

71. न इधर का, न उधर का।

72. अंधेरा कमरा, अंधी बिल्ली, टूटा मटका।

73. चोरी छिपे जिये तो चोर ही समझेंगे लोग।

74. बिल्ली क्या डरे चूहे से?

75. இருந்தா நவாப் சாஹிப், இல்லாவிட்டால் பகிர் சாஹிப்.

76. இருட்டுக்கு எல்லாம் சரி.

77. இருந்து பணம் கொடுத்து, நடந்து வாங்க வேண்டியிருக்கு.

78. இருந்த இடம் புல்லுமுளைச்சிப் போயாச்சு.

79. இரும்பை இழுக்கிற காந்தம் போல.

80. இருந்தால் ஓணம், இல்லாவிட்டால் ஏகாதசி.

81. இரும்பைத் துரும்பாக்கி, கடுகை மலையாக்கறவன் ஆச்சே.

82. இருக்க சாண் இடம் இல்லாமல் போனாலும் பெருக்கப் பேசுவதில் குறைச்சலில்லை.

83. இரண்டு கண்ணில் எந்த கண்ணில் காயம்?

84. இரண்டு பட்டாலும் சேதம் நமக்குத்தான்.

85. இரை முழுங்கின பாம்பு போல.

86. இரந்து உண்டவன் இருந்து உண்ணான்.

87. இரண்டு வீட்டிலும் கலியாணம், இடையில் செத்ததாம் நாய்க்குட்டி.

88. இரண்டு பெண்டாட்டிக்காரனுக்கு கொண்டை எதற்கு?

89. இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்.

90. இல்லாள் இல்லாத இல்லம் பாழ்.

91. இல்லை என்ற வீட்டில் பல்லியும் சேராது.

92. இல்லாதவன் பேச்சு எடுபடுமா?

93. இல்லாதவன் பொல்லாதவன்.

94. இல்லாள் இசைவாகின் எந்நாளும் நன்னாளே.

95. இல்லாத பிள்ளைக்குப் பேர் வைச்சாப் போல.

96. இலவு காத்தக் கிளி கதையாச்சு.

97. இலக்கணம் கற்றவன், கலக்கமற மன்னன் சபை காண்பான்.

98. இலவம்காய் எக்காலம் பழுக்குமென்று இருந்தேன் பாழும் காய் பஞ்சாய் பறந்துவிட்டது.

99. இலுப்பை சர்க்கரை கொடையாம் துரைகள் மெச்சின நடையாம்.

75. हो तो राजा न हो तो रंक।

76. अंधेरे में सब बराबर, रोशनी नहीं चाशनी नहीं।

77. थोक दिया और एक-एक कर वापस लिया। अथवा वापस आये टुकडे टुकडे बनकर। अथवा पुनरागच्छेत् - खण्डशः।

78. जहाँ दफ़नाया घास उग आयी।

79. लोहे को खींचनेवाला चुंबक जैसा?

80. रहे तो त्योहार न रहे तो रोज़ा।

81. तिल का ताड़ बनानेवाला। वह बोले तो राई बन जाये परबत।

82. फूटी कौड़ी नहीं, बात करे आसमान की।

83. घाव जहाँ भी हो दर्द हमारा है।

84. अलग अलग तो नुकसान हमारा।

85. अजगर भरे ज्यों पेट।

86. भिखारी हमेशा बेसब्र।

87. बेगानी शादी में अब्दुल्ला दीवाना।

88. दो जोरू दोनों तरफ झाडू।

89. दो रानियाँ, कौन बेगम कौन मलका?

90. घरनी नहीं तो घर बरबाद।

91. घर में कुछ नहीं तो छिपकली भी नहीं।

92. भिखारी की बात कौन माने?

93. हाथ खाली तो कहे दुशमन।

94. घरनी अच्छी हो तो हर दिन त्योहार।

95. अभी शादी नहीं हुई तो बच्चे के नाम की क्या फ़िकर?

96. बिल के सामने बैटी बिल्ली, बिल भी खाली बिल्ली का पेट भी खाली।

97. पंडित पहुँचे दरबार। मिला सलामी बारंबार।

98. पाला पोसा बड़ा किया, पंछी बनकर उड़ गया।

99. हाथ में छतरी, ठुमक ठुमक चाल चली।

100. இல்லாத துணிக்கு முடவனை முழம் போடச் சொன்னது போல்.

101. இலை மறைவு காய் போல.

102. இலைகள் அதிகமா இருந்தா பழம் குறைவாய்த்தானிருக்கும்.

103. இவ புள்ளி வைச்சா, அவ கோலமே போட்டுடுவாளே.

104. இழுபறியாத்தானிருக்கு.

105. இழுத்துப் பிடிச்சா அடங்கிப் போயிடும், விட்டாத் தானேத் துள்ளித் திரியும்.

106. இளையாளே வாடி மலையாளம் போவோம், மூத்தாளே வாடி முட்டிக் கொண்டு சாவோம்.

107. இளம் கன்று பயம் அறியாது.

108. இளம் வெய்யலையேக் காணாத நீயா தீப்பாயப் போகிறாய்?

109. இடுகிறவன் தன்னவனானால், அடிப்பந்தியிலிருந்தாலென்ன கடைப்பந்தியிலிருந்தா லென்ன?

110. இளைத்த நேரத்திற்குப் புளித்த மோர்.

111. இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.

112. இளைத்தவனுக்கு எள்ளு, கொழுத்தவனுக்குக் கொள்ளு.

113. இளிச்சவாய் சுப்பன்.

114. இரக்கப் போனாலும் (பிச்சை எடுக்க) சிறக்கப் போ.

115. இறந்தால் போச்சு மூச்சு, மறந்தால் போச்சு காசு.

116. இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்.

117. இறைக்க இறைக்க ஊறும் உற்றுபோல.

118. இறக்கை முத்தி பறவையானா, தன் வயித்தைத் தானே பார்த்துக்கும்.

119. இறந்து போன மனைவி துக்கம், வாசக்கதவோட சரி.

120. இறந்த காலம் கூவி அழைத்தாலும் வாராது.

121. இனம் இனத்தோடுதான் சேரும்.

122. இன்னிக்குப் போனா, நாளைக்கு இரண்டு.

123. இனிப்பாக இருந்தால் முழுங்கிடு, கசப்பாக இருந்தால் துப்பிடு.

100. बूढ़ा है घोड़ा, दूरी बहुत है, कल की मंजिल कैसे पाये?

101. पेड का फल पत्ते के पीछे।

102. पत्ती भरे हैं तो फल थोडे ही होंगे।

103. इसने तो बस पैर उठाया, उसने पूरा नाच दिखाया।

104. खींचातानी का मामला है। खींचातानी गोरखधन्धा काम बन गया गले का फन्दा।

105. बाड़ा डाले तो पड़ा रहे, नहीं तो उछले-कूद।

106. बड़ी पर कड़ी निगरानी, छोटी पर मेहरबानी।

107. जवानी का जोश सहमना क्या जाने।

108. सबेरे की धूप ही जो सह न पायी लू में चलेगी कैसे? धरी धीर धरे मग में डग द्वै।

109. देनेवाला अपना तो कतार में कहीं भी हो परवाह नहीं।

110. थके वक्त पर खट्टा मट्ठा।

111. गरीब की जोरू सब की साली।

112. कमजोर को खिलाओ भुट्ठा, मोटे को बिठाओ भूखा।

113. गाँव का लल्लू।

114. भीख भी शान से माँगो।

115. मरे तो साँस कहाँ, भूले तो पैसा कहाँ?

116. कुएँ का पानी उलीचते उलीचते मीठा, भरे रहे तो गंदा?

117. खोदते खोदते सोता उमड़ेगा। उलीचने पर उमडते सोता सा।

118. पंख लग जाये तो अपनी-अपनी मंजिल।

119. भार्या शोकं पुनः भार्या। बीवी गयी तो नयी बीवी।

120. जो बीत गयी सो बात गयी।

121. जात-जात पे जात।

122. आज मरे तो कल दूसरा दिन।

123. मीठा तो निगल लो, कडुवा तो थूक दो।

124. இன்பமும் துன்பமும், இரவும் பகலும் போல.

125. இனிய நீருள்ள கிணறு காலியாகவே இருக்கும்.

126. இனிப்பும், புளிப்பும், கசப்பும், துவர்ப்புமானதுதான் வாழ்க்கை.

127. இன்றைக்கு இலை அறுத்தவன், நாளைக்கு இலை அறுக்க மாட்டானா?

128. இனிது, இனிது ஏகாந்தம் இனிது.

129. இந்தப் பெருமையையும், பந்தல் அழகையும் பார்த்தாயா பண்ணைக்காரா?

130. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?

124. सुख-दुख, दिन रात-सा।

125. मीठे जल का कुआँ जल्दी रीता हो जाय।

126 जीवन षड्रस है। कभी कडुवा, कभी मीठा, कभी तीखा कभी फ़ीका।

127. आज पत्ती तोड़नेवाला कल फल चुरायेगा।

128. तनहाई की मिठास, सबसे बडी मिठास।

129. हमारी शान जमती जाएगी, देखते जाना।

130. अति विनयम् धूर्त लक्षणम्।

# ஈ

1. ஈ அடிச்சான் காப்பி.
2. ஈக்கும், எறும்புக்கும் என்ன எச்சிலும், துப்பலும்.
3. ஈக்கும், கொசுவுக்கும் எச்சலாவது, தீட்டாவது?
4. ஈக்குத் தெரியுமா எருதின் நோவு.
5. ஈக்கு விஷம் தலையிலே, தேளுக்கு விஷம் கொடுக்கிலே.
6. ஈ அடிச்சவன் கையும், இரும்பு அடிச்சவன் கையும் சும்மா இருக்காது..
7. ஈச்ச மரத்து நிழலில் இளைப்பாற முடியுமோ.
8. ஈசன் அனுமதி இன்றி எறும்பும் ஊறாது.
9. ஈசன் அனுமதியின்றி அணுவும் அசையாது.
10. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் வரை பாயும்.
11. ஈசனருளிந்தால் எதையும் சாதிக்கலாம்.
12. ஈடாகாதவனை எதிர்க்காதே.
13. ஈடுள்ள குடிக்கு கேடில்லை.
14. ஈதான் பலாப்பழத்தைத் தேடி வரணுமேத் தவிர பலாப்பழம் ஈயைத் தேடிண்டு போகாது.
15. ஈத்தோலில் தம்பட்டம் பண்ண முடியுமா?
16. ஈயாத புல்லர் இருந்தென்ன, போய் என்ன?
17. ஈயத்தைப் புடம் போட்டால் வெள்ளியாகுமா?
18. ஈயத்தைப் பார்த்து இளிச்சிதாம் பித்தளை.
19. ஈயார்த் தேட்டைத் தீயார் கொள்வர்.
20. ஈயைப் பிடிச்சி பலாப்பழத்திலே உட்கார்த்தினாப்போல.
21. ஈரம் அற்ற இடத்தில் ஈ மொய்க்குமா?
22. ஈறுபேனாகி, பேன் பெருமாள் ஆனது போல.
23. ஈனவும் தெரியாது, நக்கவும் தெரியாது.
24. ஈரவெங்காயத்திற்கு இருபத்து நாலு புரை எடுக்கறது.
25. ஈடு ஜோடு எங்குமில்லை.
26. ஈட்டுக்கும் பாட்டுக்கும் இருந்தால் எடு குமரி.

1. मक्खी मार नकल। असल की नकल, नकल की भी नकल।
2. मक्खी और चींटी को जूठन क्या, पाटन क्या?
3. मक्खी उड़े गन्दगी पर मच्छर उड़े कीचड़ पर।
4. मक्खी क्या जाने भैंस का दर्द?
5. मक्षिकस्य विषं सिरसि, वृच्छिकस्य विषं पृच्छे।
6. मक्खी मारो या लोहा पीटो, हाथ की खुजली कभी न जाए।
7. बड़ा हुआ तो क्या हुआ जैसे पेड़ खजूर।
8. कण कण में बसा है भगवान, पहचान सके तो पहचान।
9. उसका इशारा हर काम का सहारा।
10. बाप बड़ा न भैया, सबसे बडा रुपैया।
11. जाको राखे साइयाँ मारि सके नहीं कोय।
12. जो नहीं हो तेरे बराबर उससे कभी न लड़ना।
13. समरसता सदा विजयी।
14. प्यासा जाये कुएँ के पास, कुआँ न जाये प्यास के पास।
15. चींटी के चमड़े से ढोलक नहीं मढ़ती।
16. धनी भया तो क्या भया, चींटी को चावल नहीं।
17. तांबे से कुन्दन कैसे बने।
18. कौआ कहे कोयल से, बेटी तुम हो काली।
19. कृपण का पैसा तस्कर लूटे।
20. ज्यों मिठाई पर कोई बिठाये मक्खी।
21. नमी नहीं तो मच्छर मक्खी कहाँ?
22. ज्यों इल्ली बने तितली और तितली बने बिल्ली।
23. न जनना जाने न गिनना जाने (बडा सीधा सादा)।
24. बेकारों के काम के लिए हज़ारों का इशारा।
25. बराबर का जोड़ नहीं।
26. भाड़े का टट्टू सदा सिर हिलाये।

# உ

1. உங்க வீட்டுக்கு வந்தா என்ன தருவே? எங்க வீட்டுக்கு வந்தா என்ன கொண்டு வருவே?
2. உங்களோடு சேர்ந்து உலகம் சிரிக்கும், ஆனா அழவராது.
3. உங்கள் உறவிலே வேகிறதைவிட, ஒரு கட்டு விறகிலே வேகறது மேல்.
4. உச்சாணிக்கிளையிலே உட்கார்ந்தாலும், கீழே இறங்கித்தானே ஆகணும்.
5. உச்சாணிக்கிளையிலே உட்கார்ந்து கொண்டு உண்டைக் கட்டிச் சோறு கேட்கறாப் போல.
6. உசந்து இருக்கற இமயமலையை அண்ணாந்து தானேப் பார்க்கணும்.
7. உச்சந்தலையில் செருப்பால் அடிச்சாப் போல.
8. உஞ்சி விருத்திக்காரனும், அன்னாடம் காய்ச்சியும் சம்பந்தம் பண்ணிண்டாப் போல.
9. உட்கார்ந்தால் அஷ்டமி, நின்னால் நவமி என்பதைப் போல
10. உடல் இரண்டு, உயிர் ஒன்று.
11. உடல் வளர்த்தோர், உயிர் வளர்த்தோர்.
12. உட்கார்ந்தவனைக் கட்டத் துப்பில்லே, ஓடறவனையாக் கட்டப் போறான்.
13. உடைந்த சட்டி உலைக்கு உதவாது.
14. உட்புறத்துக்கு வெளிப்புறம் கண்ணாடி.
15. உடம்பெல்லாம் பூச்சி ஊறுவதைப் போல.
16. உடல்மெச்சப் பால் குடிக்கிறாயா? ஊர் மெச்சப் பால் குடிக்கிறாயா?
17. உடனிருந்தே குழிப் பறிப்பவனாச்சே
18. உட்கார்ந்தவன் காலில் மூதேவி, ஓடுபவன் காலில் சீதேவி
19. உடமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு
20. உட்கார்ந்தாதானே படுக்க முடியும்.
21. உடம்பு எடுத்தவன் எல்லாம் ஓடு எடுத்தான் (பிச்சை)
22. உடையவன் பாராப்பயிர் உருப்படுமா?
23. உடையவன் கால் தடங்கள்தான் வயலுக்கு செழிப்பணிக்கும்
24. உடையவர் அபிஷேகத்துக்கு (நீருக்கு) ஏங்கும் போது லிங்கம் பஞ்சாமிர்தத்துக்கு அழுததாம்.

1. मेहमान बनोगे तो क्या लाओगे, मेज़बान बनोगे तो क्या दोगे?
2. हँसो तो साथ दुनिया हँसेगी, पर अकेले ही रोना पड़ेगा।
3. आपके रिश्ते से चिता बेहतर।
4. चढ़ाई जितनी भी हो, उतरना ही पड़ेगा।
5. फुनगी पर बैठकर भीख माँगना।
6. हिमालय को देखना है तो सर उठाकर ही।
7. जूती खात कपाल।
8. फ़कीर और भिखारी में समधी का रिश्ता।
9. बैठे या खड़े आफ़त में पड़े।
10. एक जान दो जिस्म।
11. खिलानेवाला ही जिलानेवाला।
12. बैठे को पकड़ न पाये, उड़ते को क्या पकड़े?
13. फूटा घड़ा किस काम का।
14. मन का भाव मुख के दर्पण में।
15. जैसे जिस्म पर कीडा रेंगता हो।
16. अपने लिए करते हो या दिखावे के लिए।
17. छिपा दुश्मन। साथ चला, घात किया।
18. बैठकबाज गँवाये, मेहनतकश कमाये।
19. मिल्कियत को एक सलाम, मालिक को सलाम सलाम।
20. लेटने से पहले बैठना चाहिए।
21. आलस्य का अंजाम भीख।
22. खुद न संभालो तो कैसे संभलेगा।
23. खेतवाला खेती पर तो कटी फसल खलिहान भर।
24. मालिक भूखा है तो कुत्ता भूंककर क्या करे?

25. உடையார் வீட்டு மோருக்கு அகப்பை கணக்கென்ன?

26. உடுத்துக் கெட்டான் வெள்ளைக்காரன் உண்டு கெட்டான் சோனகன் (சாயபு).

27. உடுக்கை இழந்தவன் கைபோல், ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.

28. உடுக்காத புடவை பூச்சிக்கு இரை.

29. உடும்புக்கு இரண்டு நாக்கு, உனக்குமா?

30. உடும்புப் பிடி.

31. உடும்பு போனால் போகிறது, கை வந்தால் போதும்.

32. உண்ட உடம்பு உறுதி, உழுத கழனி நெல்லு.

33. உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைக்கறவனாச்சே.

34. உண்ட வயிறு கேட்கும், தின்ற பாக்கு சிவக்கும்.

35. உண்ட வயிற்றுக்குச் சோறும், மொட்டைத் தலைக்கு எண்ணையும் போல.

36. உண்பது நாழி உடுப்பது நாலுமுழம்.

37. உண்டி சுருக்குதல் பெண்டிற்கழகு.

38. உண்ணாமல் ஊரெல்லாம் திரியலாம். உடுத்தாமல் வெளியே கிளம்ப முடியுமோ?

39. உடுத்த சீலை பாம்பாய் கடித்தது போல.

40. உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்.

41. உண்டால் தீருமா பசி? கண்டால் தீருமா பசி.

42. உண்மைக் கண்ணைக் குத்தும்.

43. உண்டு கொழுத்தப் பெருச்சாளி.

44. உண்ணப்படையுண்டு, வெல்லப்படையில்லை.

45. உண்மை ஊரைச் சுற்றுமுன் பொய் உலகத்தைச் சுற்றிவிடும்.

46. உண்மை சொல்லி கெட்டாருமில்லை பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை.

47. உணவே மருந்து, மருந்தே உணவு.

48. உணவே மருந்து, உள்ளமே கோவில்.

25. मटके में मट्ठा है तो पीने में हर्ज़ क्या?

26. गोरे की रईसी कपडों में, पेटू की रईसी भोजन में।

27. मीत वही जो हाथ थामे। दोस्त रास्ते का रहबर।

28. पेटी में बंद साड़ी कीड़ों की भेंट।

29. सांप की दो जीभ, तुम्हारी भी क्या?

30. जकड़-पकड़।

31. बोनस नहीं तो क्या कम से कम पगार तो हो।

32. भोजन ठीक तो तन भरा, मेहनत ठीक तो खेत भरा।

33. जिस थाली में खाये उसी में छेद डाले।

34. पेट फिर फिर मांगे जीभ फिर फिर चाटे।

35. भरे पेट को भोजन और मुडे सिर को तेल सा।

36. खाये मुट्ठी भर और पहने गज भर। मिली दो रोटी पडे रहे गये।

37. कम खाना ज़नाना सुहाना। नारी कम खाये तो स्वस्थ बने रहे।

38. खाली पेट घूम सकते हैं, नंगा बदन कभी नहीं।

39. जैसे आस्तीन का साँप।

40. भोगे नहीं तो बेकार जाये।

41. देखने से भूख मिटे या खाने से।

42. सच कड़वा होता है।

43. पेटू ब्रह्मचारी।

44. खाने को सब तैयार, मरने को एक भी नहीं।

45. सच की पहुँच शहर भर, झूठ की पहुँच दुनिया भर।

46. सच्चा जीते सदा, झूठा हारे सदा।

47. भोजन ही पथ्य, पथ्य ही भोजन।

48. भोजन ही दवा और मन ही मंदिर।

49. உண்டு உறியில் இரு என்றால், உருண்டு தெருவிலே விழுகிறான்.

50. உத்தராயணமென்று உரியைக் கட்டிக்கொண்டு சாகிறதா?

51. உத்தியோகம் புருஷ லட்சணம்.

52. உதடு அசைந்தா ஊரே அசையும்.

53. உதட்டளவிலே உறவு.

54. உதட்டிலேப் புண், மாடு கறக்க முடியலேன்னு சொன்னானாம்.

55. உதடு தேயறதை, உள்ளங்கால் தேயலாம்.

56. உதவாக்கரைப் பிள்ளையை ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் அது ஊர் மேயத்தான் போகும்.

57. உதை உதவறாப் போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்.

58. உதவாததை உதறித்தள்ளு.

59. உத்தமனுக்கும், தப்பிலிக்கும் உடன்படிக்கை வேண்டாம்.

60. உப்பைத் தொட்டுக் கொண்டு உரலையே முழுங்குவான்.

61. உப்பும் தண்ணியும் ஊறிப் போச்சு.

62. உப்பு சப்பில்லாத விஷயம்.

63. உப்பு மிஞ்சினால் தண்ணீர் விடு, தண்ணி மிஞ்சினால் உப்புப்போடு

64. உப்புப் பெறாத சங்கதி

65. உப்பிட்ட வரை உள்ளளவும் நினை

66. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

67. உப்புக்கும் புளிக்கும் ஊரார்க்கையைப் பார்க்கலாமோ

68. உப்புச்சட்டி கூட ஏலம் போயாச்சு

69. உப்புக்குச் சப்பாணி, ஊருக்கு மாங்கொட்டை

70. உப்புத் தின்னவன் தண்ணி குடிச்சிதான் ஆகணும்

71. உப்புப் பெறாத விஷயத்துக்கு ஊரைக் கூட்டறவனாச்சே

72. உப்புக்காரமில்லைன்னாலும், அபகாரமில்லாமலாவது இருக்கணும்

73. உப்புக்காவது உழைக்கணும்.

74. உப்புப் பெறாத விஷயத்துக்கு கண், காது, மூக்கு எல்லாம் வெச்சிடுவானே.

75. உப்புப் போட்டுதானே திங்கறே?

49. भोजन कर बैठता नहीं, दर-दर भटकता है।

50. छींका मक्खन से भरा तो क्या लटककर मरेगा।

51. उद्योगम् पुरुष लक्षणम्।

52. होंठ हिले तो दुनिया हिल जाएगी।

53. मधु तिष्ठति जिह्वाग्रे, हृदये तु हलाहलम्। मुँह में राम बगल में छूरी।

54. हाथ में खुजली पैर नहीं चलता।

55. ज़बान चलाना कम, हाथ चलाओ ज़्यादा।

56. प्यार से पालने पर भी नालायक बेटा काम न आएगा।

57. लातों का भूत बातों से न माने।

58. बात बनती नहीं तो लात मार दो।

59. सन्त और धूर्त में समझौता कैसा?

60. नमक परस कर मूसल निगल जाएगा।

61. नमक पानी मिले तो खल्लास।

62. बेकार की बात।

63. नमक ज्यादा तो पानी मिलाओ पानी ज्यादह तो नमक मिलाओ।

64. नमक के लिए भी काम न आये। ज़रा सी बात।

65. कभी न बनना नमक हराम।

66. बिना नमक भोजन बेकार।

67. नमक, तेल, लकडी के लिए गांव भर में भटके क्यों?

68. नमक का घड़ा भी नीलाम में आ गया।

69. घर का कलेवा गाँव के मंडवे पर?

70. खाया नमक पीया पानी।

71. बेकार खबर, शहर में ढिंढोरा।

72. नमक नहीं तो क्या नमक हराम नहीं होगा।

73. कम-से-कम नमक के लिए काम।

74. बेकार के पर, आसमानी सफर।

75. नमक डालकर ही खाता है न?

76. உப்புத் தொட்டுக் கொண்டு உரலை முழுங்குவான்.

77. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

78. உபாயத்தால் ஆவது பராக்கிரமத்தால் ஆகாது.

79. உயிர் ஊசலாடிண்டு இருக்கு.

80. உயர்வின் விலை பொறுப்புதான்.

81. உயிரும் உடலும் போல.

82. உயிர் போனபின் உடல் ஏன், மணம் போன பின் மலர் ஏன்?

83. உம் என்றாளாம் காமாட்சி, ஒட்டிக்கொண்டாளாம் மீனாட்சி.

84. உரலுக்கு ஒரு பக்கம் இடின்னா, உலக்கைக்கு இரண்டு பக்கமும் இடி.

85. உரல் போய் மத்தளத்துக்கிட்ட முறையிட்டது போல.

86. உரலிலேத்தலையைக் கொடுத்துட்டு உலக்கைக்குப் பயந்தா முடியுமா?

87. உரலும் கொடுத்து, குரலும் போகணுமா?

88. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?

89. உரலுக்கு ஒரு பக்கம் இடின்னா, மத்தள்த்துக்கு இரண்டு பக்கமும் இடி.

90. உரித்த கோழியாட்டமா?

91. உரலுக்குப் புடவை சுத்தினாப் போல.

92. உருண்டு புரண்டாலும் ஒட்டறதுதான் ஒட்டும்.

93. உலக்கையால காதுகுத்தி உரலால் தக்கை போட்டது போல.

94. உலக்கைக் கொழுந்தும், குந்தாணி வேரும்.

95. உலக்கைத் தேய்ந்து உளிப்பிடியானது போல.

96. உலகத்தையேக் கிள்ளிக் கொடுத்தாலும் வேண்டாம்.

97. உலகத்தோடு ஒத்துவாழ்.

98. உலைக்கு முன்னே இலை போடாதே.

99. உலையிலிட்டாத்தானே, வட்டிலில் படைக்க முடியும்.

100. உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூட முடியுமோ?

101. உலர்ந்து போன வயிறுக்கு ஊசச் சோறும் விருந்துதான்.

76. नमक हो तो नारायण को निगलेगा।
77. चिड़िया उड़े अपनी ऊँचाई पर, बाज़ उड़े अपनी ऊँचाई पर।
78. ताकत की पहुँच कम, होशियारी की पहुँच ज़्यादा।
79. पल पल कटती हुई सांस की नाजुक डोरी।
80. ओहदा बडा तो उत्तरदायित्व बड़ा।
81. जिस्म और जान सा। तन में प्राण जैसे।
82. प्राण हीन तन और गंधहीन सुमन में क्या प्रयोजन?
83. हाँ कहे कमला, चिपक जाए विमला।
84. ढोलक को दोनों तरफ़ मार पीट सहनी पडेगी।
85. ओखली ढोलक से करे शिकायत।
86. ओखली में सर दिया तो मूसल से क्या डरना?
87. पैसा देकर दुश्मनी क्यों मोलें?
88. ओखली में फंसा, मूसल से बचे कैसे?
89. ओखली मार खाये एक तरफ, ढोलक मार खाये दोनों त
90. जैस खाल उतरा मुर्गा।
91. ज्यों ओखली पहनी हो साड़ी।
92. नदी बहे दूध की, कुत्ता चाटे जीभ भर ही।
93. ओखली से संभाला और मूसल से मिटाया।
94. मोटा आदमी, मोटी अकल।
95. मूसल घिसकर सूई बनी।
96. कुबेर का ऐश्वर्य भी नहीं चाहिए। दुनिया मुट्ठी में भर जाये तो भी नहीं चाहिए।
97. समाज के साथ चलो, बढते कदम के बनो हमकदम।
98. रसोईघर में खाना कभी न पटकना।
99. आटा गीला बने, तभी रोटी बन सकती है।
100. घरवाले चुप रह सकते हैं, दुनियावाले क्यों चुप हों?
101. भूखे पेट को बासी भात भी भोज है। भूख में किवाड़ पापड़।

102. உலை வைத்த சந்திலே சாறு காய்ச்சுகிறது.

103. உழவு மாடு ஜல்லிக்கட்டுக்கு உதவுமா?

104. உழக்கிலே கிழக்கு மேற்கு.

105. உழக்கு நெல்லுக்கு உழைக்கப் போய், பதக்கு நெல்லை பன்னி தின்னது போல.

106. உழுதவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்.

107. உழுகிறதை விட்டு நழுவறவன், சாமி ஆடினாப்போல.

108. உழுத சேறு காய்ந்தால் உழக்கு நெல் காணாது.

109. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது.

110. உழுகின்ற நாளில் ஊர்த்திரிந்து அறுக்கின்ற நாளில் அறுவாள் கொண்டு போனால் என்ன கிடைக்கும்?

111. உழுகிற மாட்டை நுகத்தால் அடித்தது போல.

112. உழுகின்ற மாடு தொழுவத்தில் நிற்குமா?

113. உழைக்கிற கழுதை என்னிக்கும் உழைச்சிண்டு தானிருக்கும்.

114. உள்ளத்திலே ஒண்ணு, உதட்டிலே ஒண்ணு.

115. உள்ளூரில் பூனை பிடிக்காதவன் அசலூரில் யானைப் பிடிக்கப் போனானாம். உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன் உடையார் பாளையம் போய் உடும்பு பிடிக்கப் போறானா?

116. உள்ளம் வெண்ணை.

117. உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதே.

118. உள்ளங்கையில் போட்டு புறங்கையை நக்கலாமா?

119. உள்ளங்கை நெல்லிக்கனி போல.

120. உள்ளூர் மருமகனும், உழுகிற கடாவும் சரி.

121. உளறிக் கொட்டிக்கிளறி மூடாதே.

122. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்.

123. உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா.

124. உள்ளதை விட்டு விட்டு உயரப் பறப்பதை பிடிச்சானாம்.

125. உள்ளங்கைப் புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?

126. உள்ளதை சொன்னா நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்.

102. बहती गंगा में हाथ धोना।

103. खेत का बैल साँड़ बने कैसे?

104. मुट्ठी भर भोजन में पूरब क्या पश्चिम क्या?

105. थोड़ी कमाई में रही सही खो गयी।

106. किसान का खेत देखो, ग्वाले की गाय।

107. आलसी किसान बनाये हजारों बहाने।

108. मेहनत न करे तो मिले न कुछ।

109. किसान के खाते में जौ भर भी बचता नहीं।

110. खेत जोते बगैर धान कहाँ से मिले?

111. जोतते बैल को हल से मारे।

112. मेहनतकश खामोश कैसे रहे।

113. पसीना बहने लगा तो बहता ही रहेगा।

114. मन में कुछ और जुबाँ पर कुछ। दिल से मुँह तक दूरी बहुत।

115. पहचान में हस्ती नहीं, बिन पहचानों की बस्ती क्यों?

116. मन माखन सा बना मुलायम।

117. मुँह में राम, बगल में छुरी।

118. हथेली में घी, और मूठ को चाटना।

119. हाथ का आँवला जैसा, हस्तामलकवत्।

120. घर जमाई बैल बराबर।

121. बेकार बकवास मत करना।

122. उनसे रिश्ता कभी न जोडना जिनके मन में कुछ और वचन में कुछ।

123. हाथ आया सो छूट गया।

124. हाथ का पंछी छोडकर उडते पंछी पकडना।

125. हाथ कंगन को आरसी क्या?

126. सचाई चुभती है।

127. உள்ளதைச் சொன்னா ஊருக்கு பகை.

128. உள்ளே பகையும், உதட்டில் உறவும்.

129. உள்ளதை சொன்னா உடம்பு எரியுதோ?

130. உள்ளதையும் கெடுத்தாள் உதறுகாலி வந்து.

131. உளவில்லாமல் களவில்லை.

132. உள்ளூரில் ஓணான் பிடிக்க முடியாதவன் அயலூரில் யானைப் பிடிக்கப் போனானாம்.

133. உள்ளூரிலே விலை போகாத சரக்கை அயலூர் சந்தையிலே வித்தாப்போல.

134. உள்ளூர்க்காரனுக்குப் பேய்க்கு பயம் வெளியூர்க்காரனுக்கு நாய்க்கு பயம்.

135. உள்ளங்கையிலே வெச்சித் தாங்கியாகறது.

136. உள்ளம் பெருங் கோயில், ஊனுடம்பு ஆலயம்.

137. உள்ளது சொல்ல ஊருமல்ல, நல்லது சொல்ல நாடுமல்ல.

138. உள்ளங்கையிலே வைகுண்டம் காட்டறவானச்சே.

139. உற்றமும் சுற்றமும் உள்ளவரைக்கும்தான்...

140. உற்ற கணவனும் ஒரு நெல்லும் உண்டானால் சித்திரம் போல் குடித்தனம்.

141. உறவு கொண்டாடி குடியைப் பறிக்கறவனாச்சே.

142. உறவு உறவுதான் மடியிலே கைவைக்காதே.

143. உறவு விட்டுப் போகுமா?

144. உறவு போகாமல் கெட்டது. கடன் கேட்காமல் கெட்டது.

145. உறியிலேத் தொங்குமாம் உருளைக்கிழங்கு அதைக்கண்டு பிடிக்குமாம் கருணைக்கிழங்கு.

146. உறிப் பணம் போய்த் தெரு சண்டையை இழுக்கிறது.

147. உறுப்படாத கோவிலே உண்டைக்கட்டிச்சோறு.

148. உறியிலேக் கட்டித்தூக்கினாலும் அழுகற் பூசணிக்காய் அழுகலே.

149. உன் துருத்தியை நீ ஊது.

150. உன் காலை நீயே கும்பிட்டுக் கொள்ளாதே.

151. உன்னோட பிறந்ததுக்கு, மண்ணோட பிறக்கலாம்.

152. உன்மத்தம் பிடித்தவனிடம் உண்மைகள் எடுபடாது.

127. सच बोलो तो सब का दुश्मन।

128. मुँह में राम, बगल में छुरी/सलाम का कलाम और तलवार की चाल।

129. सचाई बदन जलाये।

130. बनाया बिगाड़े बेकार आदमी।

131. चोर का साथी घर का भेदिया।

132. घर का निकम्मा बने गली का शेर।

133. घर में बेकार, बाहर बिके सौ-सौ बार।

134. घरवाला भूत से डरे, बाहरवाला कुत्ते से।

135. हथेली में थामा जाता है।

136. दिल एक मंदिर है और शरीर प्राकार।

137. शहर हो तो सचाई कहे, देश हो तो अच्छाई कहें।

138. बडा चालक, हथेली में स्वर्ग दिखायेगा।

139. घरबार संसार तब तक जब मुट्ठी गरम हो।

140. पति सात्विक हो तो थोड़ी आमदनी भी उफ़नता सागर।

141. रिश्ता अलग, पैसा अलग।

142. रिश्ता जताकर पस्त कर देगा।

143. रिश्ते नाते टूटे न।

144. परख पहचान नहीं तो रिश्ता टूटा, मांगे नहीं तो ऋण टूटा।

145. आलू पहने पाजामा, कद्दू कहे मैं राजा।

146. पैसे हो तो जगडा फसाद। अंटी के पैसे दे क्यों, रार मोल लें क्यों?

147. उजड़े मंदिर का भिखारी पुजारी।

148. सड़ा तरबूज भंडार में बेकार।

149. अपनी तूती खुद बजाओ।

150. अपने मुँह मियाँ मिट्टू न बनना।

151. तेरे साथ पैदा हुआ, मिट्टी के साथ पैदा होता।

152. उन्माद के सामने सच्चाई नहीं टिकती।

153. உனக்கும் எனக்கும் படி அளக்கறவன் அவனுக்கும் அளந்துட்டுப் போறான்.

154. உன் பருப்பு இனிமே வேகாது.

155. உன் நெஞ்சைத் தொட்டுப் பார்.

156. உன்னைப் பெத்ததுக்கு உலக்கையைப் பெத்திருக்கலாம்.

157. உன் கண்ணுக்கு லங்கிணி, அவன் கண்ணுக்கு ரதி.

158. உனக்கும் பெப்பே, உங்கப்பனுக்கும் பெப்பே.

159. உன் வீட்டுத் தோட்டத்திலே கீரையை வெச்சிண்டு அசல் வீட்டுக்குப் போவானேன்.

160. உன் கை ஏன் தாழணும்?

161. உனக்கு ஒரு பேச்சு, எனக்கு ஒரு மூச்சு.

162. உன் காலில் நிறகப்பழகு.

163. உன் பாடு உனக்கு என் பாடு எனக்கு.

164. உன்னால நான் கெட்டேன். என்னால நீ கெட்டேன்னு ஆயிடுச்சு.

165. உன்னைப்பிடி, என்னைப்பிடி உலகத்தான் தலையைப்படி.

166. உன் சொல்லே உனக்கெதிரி.

167. உறவுக்கு ஒன்பது படி, ஊருக்குப் பத்து படி.

168. உயிருக்கு மிஞ்சினது ஒண்ணுமில்லை.

169. உயிர் உள்ள வரைக்கும் கடல் கொள்ளாக் கவலை.

170. உழறமாடு பரதேசம் போனால், அங்கு ஒருவன் கட்டி உழுவான், இங்கு ஒருவன் கட்டி உழுவான்.

171. உழைப்பு உயர்வு தரும்.

172. உலகம் ஒரு நாடக மேடை, நாமெல்லாம் அதில் வரும் பாத்திரங்கள்.

173. உலை வாயிலே விழுந்தா தப்பலாம், ஊர் வாயில் விழுந்தால் தப்ப முடியுமோ?

174. உலை களத்திலே ஊஞ்சல் ஆடமுடியுமா?

175. உச்சிக் குளிர்ந்து உறைந்து போயாச்சு,

176. உண்ணப் படை உண்டு, வெல்லப் படையில்லை.

177. உழக்கு மிளகு கொடுப்பானேன், ஒளிந்திருந்து மிளகுச்சாறு குடிப்பானேன்.

153. दाने-दाने पे लिखा है खानेवाले का नाम, लेनेवाले हजार देनेवाला एक राम।

154. तुम्हारी दाल यहाँ/अब नहीं गलेगी।

155. दिल पर हाथ रखकर कहो।

156. ऐसा कपूत जनने से, मूसल जना होता।

157. तेरी नजर में ताटका, उसकी नज़र में रंभा।

158. हमारी बिल्ली हमीं से मियाँऊ।

159. यह ठेंगा, तुम्हारे लिए, तुम्हारे बाप के लिए।

160. पिछवाड़े में साग, बाजार में क्यों तलाश

161. झुके तेरा हाथ क्यों?

162. तेरी एक बात, मेरी एक सांस

163. अपने पैर पर खड़े होना सीखो

164. तुम्हारे सिर में तेरा दर्द मेरे सिर में मेरा दर्द।

165. आओ गले मिलकर रोयें, तूने मुझे बरबाद किया, मैने तुझे।

166. तेरी बात तुम्हारी गात आज को पकडो फिर गाज को पकडो।

167. रिश्ते में दो सेर, सस्ते में दो सेर।

168. प्राण बची लाखों पाये।

169. सागर है लहर है, जीवन है कहर है।

170. काम का आदमी परदेस में फीका, कभी इसका कभी उसका।

171. मेहनत का परचम सदा ही बुलन्द।

172. दुनिया एक रंगमंच, हम सब अभिनेता।

173. आग से बच सकते ज़माने की जीभ से नहीं।

174. चलती लू में झूला कैसे झूलें।

175. बस बेहद खुश हुआ।

176. डकारने सारी फ़ौज तैयार, पर लडने एक भी नहीं।

177. सब उधार देकर खुद भूखा क्यों?

178. உறிப்பணம் / மடிப் பணம் இருந்தால் தெருச் சண்டையை வாங்கு.

179. உழக்கு உள்ளூருக்கு, பதக்குபரதேசிக்கு இருக்கிறது.

180. உன் வீட்டுக் கடனும், உள்ளங்கை சிரங்கும் ஆகாது.

181. உடையவன் சொல் படி, உரலைச் சுற்றிக் குழிபறி.

182. உற்றார்த்தின்றால் புற்றாய் விளையும் ஊரார் தின்றால் பேராய் விளையும்

183. உடல் மெச்சப் பால் குடிக்கிறாயா? ஊர் மெச்சப் பால் குடிக்கிறாயா?

184. உள்ள பிள்ளை உரலை நக்கிக்கொண்டிருக்க அடுத்த பிள்ளைக்குத் திருப்பதிக்கு நடக்கிறான்.

185. உண்பது உனக்காக, உடுப்பது பிறருக்காக.

178. अंटी में पैसा हो तो घंटी बजाकर झगडा करे।

179. हाँडीभर खिलाये औरों को, गिन गिनकर दाना अपनों को।

180. घरवालों से उधार लेना और हथेली में फ़ोडा ठीक नहीं होता।

181. मालिक जो कहे, ठीक या गलत सर आँखों पर।

182. घरवाले खाये तो बेकार, पराये खाये तो साकार।

183. खुद के लिए करते हो या दिखावे के लिए।

184. संतान भूखी, घर में फाका, आन पूत की और मनौती।

185. खाइए मन भाता, पहनिये जग भाता।

## ஊ

1. ஊக்கமது கைவிடேல்.
2. ஊக்கமுண்டேல் ஆக்கம் உண்டு.
3. ஊக்கம் திருவினையாக்கும்.
4. ஊசி குத்தினாப் போல.
5. ஊசி குத்த இடமில்லை / ஊசி நுழையக் கூட இடமில்லை.
6. ஊசியாலே எடுக்கறதை கோடாலியால வெட்டறாப்போல.
7. ஊசி விழுந்தாக் கூட சத்தம் கேட்கும்.
8. ஊசி கொள்ளப் போய் (வாங்க) துலாக் கணக்குப் பார்த்ததுபோல.
9. ஊசி காதுலே ஒட்டகம் நுழையுமோ?
10. ஊசி வழிதானே நூல் போகும்?
11. ஊசி போட்டா ஊசி விழாது.
12. ஊசி என்றதும் நூலாய் நிற்க வேண்டாமோ?
13. ஊசித் தொண்டை தாழி வயிறு.
14. ஊசிக்குக் கள்ளன் உடனே வருவான்.
15. ஊசி மேலே நிக்கறாப் போல.
16. ஊசி விக்கறவ, பாசி விக்கறவனைப் பகைச்சிண்டாளாம்.
17. ஊசி முனையில் தவம் செய்தாலும் உள்ளது தான் கிடைக்கும்.
18. ஊசிப் போனப் பண்டம் யாருக்கும் உதவாது.
19. ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் ஊர்ப்பிள்ளைத் தன் பிள்ளையாகுமா?
20. ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் ஒட்டறது தான் ஒட்டும்.
21. ஊடும் பாவும் போல ஒரு ஒத்துமை.
22. ஊண் (உணவு) அற்றபோதே உறவும் அற்றுப் போச்சு.
23. ஊணும், உறக்கமும் உள்ளவனுக்குத் தான்.
24. ஊத்தைப் போனாலும் வினை போகாது.
25. ஊத்துக்கண்ணாட்டமா ஊறிக்கிட்டேயிருக்கும்.

1. उत्साही प्रवृत्ति कभी न छोड़ना।
2. लगन हो तो विजय निश्चित।
3. उत्साही की किस्मत सदा खुली की खुली।
4. चुभन ज्यों सुई की।
5. सुई की नोक बराबर भी जगह नहीं।
6. जहाँ काम आये सुई कहा करै तलवार।
7. ऐसी खामोशी कि सुई भी गिरे तो आवाज़ हो।
8. सुई खरीदने में सौदेबाजी क्यों?
9. सुई की आँख में ऊँट कैसे घुसे।
10. सुई की आँख से ही धागा जाये।
11. ऐसी भीड़ कि तिल धरने की जगह नहीं।
12. सुई कहे तो धागे के साथ हो जा तैयार।
13. पेट घड़ा गला सूई।
14. सुई का चोर झट तैयार।
15. ज्यों सूली पर खड़ा हो।
16. कोयला कहे कढ़ाई काली।
17. सूली ऊपर करे तपस्या, मिलना जो है वही मिलेगा।
18. बासी भात किसके काम?
19. कितना भी लाड़ला हो, पराया कहाँ अपना।
20. जितना भी खिलाये तन भर ही समाये।
21. ताने-बाने की तरह गहरी दोस्ती। नदी-नाव संयोग।
22. चूल्हा अलग तो घर अलग।
23. खाये पीये, मौज मनाये, पैसावाला।
24. दाँत के लिए मंजन है, मन के लिए क्या?
25. नदी तट का कुआँ सदा पानी से भरा।

26. ஊதற சங்கை ஊதிவைச்சா, விடியறபோது விடியட்டும்.

27. ஊதாரிக்கு பொன்னும் துரும்பு.

28. ஊதிவிட்டாச்சு, இனித்தானே பத்திக்கும்.

29. ஊணும் உடையும் இல்லாதவன் உறவுக்கு உதவாதவன்.

30. ஊமை ஊரைக் கெடுக்கும்.

31. ஊமை ஊரைக் கெடுக்கும், ஆமை குளத்தைக் கெடுக்கும்.

32. ஊமை கண்ட கனா போல.

33. ஊமையனுக்கு உளறு வாயன் சண்ட பிரசண்டன்.

34. ஊமையை விட உளறுவாயன் எவ்வளேவோ மேல்.

35. ஊமை சித்திரவதை பட்டாப் போல.

36. ஊமைக்கு வாய்ந்தது ஒன்பதும் பிடாரி.

37. ஊமை ஊரை கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

38. ஊமையாயிருந்தால் செவிடும் உண்டு.

39. ஊமையன் பாட, சப்பாணி ஆட, செவிடன் கேட்க, குருடன் பார்க்க

40. ஊர் அறிந்த ரகசியம்.

41. ஊர் அறிஞ்ச பாப்பானுக்கு பூணூல் எதற்கு?

42. ஊர் இரண்டுபட்டா கூத்தாடிக்கு கொண்டாட்டம்.

43. ஊர் இரண்டுபட்டா பண்டாரம் பாடு கொண்டாட்டம் தான்.

44. ஊர் உறங்கும் முன்னால்.

45. ஊர் உலகத்திலே இல்லாத அதிசயமாயத்தானிருக்கு.

46. ஊர் எல்லாம் உறவு, ஒருவாய் சோறில்லை.

47. ஊர் உண்டாகியல்லவோ, கிழக்கே மேற்கே உண்டாகணும்.

48. ஊர்க்காவலுக்குப் போனேன், வீடே கொள்ளை போயிடுத்து என்றானாம்.

49. ஊர்க்குருவி மேலே ராமபாணம் விட்டாப்போல.

50. ஊர்கூடித் தேர் இழுத்தாப் போல.

26. चाभी दे दे, जब चले तब चले।

27. उड़ाऊ के हाथ में सोना भी तिनका।

28. सुलगा दिया अब फैलने में कितनी देर।

29. न रोटी न कपड़ा, न रिश्ता न नाता।

30. एक गूंगा सौ काम बिगाड़े।

31. गूंगा बिगाड़े गाँव, कछुआ बिगाड़े तालाब।

32. ज्यों गूंगा गुड़ खाइके, कौन मुख कहे स्वाद।

33. अंधों में काना राजा।

34. गूंगे से बकबकी भली।

35. ज्यों गूंगा सहे यंत्रणा।

36. गूंगे के सारे बच्चे निकले खराब।

37. गूंगा गाँव बिगाड़े, छछुंदर घर बिगाड़े।

38. गूंगा हो तो बहरा भी।

39. गूंगा गाये, लंगडा नाचे, बहरा सुने और अन्धा देखे।

40. कान कान का राज़।

41. पांडे के लिए जनेऊ किस काम का।

42. गाँव में गड़बड़ तो नट की पाँचों उँगलियाँ घी में।

43. शहर में गड़बड़ तो पांडे मौज मनाये।

44. शहर के सो जाने से पहले।

45. मानों कहीं ऐसा न हुआ हो।

46. शहर भर में रिश्ता, रात-दिन फ़ाका।

47. घर भरा तो शहर भरा।

48. बाहर ताला, भीतर डाका।

49. जैसे चिरैया पर कोई मारे तीर।

50. घर-घर से सेवा, शहर का काम बना।

51. ஊர் மேயப் போயாச்சு.

52. ஊர் மேலே போய் ஒரு படி கொண்டு வந்தாலும் உழைச்சிக் கொண்டு வந்த ஒரு பிடிக்கு ஈடாகுமா?

53. ஊர் வாயை மூட உலை மூடி உண்டா?

54. ஊர் இருக்குப் பிச்சை போட, ஓடு இருக்கு வாங்கிக்கொள்ள.

55. ஊர் பகைக்கு அஞ்சாதவனும் உண்டா.

56. ஊரான் தோட்டத்து மல்லிகை.

57. ஊரான் வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே.

58. ஊரை வளைத்தாலும் உற்ற துணையில்லை, நாட்டை வளைத்தாலும் நல்ல துணை இல்லை.

59. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளைத் தானே வளரும்.

60. ஊரார் பண்டம் உமி, தன் பண்டம் தங்கம்.

61. ஊரார் அடித்தால் உறவிடம் சொல்லலாம் உறவே அடித்தால் யாரிடம் போய் சொல்வது.

62. ஊரார் சொத்துக்குப் பேயாய் அலையறான்.

63. ஊர்க்கண்ணு, உலகக்கண்ணு, கொள்ளிக் கண்ணு நொள்ளக் கண்ணு எல்லாம் கற்பூரமா கரையணும்.

64. ஊருக்கு ஒரு நீதி. உனக்கொரு நீதியா?

65. ஊருக்கெல்லாம் ஒரு வழி, உச்சிப் பிள்ளையாருக்கு ஒரு வழி.

66. ஊரோடு ஒக்க ஓடு, நாடோடே நடுவே ஓடு.

67. ஊருக்காக ஒப்பாரி வைச்சாப் போல.

68. ஊருக்கு நல்லான் உறவினருக்கு பொல்லான்.

69. ஊருக்காக அழுதான்.

70. ஊருக்கு உபதேசம்.

71. ஊருக்காக வேஷம் போட்டுத்தானே ஆகணும்?

72. ஊருக்கு ஒரு தேவடியாள், யாருக்கென்று ஆடுவாள்?

73. ஊருக்காக உபசாரம்.

51. चरने चला गया।

52. भीख की थैली से मेहनत का दाना भला।

53. शहर की कानाफ़ूसी, कौन करे बंद।

54. गली गली में भीख और हथेली में हाँडी।

55. कौन शहर की रार मोल ले।

56. पराये की लुगाई, आँखों में समाई।

57. पराये की कमाई और अपने हाथ की सफ़ाई।

58. शहर पर छाने पर भी कोई फ़ायदा नहीं, सब को खिलाने पर भी कोई साथी नहीं।

59. पराये को खिलाये तो अपनों का पेट भरेगा।

60. तेरी चीज़ें खट्टी, मेरी चीजें मीठी।

61. पराये मारे तो अपनों से कहे, अपना मारे तो किससे कहे।

62. परायी चीज़ पर दाँत जमाये बैठा है।

63. बुरी नज़रवाले तेरा मुँह काला।

64. सब के लिए एक राह और तेरी अलग राह।

65. सब की एक रविश अपनी अलग रविश।

66. गंगा गये गंगादास, जमुना गये जमुना दास।

67. दिखावे के लिए दहाड़ मारे।

68. शहर में दोस्त, घर में दुश्मन।

69. रोये दिखावे के लिए।

70. चौराहे पर नसीहत।

71. मंच पर आ गयी तो नाचना ही पड़ेगा।

72. एक ही मेहफिल, एक ही शमा, किस किस के लिए जले।

73. दिखावे का पीताम्बर।

74. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி.

75. ஊருடன் ஒத்துவாழ்.

76. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

77. ஊரிலே கல்யாணம், மாரிலே சந்தனம்.

78. ஊர் என்று இருந்தால் சேரியும் இருக்கும்.

79. ஊரைக் கொள்ளையடித்து உருப்படியா வாழ முடியுமா?

80. ஊரையே உலையில் போட்டவனாச்சே.

81. ஊரையே வித்துடுவானே.

82. ஊரைச் சொன்னாலும், பேரைச் சொல்லாதே.

83. ஊரைச் சுத்தி எம்பேர் முத்தி.

84. ஊரைச் சுத்தி வேலி போட முடியுமா?

85. ஊரே கலகலத்துப் போச்சு

86. ஊரே சிரிச்சிப் போச்சு

87. ஊன்றக் கொடுத்தடி உச்சியை உடைக்கும்

88. ஊனமில்லாத மனதை ஒடித்துப் போடாதே.

89. ஊனம் உடம்புக்குத்தானே தவிர, மனசுக்கு இல்லே.

90. ஊன்ற இடமில்லாதவன், படுக்க ஆசைப் பட்டாப்போல

91. ஊதி கனிய வைச்சப் பழம் போல

92. ஊதியமில்லா உழைப்பு உயர்வு தராது

93. ஊரை உழக்கால் அளக்கிறான், நாட்டை நாழியால் அளக்கிறான்.

94. ஊரார் வீட்டுக் கல்யாணமே, ஏன் அவிழ்ந்தாய்க் கோமணமே. (பயன் இல்லாமல் பிறருக்கு உழைப்பது)

95. ஊர் கூடி செக்குத்தள்ள, வாணியன் எண்ணை கொண்டு போக

96. ஊரைப் பிடித்த சனி, பிள்ளையாரையும் பிடித்தது.

74. गरीब की पत्नी सब की जोरू।

75. शहर के साथ साँस लो।

76. गाँव से दुश्मनी, समूल नाश।

77. बेगानी शादी में अब्दुल्ला दीवाना।

78. घर होगा तो पिछवाड़ा भी।

79. घर घर लूटकर अपनी चिता सजायी।

80. बाप रे बाप! शहर को हजम करनेवाले।

81. घर बाज़ार शहर सब उसकी दूकान में।

82. धाम बताओ पर नाम नहीं।

83. घर घर गली गली हम हुए बदनाम।

84. कहाँ तक कोई निगरानी रखे।

85. शहर भर में हंगामा।

86. हो गयी पूरी जग हँसाई।

87. दी बैसाखी अब बचाओं सिर।

88. चंगा है मन उसे तंग न करना।

89. पंगु है शरीर मन नहीं।

90. पैर धरने की जगह नहीं लेटना चाहता है।

91. गरमी से सहलाकर पकाया है इसको।

92. कमाई और मेहनताना तरक्की का निशाना।

93. इतना होशियार मुट्ठी में शहर, झोली में देश।

94. बिन प्रयोजन परिश्रम किया क्यों तुमने। किसी की शादी, तेरी क्यों आशनाई।

95. शहर का पसीना, कोई अकेला ले चले हसीना।

96. शहर में साढ़ेसाती, भगवान पर उसकी परछाई।

# எ

1. எங்கேயோ இடி இடிச்சி, எங்கேயோ மழை பெய்ததாம்.
2. எங்கேயோ இடி இடிக்கிறதேன்னு நினைச்சா, அது என் தலையிலேயே இடித்தது.
3. எங்கும் சுத்தி ரங்கனை சேவி.
4. எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லேன்னு சொல்லறாப் போல.
5. எங்கள் வீட்டில் விருந்து வைக்கிறேன் வாருங்கள், இலை வாங்க மறந்து விட்டேன் போங்கள்.
6. எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போறார்.
7. எங்கேயோ போற சனியனை எதிர்கொண்டு அழைச்சாப் போல.
8. எங்க வீட்டுக்கு வந்தா என்ன கொண்டு வரே, உங்கவீட்டுக்கு வந்தா என்ன தர்றே?
9. எங்கெல்லாம் உயிருண்டோ அங்கெல்லாம் இறப்பு முண்டு.
10. எங்கும் சிரித்து எள்ளுக் கொல்லை காக்கிறவன்.
11. எங்க சிண்டு உங்க கையிலே.
12. எங்கே புகையுண்டோ, அங்கே நெருப்பும் உண்டு.
13. எங்கப்பன் பிறந்தது வெள்ளி மலை, எங்க ஆத்தாப் பிறந்தது பொன்மலை.
14. எங்கே வளைச்சுப் போடுவானோன்னு பயந்தா, இவன் தானேப் போய் வலிய விழறானே?
15. எங்கேயோ எண்ணை மழை பெய்ததென்று இருந்தானாம்.
16. எச்சக்கையாலே காக்காய் ஓட்ட மாட்டான்.
17. எச்சில் இலை எடுக்க வந்தாயா? எண்ணிப் பார்க்க வந்தாயா?
18. எச்சக் கலைக்கு நாய் அடிச்சிக்கறாப் போல.
19. எச்ச சோத்துக்குக் கூட ஏகாம்பரம் உத்தரவா?
20. எச்சிலைத்தின்னு ஏப்பம் விட்டாப்போல.
21. எச்சில் இலைக்கு எதிர் இலை போடலாமா?
22. எசகு பிசகா மாட்டிக்கிட்டான்.
23. எசமான் கோபத்தை எருமைக் கடாமேல் காண்பித்தானாம்.
24. எகிறி எகிறி குதிச்சாலும் கிட்டறதுதான் எட்டும்.
25. எகிறி குதிச்சி எதை எட்டிப் பிடிச்சே?

1. गरजे कहीं, बरसे कहीं।
2. दूर की बिजली सर पर गिरी।
3. कहीं भी जाओ, भगवान को मत भूलो।
4. कमरा बंद है, पर बहू नहीं।
5. खाना तैयार थाली नहीं, फिर मिलेंगे।
6. सैयाँ भए कोतवाल।
7. राह के संकट को घर में बिठाया।
8. मेहमान बने तो क्या लाते, मेजबान बनते तो क्या देते?
9. जातस्य हि ध्रुवो मृत्युः।
10. दर दर भटक कर तिल की रखवाली।
11. हमारी चोटी आपकी मुट्ठी में।
12. धुआँ है तो आग होगी ही।
13. मामा मीरासदार दादा हवलदार और हम बेहतर/
मेरा मायका सोने का जायका, मेरा पीहर हीरा और जवाहर।
14. फंसायेगा समझा, खुद फंसा।
15. ऐसा बेपरवाह, कहीं और हो तेल की बारिश।
16. मक्खीचूस।
17. भिखारी की भीख, गिनने से ज्यादा नहीं होती।
18. जूठे पत्तल पर ज्यों लपकते कुत्ते।
19. बासी भात में भी खुदा का साझा।
20. थूक निगलकर डकारना।
21. खोटे का उल्टा खोटा नहीं।
22. बुरी तरह फँसा। कीलोत्पाटी वानर सा फँसा।
23. मालकिन का गुस्सा भैंस पर उतारा।
24. जितनी भी मेहनत करो भाग्य में बदा ही मिलेगा। हाथ ऊँचा पर
छींका बाहर।
25. उछलकूद करके क्या पाया?

26. எச்சக் கலைக்கு மண்ணாங்கட்டி ஆதாரம்.

27. எட்டாப் பழம் புளிக்கும்.

28. எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டாப் போல.

29. எட்டாத உயரத்திற்குப் போய் விட்டான்.

30. எட்டா கனி போல.

31. எட்டாக் கனிக்கு கொட்டாவி விட்டு ஏங்கின நரி போல.

32. எட்டாம போனாலும் கிட்டாதது எட்டாது.

33. எட்டாத மரத்து இளநீர்போல ஒட்டாத பேரோட உறவாக நிற்காதே.

34. எட்டு திக்கும் கொடி கட்டிப் பறக்கறான்.

35. எட்டாத தேனுக்கு ஏறாத நொண்டி ஏங்கினாப் போல.

36. எட்டினாக் குடுமியைப் பிடி, எட்டாவிட்டால் காலைப் பிடி.

37. எட்டி எட்டிப் பார்த்துக் குட்டி சுவரில் முட்டிக் கொண்டாப் போல.

38. எட்டுக் குட்டி கொடுத்து ஒரு செட்டி குட்டி வாங்கணும்.

39. எட்டி மரமானாலும் பச்சென்று இருக்கவேண்டும்.

40. எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன?

41. எட்டிப் பார்த்தாற் போலக் கொட்டிக் கொண்டு போகிறான்.

42. எட்டிக்குப் பால் வார்த்து வளர்த்தாலும், தித்திப்பு வருமா என்ன?

43. எட்டி எட்டி உதைச்சாலும் குட்டியைத் தாய்விடுமா என்ன?

44. எட்டி விதைத்து மாம்பழம் வருமா?

45. எட்டு எள்ளுக்குச் சொட்டு எண்ணெய் எடுப்பான்.

46. எடுக்குமுன்னே கழுதை இடுப்பு ஒடிஞ்சி விழுந்ததாம்.

47. எடுத்து மூடி விட்டு எதிரே வந்து நிற்பாள்.

48. எடுத்து விட்ட நாய் எத்தனை நாளைக்குக் குரைக்கும்?

49. எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்கவேணும்.

50. எடுப்பார்க் கைப்பிள்ளை போல.

51. எடுப்பாரைக் கண்டால் குடமும் கூத்தாடும்.

26. जूठे पत्तल के लिए मिट्टी का ढेला।
27. जो हाथ न लगे खट्टा है।
28. असंभव का प्रयास मत करना।
29. चोटी पर पहुंच गया।
30. ज्यों फुनगी का आम।
31. दूर के अंगूर पर लोमड़ी ललचाये।
32. क़िस्मत का लिखा होकर रहेगा, करमगति टारत नाहि टरे।
33. पंथी को छाया नहीं फल लागे अति दूर।
34. दसों दिशाओं में कीर्तिमान।
35. खड़े जमीन पर, सितारों को देखकर क्यों आहें भरे।
36. हाथ में आये चोटी पकड़, न आये तो पैर पकड़।
37. सर उठाया पर चट्टान से टकराया।
38. पैसे में आठ लो, बेचा आठ पैसा एक।
39. आक ही क्यों न हो, रहे भरा पूरा।
40. आक फले क्या फायदा, लाख भरे क्या फायदा।
41. झांक कर देखा, जकड लिया कब्जे में।
42. करेले को नहाये शहद में, कड़ुवापन जाये कहाँ/ नीम न होए मीठी चाहे सींचो गुड़ घी से।
43. लात मारे फिर भी साथ ले चले।
44. बोए पेड़ बबूल का आम कहाँ ते होय।
45. होशियार इतना कि रेत को रस्सी बना दे।
46. लादने से पहले गधा लुढ़क जाये जमीन पर।
47. हाथ खींचकर थाली परोसना।
48. सिखाया पाठ कब तक काम आयेगा।
49. खाने-पीने को भी किस्मत होनी चाहिए।
50. जहाँ मोड़े वहाँ मुड़ा।
51. लाड़-प्यार देखे तो हर कोई ललचाये

52. எடுப்பது பிச்சை, ஏறுவது பல்லக்கு.

53. எடுத்தான், கவிழ்த்தான் என்பதை போல.

54. எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் பேதை போலிருக்கலாம்.

55. எடுத்தேன் கவிழ்த்தேன்னு எதையாவது செஞ்சி வைக்காதே.

56. எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால், இளைப்பும் தவிப்பும் உண்டாகும்.

57. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

58. எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.

59. எண் காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே.

60. எண்ணெய்க்கு ஏத்தாப்பலத்தானே எந்திரம் இயங்கும்.

61. எண்ணெயில் விழுந்த அப்பம் போல.

62. எண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

63. எண்ணத்தில் இருந்தாதானே செயலில் வரும்.

64. எண்ணித் துணிக கருமம்.

65. எண்ணி எண்ணிப் பார்த்தாலும் நாலு பத்தாகுமா?

66. எண்ணில்லாதார் கண்ணில்லாதார் எழுத்து இல்லாதார் கழுத்தில்லாதார்.

67. எண்ணமற்ற ராஜா பன்னி வேட்டை ஆடினாப் போல.

68. எண் சாண் உடம்பும் ஒரு சாணா போயிடுத்து.

69. எண்ணத் தொலையாது, ஏட்டில் அடங்காது.

70. எண்ணெய்ச் சட்டியிலிருந்து தப்பி எரியற அடுப்பிலே விழந்தாப் போலாச்சு.

71. எண்ணெய் குடித்த நாய் திண்ணையில் கிடக்க, எதிரே வந்த நாய் உதைப்பட்டது போல.

72. எண்ணெய்த் தடவிண்டு புரண்டாலும் ஒட்டறதுதான் ஒட்டும்.

73. எண்ணெயில் இட்ட அப்பம் போல குதிக்கிறான்.

74. எண்ணெய் கண்ட இடத்திலே தடவி கொண்டு சீப்புக்கண்ட இடத்திலே தலை வாரிப்பான்.

75. எண்ணெய்க் குடத்தில் குளிப்பாட்டின ஆனைக்குட்டி போல.

76. எண்ணுவது நம் செயல், பண்ணுவது அவன் செயல்.

77. எண்ணெய் போக முழுகினாலும், எழுத்து போகத் தேய்ப்பாருண்டா?

52. डोली पर सवार, झोली पसारे।

53. ज्यों उठाया, वैसे बिठाया।

54. करने धरने कोई और हो तो बैठे बुद्धू बने हम।

55. उठाया-बिठाया किया जो मन भाया।

56. करने धरने कोई और है तो और सुस्ती पसीना मेरे सिर।

57. गिनती लेखन आँखें समान।

58. तगड़े तन में सिर ही प्रधान।

59. भागे अपनी बुराई की परछाईं से।

60. जेता गुड़ तेती मिठास।

61. उबलते तेल में पकती कचौड़ी-सी।

62. गिनके न रखो तो चुनके लुट जायेगा।

63. ख्यालों में हो तो काम में आयेगा।

64. सोचके काम में लगना।

65. गिनने से बढ़ती कैसे हो?

66. गिनती न जाने तो कच्चा ही माने, अक्षर न जाने तो बौना ही माने।

67. बिन सोचे क्यों पैबन्द ढीला करें।

68. मारे शरम के धरती में गड़ गया।

69. न सोचते बना, न लिखते बना।

70. कढ़ाई से बचा चूल्हे में गिरा / आसमान से गिरा खजूर में अटका।

71. घर का कुत्ता गलीज़ करे और सड़क का कुत्ता मार खाये।

72. तेल लगाकर लोटने पर भी उतना ही चिपकेगा जितना बदा है।

73. कढ़ाही की कचौड़ी सा उछलता है।

74. जहाँ तेल मिला वहाँ लगा लिया, जहाँ कंघी मिली वहाँ संवार लिया।

75. तेल से नहाये हाथी सा।

76. सोचें हम, करे भगवान।

77. तकदीर में जो लिखा है वह होकर ही रहेगा।

78. எண்ணெய் இல்லாத பந்தம் எரியுதடி தங்கம்.

79. எத்தனுக்கு அத்தன், எமனுக்கு நமன்.

80. எத்தனுக்கு எத்தன் சகந்தனிலே உண்டு.

81. எத்தைத் தின்னா பித்தம் தெளியும்?

82. எத்தனை சிரமம் இருந்தாலும் திண்டிக்குச் சிரமம் இல்லை.

83. எத்தனைத் தேய்த்தாலும் பித்தளைக்குத் தன் நாற்றம் இயற்கை.

84. எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பொன்னாகுமா?

85. எத்தனை உருண்டு புரண்டாலும் ஒட்டறதுதான் ஒட்டும்.

86. எத்தனைப் போர்த் துடுப்புப் போட்டாலும், தோணி போவது சுக்கான் பிடிப்பவன் கையில் தானே?

87. எதற்கு ஜோடிக்க வேணும், இடித்து கிழிக்க வேணும்.

88. எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்ட பிரசண்டம்.

89. எதிர் எதிர் துருவங்கள்.

90. எதிர் நீச்சல் போட்டால் தான் வாழ முடியும்.

91. எதிரிக்கு சகுனத் தடையென்று மூக்கை அறுத்துக் கொள்வதா?

92. எதிராளியைக் குறைத்து மதிப்பிடாதே.

93. எந்த மடத்திற்கு எந்த ஆண்டி சதம்.

94. எந்த ஜன்மத்தில் பட்ட கடனோ, கொட்டி ஆழ வேண்டியிருக்கு.

95. எந்த ராஜா எந்த பட்டினம் போனால் எனக்கென்ன?

96. எந்த புத்திலே எந்த பாம்பு இருக்குமோ யார் கண்டது.

97. எந்த ஆயுதமும் தீட்டத் தீட்ட கூர்.

98. எந்திரக் கல்லுக்கு இடையே அகப்பட்டுக்கொண்ட அரிசி போல.

99. எந்த நிறம் சேர்ந்தாலும் கருப்பின் நிறம் மாறாது.

100. எந்த ஊரும் சொந்த ஊரே.

101. எந்தக் கொள்ளிக் கண் பட்டுதோ.

102. எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சம் இலை உதிராது.

78. बिन तेल जलती है बाती।

79. कंस के लिए कान्हा यम के लिए शिव जी।

80. उस्तादों का उस्ताद जग मे है ही। सेर के लिए सवा सेर।

81. क्या खाये और कैसे स्वस्थ होवे।

82. गुज़ारा मुश्किल है पर पेट खाली नहीं।

83. गंध जो साथ है छूटेगा नहीं कभी।

84. जितना भी तपाओ, लोहा सोना नहीं बनेगा।

85. चाहे कितनी कोशिश करो जितना होना उतना होगा।

86. जितने भी पतवार हो नैया खेवनहार के हाथ।

87. क्यों बनाये और क्यों टुकड़ा टुकड़ा करे?

88. गरीबों पर गुस्सा अधिक ही उतरता।

89. दोनों दूर-दूर के ध्रुव।

90. उल्टी धार में तैरने पर ही जी सकते हैं।

91. मेरी एक आंख जाए पर उसकी दोनों आँखें।

92. दुश्मन को कम न समझना।

93. किस विहार में कौन भिक्खु सदा।

94. किस जनम का ऋण भरना पड़ रहा है।

95. कुछ भी हो मुझे क्या?

96. कौन जाने कहाँ क्या खतरा होगा?

97. सान पर धरे तो हर औजार तेज।

98. दुई पाटन के बीच में साबुत बचा न कोय।

99. सूरदास कारी कमरी पे चढ़े न दूजो रंग।

100. बस्ती-बस्ती परबत परबत गाता जाये बंजारा, कहता जाये सबसे मिलकर हर इक गाँव हमारा।

101. किसकी नज़र बला बन गयी / बुरी नज़रवाले तेरा मुँह काला।

102. झड़ें सब पत्ते पर खजूर के पत्ते कभी न झड़ें।

103. எந்த ஆண்டாருக்கு எந்த மடம் சொந்தம்?

104. எதிரி சுண்டெலியானாலும் எச்சரிக்கை தேவை.

105. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

106. எப்பவும் மத்தளப் பிழைப்புதான்.

107. எப்பப் பார்த்தாலும் மூக்கால் அழுகைதான்.

108. எப்பேர்ப் பட்ட காத்துக்கும் வளைஞ்சி கொடுக்கற நாணல் போல.

109. எப்பவும் ஏகாதசிதான்.

110. எம்மதமாயினும் சம்மதம்.

111. எமன் பிடித்தால் எவன் பிழைப்பான்?

112. எமனுக்கு நமன்.

113. எமன் ஏறுகிற கிடாவாக இருந்தாலும் உழுதுவிடுவான்.

114. எமனை முழுங்கி நமனை ஏப்பம் விட்டுடுவான்.

115. எய்தவனிருக்க அம்பை நோவானேன்.

116. எரியும் கொள்ளியை ஏறத்தள்ளாதே.

117. எரிகிறதைப்பிடுங்கினால், கொதிக்கறது அடங்கும்.

118. எரியற நெருப்பிலே எண்ணெயை ஊத்தினாப் போல.

119. எரியற கொள்ளியிலே எந்த கொள்ளி நல்ல கொள்ளி?

120. எரியற கொள்ளிக் கட்டையாலத்தலையை சொரிஞ்சிண்டாப் போல.

121. எரிமலை வெடிச்சாப்போல.

122. எரியற வீட்டிலே பிடுங்கினது லாபம்.

123. எரிமலைக்கு அடியிலே புகையற நெருப்பு போல.

124. எரு இல்லையேல் மறு பயிரும் இல்லை.

125. எருக்குப் பழுத்தால் மட்டும் எதுக்கு ஆகும்.

126. எருப் போட்ட பயிர்தான் எதிரி.

127. எருக்குப் பழுத்தாலென்ன, எட்டிக் காய்த்தாலென்ன?

128. எருமை மாடு கன்று போட்ட இடம் போல.

103. संसार एक सराय है, किसकी क्या बपौती?

104. दुश्मन छोटा भी हो, सावधानी चाहिए।

105. जिससे जो भी सुनो, उसकी सचाई परख लो।

106. ढोलक की तरह दोनों तरफ मार।

107. हमेशा रोना, हमेशा शिकायत।

108. हर हवा में झुकती सरकंडे की डांड-सी।

109. रोज-रोज रोज़ा, घड़ी घड़ी फाका।

110. हिन्दू-मुसलिम, सिख-इसाई आपस में सब भाई-भाई।

111. यम की पकड से कौन बचे?

112. सरदारों का सरदार भी।

113. यम के भैंसे को भी खेत में जोत देगा।

114. सब को हज़म कर जाये। दाता को ही दाँतों से दबा लेगा।

115. चलानेवाला और है तीर बेचारा क्या करे।

116. बढ़ती बात बढ़ाना मत।

117. न रहेगा बाँस, न बजेगी बाँसुरी।

118. जलती आग में घी डालना।

119. जलते मशालों में किस में आग कम

120. आ बैल मुझे मार।

121. ज्वालामुखी के विस्फोट-सा।

122. जलते घर में जो छीना वह फायदा।

123. ज्वालामुखी के नीचे जलती आग।

124. खाद नहीं तो खेत में फसल नहीं।

125. आक फलकर क्या प्रयोजन?

126. खाद डालो खेत को सर उठाके देखो।

127. कंजूस का धन किस काम का?

128. ज्यों गंदा पिंजरापोल सा।

129. எருமை மாட்டு முதுகிலே மழை பெய்தாற்போல.

130. எருமைத்தோல்.

131. எருதும் வண்டியும் ஒத்தால், மேடு பள்ளம் ஏது?

132. எருதின் நோய் காக்கைக்கு எங்கேத் தெரியப் போகிறது.

133. எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்.

134. எருமை வாங்கறதுக்கு முன்னாடி, நெய் விலை பேசறாப்போல.

135. எருது கெடுவது கொம்பாலே, மனிதன் கெடுவது நாக்காலே.

136. எருமைத் தோலிலே தம்பட்டம் செய்யலாம், எலித் தோல் என்னத்துக்கு ஆகும்?

137. எருதின் புண் காக்கைக்கு விருந்து.

138. எருதுக்கு ஏறச் சொன்னா கோபம் முடவனுக்கு இறங்கச் சொன்னா கோபம்.

139. எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது.

140. எருது கட்டி உழலாம், எலியைக்கட்டி உழமுடியுமோ?

141. எருமை கோமயம் எக்கியத்திற்கு ஆகுமா?

142. எருமையை விட பொறுமையுள்ளவன்.

143. எருக்கு இலைக்கு மருக்கொழுந்து வாசனையா?

144. எருகஞ் செடியை எதுவும் மேயாது.

145. எல்லாம் அவன் செயல்.

146. எல்லாம் அறிந்தவனுமில்லை, ஒன்றுமறியாதவனும் இல்லை.

147. எல்லாத்துக்கும் காலம் தான் மருந்து.

148. எல்லாம் சொல்லும் பல்லி, கழுநீர்ப் பானையில் விழுந்ததாம் துள்ளி.

149. எல்லாருக்கும் ஒரு வழின்னா, இவனுக்குத் தனி வழி.

150. எல்லாரும் பாக்கு இவள் ஒரு தோப்பு.

151. எல்லாரும் பல்லக்கிலே ஏறினா, தூக்கறது யாரு?

152. எல்லாரும் சட்டியை போட்டு உடைத்தால் இவள் சிரட்டையைப் போட்டு உடைக்கிறாள்.

153. எல்லாத்தையும் விட்டுட்டு, இல்லாததை பிடிக்கப் போனானாம்.

129. ज्यों भैंस की पीठ पर बारिश / उल्टे घड़े पर पानी।

130. निरा भैंस।

131. बैल और गाड़ी ठीक है तो जमीन की क्या परवाह?

132. कौआ क्या जाने बैल का दर्द? / रंडी क्या जाने रंड़ापा?

133. बैल हाँफे तो सब हाँफे।

134. हमने भैंस खरीदी पर घी का दाम कम हो गया।

135. सींग साँड के दुश्मन जीभ आदमी की दुश्मन।

136. भैंस के चमड़े से ढोल बना सकते हैं, चूहे के चमड़े से क्या?

137. बैल का घाव, कौए का भोज।

138. बैल चढ़ाव से घबराये, लूला उतार से।

139. बैल बिफर गया तो खूँटा तोड़कर भाग जायेगा।

140. बैल से जोत सकते हैं, चूहे से नहीं।

141. भैंस का गोबर यज्ञ के काम न आये।

142. भैंस से ज्यादा सब्र है उसमें।

143. छछुंदर के सिर चमेली का तेल।

144. बेशरम की पत्ती खाये नहीं कोई।

145. ईश्वरेच्छा बलीयसी।

146. हरफन मौला भी नहीं, उल्लू का पट्ठा भी नहीं।

147. वक्त से बड़ा मरहम कहाँ?

148. ज्योतिषी अपनी कुंडली ठीक करो।

149. सब मिलके चले, यह अकेला चले।

150. सब आम हैं, यह अमराई है।

151. पालकी पर सब सवार तो कौन बने कहार। मैं भी रानी तूभी रानी कौन भरेगा पानी।

152. सब की राह एक इसकी चाल अलग।

153. हाथ का बुलबुल आसमान में, हर झाड़ी में करे तलाश।

154. எல்லோரும் கூடி குல்லாவை தந்தார்கள்.

155. எல்லோருக்கும் பௌர்ணமி வரும், கூடவே அமாவாசையும் இருக்கும்.

156. எல்லைப் பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டினாப்போல.

157. எல்லோரும் வாழ நினைப்பதல்லாமல் யாமொன்றும் அறியோம் பராபரமே.

158. எல்லோரும் ஏறி இளைத்த குதிரைமேல் சாஸ்திரியார் ஏறி சறுக்கி விழுந்தார்.

159. எல்லாம் எல்லைக்குள்ளே இருக்கணும்.

160. எல்லோரையும் காக்க ஒரு ஈசன் இருக்கிறான்.

161. எல்லாரும் உயர்த்தினாங்கன்னு எலியும் தன் வாலை உயர்த்தியதாம்.

162. எல்லார்த் தலையிலும் எட்டு எழுத்து, பாவி என் தலையில் பத்து எழுத்து.

163. எல்லாத்தையும் கொட்டித் தீர்த்தாச்சு.

164. எல்லாம் வல்லவன்.

165. எல்லோரும் தலைவன் ஆனால் தொண்டன் யார்?

166. எல்லாம் கிடக்ககிழவனைத்தூக்கி மணையில் வைத்தாளாம்.

167. எல்லாருக்கும் காதை கொடுக்கலாம், ஆனா வாயைக் கொடுக்கக்கூடாது.

168. எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடைய சட்டியில்லை.

169. எல்லாத்தையும் இழந்தாலும் எதிர்காலம் இருக்கு.

170. எல்லா கெட்டதுக்கும் மூலகாரணம் பணம் தான்.

171. எல்லாருக்கும் இதயம் ஒண்ணுதான், எண்ணம் தான் வேறு.

172. எல்லார் வீட்டுத் தோசையிலும் ஓட்டை.

173. எல்லி செட்டி லக்க (கணக்கு) ஏகலக்க.

174. எலிப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினாப்போல.

175. எலி அழறதேன்னு பூனை பரிதாபப்பட முடியுமோ?

176. எலி பூனை மேலே பரிதாபப்பட்டா பட்டினித்தான் கிடக்கணும்.

177. எலி ஏன் அம்மணத்தோட ஓடறதுன்னு இப்பதான் புரிஞ்சிது.

178. எலும்பு கடிக்கிற நாய்க்கு பருப்புச் சோறு ஒரு கேடா?

179. எலிக்கு வலி, பூனைக்குக் கொண்டாட்டம்.

180. எலியும் பூனையும் போல

154. सबने मिलकर चूना लगाया।

155. हर अंधेरी रात के बाद, सुहाना सबेरा होता है।

156. पेड़ के भूत ने खंडहर के भूत को भगाया।

157. लोका समस्ता सुखिनो भवन्तु। सर्वे भवन्ति सुखिनः।

158. सब गुण्डे चढ़े घोड़ी पर। अब पण्डे चढ़े और फिसलकर गिर पड़े।

159. हद से गुजरना ठीक नहीं।

160. सबको राखे साइयाँ।

161. यह क्या चूहा भी अपनी पूंछ उठाता है।

162. भगवान की लेखा मेरे लिए लंबी है।

163. सारी भड़ास उतार दी।

164. उस्तादों का उस्ताद। तुम कंस कसाई, मैं कृष्ण कन्हाई।

165. बोलेंगे सभी तो सुनेगा कौन?

166. सब को छोड़कर बूढ़े से कर ली सगाई।

167. सब की बात सुनो, सब से मत बोलो/ सुनो सबकी, करो मनकी।

168. धन से भरी पेटी, भूख से भरा पेट।

169. हर बात खोटी, पर कल की बात खरी।

170. धन ही सब पाप का मूल है।

171. दिल तो वही है। बस ख्याल बदल गया है। खज़ाना वही पर चाबी बदल गयी।

172. चिराग तले अंधेरा।

173. सेठ के हिसाब में एक ही खाता?

174. जैसे मूषक के लिए वर ढूँढ़ा।

175. बिल्ली चूहे पर तरस खाये तो खाये क्या?

176. घोड़ा घास से यारी करे तो खायेगा क्या?

177. चूहा क्यों नंगा है। अभी पता चला।

178. हड्डी चबाते कुत्ते को भात क्यों खिलाये कोई।

179. चूहे के दर्द में बिल्ली का मौज मज़ा।

180. ज्यों चूहा और बिल्ली।

181. எலிக்கு அஞ்சுவான், புலிக்கு அஞ்சானாம்.

182. எலிப் புழுக்கை இறப்பில் இருந்தால் என்ன, வரப்பில் இருந்தாலென்னா?

183. எலிவளையானாலும் தனி வளைதான் மேல்.

184. எலி கட்ட, பாம்பு குடி கொள்ள.

185. எலியைப் பிடிக்க நினைக்கும் எலிப்பொறி எலியைச் சுற்றுவதில்லை.

186. எலிவேட்டையாடத் தவில் வேணுமா?

187. எலிக்குப் பயந்து சந்நியாசம் போனது போல.

188. எலித் தலையில் கோடாலி விழுந்தது போல.

189. எலிக்கு பயந்து வீட்டைக் கொளுத்தினது போல.

190. எலிக்குப் பயந்து புலி பதுங்கினாப்போல.

191. எலும்பில்லாத நாக்கு எல்லா பக்கமும் பேசும்.

192. எலும்பை விட்டெறிஞ்சா பொறுக்கிண்டு போற நாய் தானே.

193. எலும்பு கடிக்கிற நாய் இரும்பு கடிக்குமா?

194. எலி பூனையை பரிகசிக்கும் போது வளையின் அருகில் இருக்கும்.

195. எழுதாத சட்டம்.

196. எழுதாத ஓலையும் பீற்றல் முறமும் வந்ததுபோல.

197. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.

198. எழுந்ததும் தொழு, தொழுததும் படு.

199. எழுதாத கடனுக்கு அழுதால் தீருமா?

200. எழுத்தறியாதவன் ஏட்டை சுமந்தது போல.

201. எழுதிய விதி அழுதால் தீருமா?

202. எழுதின எழுத்தை யாரால் மாத்த முடியும்.

203. எழுத வழங்காத வாழ்வு கழுதை புரண்ட களம்.

204. எழுந்திருப்பான், கால் இல்லை.

205. எள்ளுச் செடியிலே எருக்கம் பூ பூத்தாப் போல.

206. எள்ளையும் அரிசியையும் கலந்து வைச்சாப் போல.

207. எள்ளு போட்டா எள்ளு விழாது.

181. चूहे से डर, पर बाघ से यारी।

182. चूहे की बीठ खेत में हो या बाड़े पर।

183. छोटा क्यों न हो अपनी कुटिया चाहिये।

184. चूहा बनाया बिल, तापै बसा नाग।

185. पिंजरा पंछी की तलाश में नहीं जाता।

186. ढोल बजाकर चूहे का शिकार!

187. छोटी-सी बात से घबराये क्यों?

188. जैसे चूहे के सिर पर कुल्हाड़ी।

189. चूहे से डर कर घर जला डाला

190. चूहे से डरकर शेर छिप जाये।

191. जीभ की न कोई दिशा, न कोई दशा।

192. पैसे फ़ेंके तो उठानेवाला भिखारी।

193. हड्डी चबानेवाला क्या लोहा चबायेगा?

194. अपनी गली में कुत्ता भी शेर।

195. अलिखित कानून। समझ की विधि, परख का पथ।

196. दहेज में मिला टूटा मटका फटी चद्दर।

197. जिसने हमें साक्षर किया वह भगवान बराबर।

198. उठते ही राम नाम, लेटते भी उसी का नाम।

199. जुबानी उधार रुदन का आधार।

200. निरक्षर के हाथ में पोथी।

201. किस्मत का लिखा आँसुओं से न मिटे।

202. किस्मत का लिखा कौन मिटाये?

203. निरक्षर जीवन निरर्थक जीवन।

204. पैर नहीं तो उठे कैसे?

205. बोये पेड़ बबूल का, आम कहाँ ते होय।

206. जैसे तिल तंदूल का मिश्रण।

207. तिल धरने की जगह नहीं।

208. எள்ளுங்கறதுக்கு முந்தியே எண்ணையாய் நிக்கறாப் போல

209. எள்ளும் தண்ணியும் இறைச்சாச்சு

210. எள்ளும் கரும்பும் இறுக்கினால் பயன் தரும்.

211. எள்ளும் கொள்ளும் வெடிக்கறது.

212. எள்ளத்தனையை, மலையத்தனை ஆக்குகிறது.

213. எள்ளுதான் எண்ணெய்க்காக காயறதுன்னா எலிப்புழுக்கையும் எதுக்கு காயறது.

214. எள்ளத்தனையும் இடமில்லை.

215. எள்ளு விழுந்தால் எடுக்க மகாசேனை, இடறி விழுந்தால் எடுக்க மனிதர் இல்லை.

216. *எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும்*

217. எளிமையாய் இருக்கணுங்கறதுக்காக நிர்வாணமாய் நிற்க முடியுமா

218. எள்ளத்தனை வில்லங்கம் வந்துடுத்து.

219. எறும்பு யானை ஆகுமா, துரும்பு தூணாகுமா?

220. எள்ளு நுழைய இடம் கொடுத்தா, மலையை நுழைச்சிடுவானே

221. எறும்பூர இடம் கொடுத்தால் எருதும் பொதியும் உள்ளே செலுத்துவான்

222. எறும்பூரக்கல்லும் தேயும்

223. எறும்பு வரிசையைப் போல

224. எறும்பும் தன் கையால் எண் சாண்

225. எறும்புக்குத் தெரியுமா எருதின் நோவு

226. என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

227. என் வயிற்றில் இப்படியொரு பிரண்டை வந்து பிறந்ததே

228. எனக்கு இரண்டு கண் போனாலும் பரவாயில்லை, பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணாவது அவியணும்

229. என்னை போல் குரலும் என் அக்காளைப் போல் ஒயிலும் சொன்னது கழுதை

230. என்னையும் பார்த்து இரவல் கேட்கிறே, என் காதையும் பார்த்து கம்மல் கேட்கிறே!

231. என் பொண்ணு சீதேவி, வந்த பொண்ணு மூதேவி.

232. என் தலையிலேயே கை வைக்கிறயா?

233. என் வழி எனக்கு, உன் வழி உனக்கு.

208. चोंच खोलने से पहले कीड़ा पेट के अंदर।

209. तिलांजली दे दी।

210. ईख और तिल कसे तो मज़ा।

211. मुँह में सरसों फूलती है।

212. तिल का ताड़ बनाना।

213. तिल सूखे तेल के लिए, बीठ सूखे क्यों?

214. सुई भर के लिए भी जगह नहीं।

215. तिल गिरे तो उठाने दौड़ पड़े, आदमी गिरा और आंखें देखती भी नहीं।

216. गरीब की आह, तूफ़ान का आगाज़।

217. सादे जीवन का मतलब नंगापन नहीं।

218. थोडी बाधा आ ही गयी।

219. चींटी कब बने हाथी और तिनका कब बने खंभा।

220. अंगुली पकडकर, साफ़ा पकड़ लेना

221. अंगुली पकडकर प्रकोष्ठ पकड़ लेना।

222. रसरी आवत जात तें सिल पर होत निशान।

223. ज्यों पिपीलिका पांति।

224. चींटी भी अपनी अकल से पूरी।

225. चींटी क्या जाने घाव की पीड़ा।

226. जो भी होगा देखा जायेगा।

227. मेरे कोख से ऐसा कपूत जनमा।

228. मेरी दोनों आँख फूटी तो क्या, पडोसी की एक आँख चली जाये।

229. गधे ने कहा - मेरी आवाज़ और मेरी बहन की खूबसूरती।

230. मुझसे उधार, मेरे कान से बाली !

231. मेरी बेटी सुलच्छनी, बहु कुलच्छनी।

232. मेरी बिल्ली मुझसे ही मियाऊँ।

233. मैं अपनी राह, तू अपनी राह।

234. என்ன துரை, பெரிய ஆடு துரை.

235. என்னைப் பார், என் அழகைப்பார் என்றாளாம்.

236. என்றைக்கோ கிடைக்கிற ஆயிரம் பொன்னைவிட இன்றைக்குக்கிடைக்கிற அரைக்காசு மேல்.

237. என்ன புரியுமோ அந்த அளவுக்குத் தான் காதில் விழும்.

238. எருமை இருந்தான்னா பால் கறக்க.

239. எருமை வாங்கறதுக்கு முன்னாடியே நெய் விலை பேசியாறதா?

240. எலி அழறதேன்னு பூனை விடுமா?

241. எமன் கையில் அகப்பட்ட உயிர் போல.

242. எமன் வாயிலேந்து மீண்டாப் போல.

243. எக்கறி வைத்தாலும் இலைக்கறி (கீரை) வை.

244. எட்டின மட்டும் வெட்டும் கத்தி, எட்டாத மட்டும் வெட்டும் பணம்.

245. எட்டு வருஷம் எருமைக்கடா ஏரிக்குப் போக வழி தேடுமாம் (சரியான மரமண்டை).

246. எரிகிற விளக்கானாலும் தூண்டு கோல் வேணும்.

247. எரியற வீட்டை அணைக்க, கிணறு வெட்ட நாள் பார்த்தாப்போல.

248. எண்ணிச் செய்யறவன் செட்டி, எண்ணாமல் செய்யறவன் மட்டி..

249. எனக்கு எதிரில்லை, நெல்லுக்குப் பதரில்லை.

250. என்னைப் போலக் குரலும், என் அக்காளைப் போல ஒயிலும் இல்லை என்கிறதாம் கழுதை.

251. எருமை மாட்டைத் தண்ணீரில் போட்டுக் கொண்டு விலை பேசறாப்போல.

252. எட்டுக்குஞ்சு அடித்தாலும் சட்டிக்கறி ஆகாது.

253. எங்கேத் திருடினாலும் கன்னக்கோல் வைக்க ஒரு இடம் வேண்டும்.

254. எள்ளு விழுந்தால் எடுக்க சேனை (படை) இடறி விழுந்தால் எடுக்க ஆளில்லை.

255. எங்கும் மடமாயிருக்கு, இருக்கத்தான் இடமில்லை.

256. எட்டாப் பூ தேவர்களுக்கு, எட்டும் பூ தங்களுக்கு

257. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகர்க்கு

258. எந்த ஆயுதமும் தீட்டத் தீட்டக் கூர்.

234. कैसा खाँ, बस तीसमारखाँ।

235. मुझे निहारो, मेरी खूबी निहोरो।

236. कल की अशरफी से आज की कौड़ी बेहतर।

237. उतनी ही सुने, जितनी से बात बने।

238. पैसा हो तभी अंटी खोले।

239. कम्मो बिम्मो बुलाने के पहले पूछता है बच्चे का नामकरण कब होगा?

240. चूहा रोये तो क्या बिल्ली छोडे।

241. जैसे काल का कौर।

242. मरते-मरते जान बची।

243. जो भी खाओ थोड़ा साग भाजी भी खाओ।

244. तलवार काटे हाथ की दूरी, पैसा काटे सात समुन्दर की दूरी।

245. उम्र गुजारी पर एक भी बात न आयी।

246. जलते पलीते को भी सहलाना चाहिए।

247. आग लगे तब खोदे कुआँ।

248. सोचकर करनेवाला समझदार, बिन सोचे कूदनेवाला अक़ल का दुश्मन।

249. जोड़ नहीं मेरा कोई।

250. परस्परं प्रशसन्ति अहो रूपं अहो ध्वनि।

251. मोल करे तौल बिना।

252. आठ चूज़ा मारे मुट्ठी भर न होगा।

253. चोर हो तो सेंध कहीं लगाना ही पड़ेगा।

254. लड़के को पकड़ने भीड़, गिरते को उठाने एक भी नहीं।

255. सराये का शुमार नहीं पड़ाव के लिए एक कमरा।

256. असंभव आराधना के लिए, संभव साधना के लिए।

257. नमक हराम का उद्धार कहाँ?

258. सान पर धरे तो धार आती है।

# ஏ

1. ஏகலைவன்னு நினைப்பு.
2. ஏகாதசி விரதம்னு நாக்கை பிடுங்கிண்டு சாவாளா என்ன?
3. ஏச்சும் பேச்சும் தாங்கப் பழகு.
4. ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது.
5. ஏட்டிக்குப் போட்டி.
6. ஏட்டுப் படிப்பு வீட்டிற்கு பயன்படாது.
7. ஏடா கூடக்காரனுக்கு இடம் எங்கே என்றால், இருக்கிறவன் தலை மேலே என்றானாம்.
8. ஏடா கூடக்காரன் எப்படி என்றால், சொன்னதே வேதம், செய்ததே தானம் என்றானாம்.
9. ஏட்டில் அடங்காது எண்ணத்துலங்காது.
10. ஏடா கூடம் எப்படியென்றால் போகிறவன் தலையில் லொக்கென்று அடித்தானாம்.
11. ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடம் கொடுப்பானேன்.
12. ஏச்சி ஏப்பம் விட்டுடுவான்.
13. ஏணி, தோணி, புராணி, நார்த்தங்காய் ஊறுகாய்.
14. ஏணி வைத்தாலும் எட்டாது.
15. ஏணியாய் இருந்து என்றும் உயர்த்து.
16. ஏணி மேலே ஏறினா, இறங்கித்தானே ஆகணும்.
17. ஏணி எல்லோரையும் ஏற்றுமேத் தவிர, தான் ஏறாது.
18. ஏணிப் படியாய் வாழ்ந்தாச்சு.
19. ஏண்டா கல்யாணம் செய்துக்கலைன்னா நீயே பெண்டாட்டியாயிருன்னு சொன்ன கதையாச்சு.
20. ஏண்டா கருடா சுகமா?
21. ஏண்டாத் தென்னை மரத்திலே ஏறினே என்றால் புல்லுப் புடுங்க என்றானாம், ஏதடா தென்னை மரத்திலே புல்லுன்னா, அதுதான் கீழே இறங்கறேன் என்றானாம்.
22. ஏத்தம் உண்டானால் இறக்கமும் உண்டு.

1. समझा अपने को एकलव्य।

2. रोजा रखना है तो क्या भूखों मरना है।

3. खरी-खोटी खामोश सहना सीखो।

4. सीखी बात समस्या न सुलझाये।

5. जैसे को तैसा।

6. पोथी पढि पढि जग मुआ, पंडित भया न कोई।

7. बकवासी बैठे औरों के सिर पर।

8. हठी अपनी बात को आखिरी बात समझता है।

9. कहा भी न जाय और लिखा भी न जाय।

10. हठी दूसरों पर इलज़ाम लगाता है। ज़िद्दी कहे दोष तुम्हारा।

11. निंदा और गाली को क्यों कबूली दें।

12. धोखा देकर डकार जायेगा।

13. सीढी चढाये खुद टिके रहे, नाव पार जाये पर पानी में रहे, मास्टर पढाये पर खुद खस्ता रहे। नींबू का अचार सब हजम करे खुद हजम न हो।

14. सीढ़ी लगाने पर भी छू नहीं सकते।

15. सीढ़ी बनकर सबको चढ़ाओ।

16. चढ़ाव के बाद उतार होना ही है।

17. सीढ़ी सब को ऊपर पहुँचाये, खुद अपने ठिकाने रह जाये।

18. ज़िन्दगी कट गयी सीढ़ी बनी बनी।

19. क्यों नहीं शादी की? बस तेरा इंतजार था।

20. शिवजी के गले का सांप पूछे 'हे गरुड' कैसे हो?

21. क्यों नारियल के पेड पर चढ़ा? घास छीलने, घास वहाँ कहाँ? जी नहीं, सो उतर रहा हूँ।

22. हर चढ़ाव के बाद उतार होता ही है।

23. ஏத்தி விட்ட ஏணியை எட்டி உதைச்சாப்போல.

24. ஏதாவது ஒரு புள்ளியிலிருந்து தானே கோலம் தொடங்கணும்.

25. ஏதோ நெருடல் இருக்கு.

26. ஏதாவது வியாஜத்தை (காரணம்) வைச்சிண்டு வந்துடுவானே.

27. ஏத்தம் மேலே போனா கீழே வந்துதானே ஆகணும்.

28. ஏந்திக் குடிக்கக் கூழ் இல்லை, பிடிச்சித் தின்ன சோறு கேட்குதோ?

29. ஏமாந்த சோணகிரி.

30. ஏமாந்தவன் ஏமாந்து கெட்டான், ஏமாற்றியவன் இடி விழுந்து கெட்டான்.

31. ஏமாந்தவன் தலையிலே மிளகாய் அரைப்பது போல.

32. ஏமாந்தால் எருமை மாடும் ஏரோப்ளேன் விடும்.

33. ஏமாந்த ஏகாம்பரி, இளிச்சவாய் இந்திராணி.

34. ஏர் நடந்தால் ஊர் நடக்கும்.

35. ஏவற் பேய் கூரையைப் பிடுங்கும்.

36. ஏவின குரலுக்கு எட்டாள், கூவின குரலுக்குப் பத்து ஆள்.

37. ஏழைக்கும் இதயமுண்டு.

38. ஏழையின் கடன் ஊருக்கெல்லாம் தெரியும்.

39. ஏழைன்னா இளப்பம், பணக்காரன்னால் இளிப்பு.

40. ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டை.

41. ஏழைச் சொல் அம்பலம் ஏறுமா?

42. ஏழை பணக்காரனானால் நடுப்பகலில் நட்சத்திரம் பார்ப்பான்.

43. ஏழையின் சிரிப்பில் இறைவனிருக்கிறான்.

44. ஏழை விட்டக் கண்ணீர் கூரியவாளை ஒக்கும்.

45. ஏழை வீட்டுச் சோறு உழைப்புச் சோறு.

46. ஏழ்மை பேசி இடரில் விழாதே.

47. ஏழையின் கண்ணீர் வீண் போகாது.

48. ஏழைப் பங்காளன்.

49. ஏழைக்கு ஏழை தான் உதவுவான்.

23. जिस थाली में खाया, उसी में छेद किया। जिसने चढाया, उसे गिराया।
24. हर काम के लिए कोई आरंभ होना ही है। हर मन्जिल का एक पहला कदम है।
25. दाल में कुछ काला है।
26. किसी बहाने वह आ जायेगा।
27. ढेंकली पहले उतरे और पीछे चढ़े।
28. पीने को पानी नहीं, माँगते शरबत।
29. गाँव का घसियारा। बनियन में भटकता बेचारा।
30. धोखा खाया थोडा दुखी हुआ। धोखा दिया सिर पर बिजली गिरी।
31. बुद्धू के सिर पे पीसे मिर्ची-मसाला।
32. ज़रा असावधान रहे तो भैंस भी उड़ने लगेगी।
33. भोली-भाली हर गली में घूमी।
34. हल चले तो गाँव चले।
35. उधार का भूत छत खा जाये।
36. हाथ हिलाये तो आठ, सर हिलाये तो साठ।
37. गरीब का भी दिल होता है।
38. गरीब उधार ले तो गांव भर जाने।
39. गरीब को सताये, अमीर के सामने गिड़गिड़ाये।
40. सुदामा का तंदुल दान।
41. गरीब की बात कौन मानेगा।
42. रंक चले सर छत्र धराई।
43. गरीब की हँसी में बसे राम-रहीम।
44. गरीब के आँसू तेजाब-सा जलाएं।
45. गरीब का खाना मेहनत का खज़ाना।
46. गरीबी जताकर परेशान न होना।
47. गरीब के आँसू खाली न जाये।
48. गरीबनवाज़।
49. गरीब ही गरीब की मदद करे।

50. ஏழைக்கும், மோழைக்கும்தான் அந்நியோன்னியம்.

51. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.

52. ஏறுகிறவன் சூத்தை எத்தனை நேரம் தாங்க முடியும்?

53. ஏறுகிற குதிரைக்கு எருதே மேல்.

54. ஏறியோட பகை சௌசம் செய்யமாட்டேன்.

55. ஏறி சவாரி செஞ்சிடுவானே.

56. ஏற்கனவே துர்குணி, அதிலும் இப்போ கர்ப்பிணி.

57. ஏற்கனவே மாமியார் அலங்கோலம் அதிலும் இப்போ அக்கிலி - பிக்கிலி.

58. *ஏறின ஏணியை எட்டி உதைச்சானாம்.*

59. ஏற்கனவே பேய்க் கோலம், அதிலும் இப்போ கேட்கவே வேண்டாம்.

60. ஏறுமுகமிருந்தால், இறங்குமுகமும் இருக்கத்தான் செய்யும்.

61. ஏழாம் பொருத்தம்.

62. ஏழரை நாட்டு சனியனை எழுப்பி விட்ட கதையாப் போச்சு.

63. ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச் சுமை.

64. ஏய்த்து பிழைப்பவன் ஏமாந்து போவான்.

65. ஏழைக்கு மருந்து ஒரு பிடி சோறு.

66. ஏர் உழுகிறவன் இளப்பமானால், எருது மச்சான் முறை கொண்டாடும்.

67. ஏறப் படாத மரத்திலே எண்ணாயிரம் காய்

68. ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை.

69. ஏர் முனைக்கு நேர் முனை ஏது?

70. ஏலேல சிங்கன் பொருள் ஏழு கடல் போனாலும் திரும்பும்.

71. *ஏன் என்பாருமில்லை, எடுத்துப் பார்ப்பாருமில்லை.*

72. ஏர்பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியம்.

50. गरीब और फटीचर चले साथ साथ।

51. गरीब के सर पर हो जाते सब सवार।

52. चढते के चूतड को कहाँ तक थामे?

53. हठीले घोड़े से बैल ही बेहतर।

54. झील से दुश्मनी शौच न करूंगा।

55. चढ़कर सवारी कर देगा, सुस्त पडे तो सर चढेगा।

56. वैसे ही दुर्गुणी तिस पर है गर्भिणी। पहले ही उल्लास ऊपर से फागुन काम।

57. पहले ही मियां बावरे, अब भूतन ने चपेटे।

58. चढ़ने के बाद नसैनी को लात मारी।

59. वैसे ही भुतहा चेहरा, अब बस पूछिये नहीं।

60. जहाँ चढ़ाव हो वहाँ उतार होगा ही।

61. कैसी यह जोड़ी मिलायी मेरे राम।

62. साढ़े-साती को जगाने की बात है।

63. हुक्म तो कहने भरका, काम पसीने भर का।

64. धोखा दोगे तो धोखा खाओगे। जैसा करोगे वैसा भरोगे।

65. गरीब की दवा रोटी का टुकडा।

66. किसान की फजीहत हो तो गधा रिश्तेदारी माँगेगा।

67. जैसे पेड़ खजूर का फल लागे अति दूर।

68. खेत का गीत स्वर्ग संगीत।

69. हल की नोक के बराबर क्या है?

70. होशियार की चीज सात समुन्दर पार।

71. पूछनेवाला भी नहीं, परखनेवाला भी नहीं।

72. हल पकड़े तो क्या? घरवाली का सुहाग ही फले।

# ஐ

1. ஐதர் காலம்.
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
3. ஐந்து விரலும் ஐந்து கன்னக்கோல்.
4. ஐந்தாம் படை.
5. ஐந்து விரலும் ஒண்ணு போலிருக்குமா?
6. ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான்.
7. ஐந்து பணத்திலே கல்யாணமாம், அதிலே கொஞ்சம் வாண வேடிக்கையாம்.
8. ஐந்து பணம் கொடுத்து அடிக்கச்சொல்லி பத்துப் பணம் கொடுத்து ஓயச்சொன்ன கதையாச்சு.
9. ஐயனார் கோவில் குதிரை போல.
10. ஐயனார் கை அரிவாள்போல.
11. ஐப்பசி மருதாணி அரக்காய்ப் பத்தும்.
12. ஐயமிட்டு உண்.
13. ஐயர் வீட்டுப் பொண்ணு நிழல் பட்டாக் கூட கறுப்பனும் சிகப்பாயிட மாட்டானா?
14. ஐயர் வரும் வரை அம்மாவாசைக் காத்திருக்காது.
15. ஐயர் அம்மா கைக்குள்ளே அடக்கம்.
16. ஐயா கதிர் போல அம்மா குதிர் போல.
17. ஐயோ பாவம்னா ஆறு மாசப் பாவம்.
18. ஐயங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோட.
19. ஐயோன்னு சொல்ல ஆளும் இல்லே ஆகான்னு சொல்ல நாதியுமில்லே.
20. ஐயமான காரியத்தை செய்தல் ஆகாது.
21. ஐயங்கரை போனாலும் தன் நிழல் தன்னோடதானே?
22. ஐயனாரு ஆத்தோட வேட்டைக்குப் போனா கறுப்பண்ணாசாமி சும்மாக் கரையிலாவது ஆடாதா?
23. ஐஞ்சுக்கும் பத்துக்கும் ஆலாப் பறக்கறான்.

1. दकियानूसी।
2. बचपन बिगड़ा तो जीवन बिगड़ा।
3. बडा होशियार चोर। हर उंगली में चोरी का कमाल।
4. भेदिया और गुप्तचर।
5. पाँचों उँगलियाँ बराबर नहीं होती।
6. पाँच बेटी पैदा हुई क्या, कंगाली का न्योता मिला।
7. पाँच रुपये में शादी उसमें आधा खेल तमाशा। कौड़ी खर्च में शादी और उसमें आतिशबाजी।
8. पाँच रुपये देकर रोने को कहा दस रुपये देकर बंद कराया।
9. जैसे मंदिर का खड़ा घोड़ा।
10. द्वारपाल के हाथ के आरा-सा।
11. आश्विन की मेहंदी, लाली पर लाली।
12. खिलाकर खाओ।
13. ब्राह्मण की बेटी की परछाई भी गोरी होती है।
14. पांडे के आने तक पूजा रुकेगी क्या?
15. साहब बीबी का गुलाम।
16. साहब मूसल सा, बेगम ओखली सी।
17. तरस खाओगे, उजड जाओगे।
18. कोई कितना भी भागे, परछाईं से दूर नहीं भाग सकता।
19. तरस खानेवाला भी नहीं, तारीफ़ करनेवाला भी नहीं।
20. संदिग्ध काम से सदा बचना।
21. परछाईं का संग कभी न छूटे।
22. बड़े स्वामी डूब जाये तो छोटे स्वामी मौज़ मनाये।
23. छूट्टे रेज़गारी भी हाथ में नहीं। टुकड़ों के लिए तरसता है।

24. ஐயனார் கோவில் மண்ணை மிதிச்சவா அத்தனை பேரும் பத்திரக்காளி.

25. ஐங்காதம் போனாலும் அறிமுகம் வேண்டும்.

26. ஐங்கலக கப்பியில் கழுவின கப்பி.

27. ஐங்காயம் இட்டு அரைத்தாலும் கரைத்தாலும் தன் நாற்றம் போகாதாம் பேய் சுரைக்காய்க்கு.

28. ஐயாவுக்கு வித்தையில்லை, அம்மாளுக்கு கர்வமில்லே.

29. ஐவருக்குத் தேவி அழியாத பத்தினி.

30. ஐயப்பட்டவனுக்கு மெய்யும் பொய் போலத்தான் தோணும்.

31. ஐந்தும் மூணும் வகையா இருந்தா அறியாப் பெண்ணும் விருந்துக்கு சமைச்சுடுவா.

24. शिवजी के दरबार में सभी दुर्गा माई।

25. परिचय नहीं तो पहुँच नहीं।

26. फीकी पत्ती में बनी चाय। कीचड़ धोकर बनी मलाई।

27. सुअर को नहाये धोये सुगन्धि कहाँ? महँगी सजावट पर सस्ती सूरत।

28. पति बुद्धू। पत्नी साधु।

29. पाँच की बीबी सदा सुहागिन।

30. शक्की सच को भी झूठ ही समझता है।

31. सब चंगा तो बेटी हमारी गंगा।

# ஒ

1. ஒட்டகக் கோணலை நிமிர்த்த முடியுமா?

2. ஒட்டுத் திண்ணையில் பட்டுப்பாய் போட்டவன்.

3. ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாச்சு.

4. ஒட்டி உறவாடி கழுத்தை அறுத்துப்புட்டான்.

5. ஒட்டடை குச்சியாட்டமா?

6. ஒட்ட ஒட்ட நறுக்கினாலும் துளுத்துக்கிட்டேயிருக்கிற ஒதியமரம் போல.

7. ஒடிந்த கோலானாலும் ஊன்றுகோல் ஆகும்.

8. ஒண்ணு கிடைக்கணும்னா, ஒண்ணை இழந்துதான் ஆகணும்.

9. ஒண்ணும் தெரியாத பாப்பா, ஒசத்தி போட்டுண்டாளாம் தாழ்ப்பாள்.

10. ஒண்ட இடமுமில்லாம, ஒதுங்க நிழலுமில்லாம என்ன வாழ்க்கை?

11. ஒண்ட இடம் கொடுத்தா, பிண்டத்துக்கே ஒலை (உலை) வைச்சிடுவானே.

12. ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டித்தாம்.

13. ஒண்ட வந்த பிடாரி ஊர்க்காவல் தெய்வத்துக்கு முடை சொன்ன கதைதான்.

14. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு.

15. ஒண்ணை ஒன்பதுன்னும், தூணைத்துரும்புன்னும் சொல்லறவனாச்சே.

16. ஒண்ணைப் பத்தாக்கி, பத்தை நூறாக்கிடுவா.

17. ஒண்ணா சேர்ந்தா நன்னா வாழலாம்.

18. ஒதியமரம் பெருத்தால் மட்டும் உரலாகுமா?

19. ஒதியமரம் தான் தூணாகுமா, ஓட்டாங்கிளிஞ்சல் காசாகுமா?

20. ஒத்தை பனைமரம் போல.

21. ஒத்தைக் கண்ணி கல்யாணத்திலே ஓராயிரம் இடைஞ்சல்களாம்.

22. ஒத்தை மாட்டை ஏர்ல பூட்ட முடியுமா?

23. ஒத்தை மரம் தோப்பாகுமா?

24. ஒத்தைக் காலிலே நிக்கறான்

1. ऊँट के टेढ़ेपन को कौन सीधा करे।

2. बूढ़े घोड़े पर सोने की ज़ीन।

3. ऊँट को जगह दे तो डेरा तेरा नहीं।

4. गले लगाकर छुरी फेर दी।

5. बाँस की छड़ी-सी पतली।

6. रक्त बीज-सा जितनी बूंदें गिरी उतने राक्षस और बने।

7. टूटी छड़ी सही, सहारा बनेगी।

8. कुछ-खोये, कुछ पाये।

9. कहे अंधे सियार मारे सौ-सौ खरगोश। ऐसा नखरा कि शेर बने बकरा।

10. न छत, न छावनी, यह जीना भी क्या जीना।

11. उँगली दे तो पहुँचा पकड़ लेगा।

12. शहर का भूत घर के भूत को भगाये।

13. जैसे भूत कहे, मेरा भगवान से रिश्ता।

14. बस एक ही बेटा, आँख का तारा। एक ही पुत्री कनक की पुतली।

15. बीस को अस्सी और खंभे को तिनका बतानेवाला।

16. एक को करे दस, और दस से निकाले हजार।

17. मिल्लत में ताकत। संग-संग तो चंगा रहे।

18. बाँस बड़े तो क्या, मूसल नहीं बन सकता।

19. बाँस से क्या खंभा बनेगा, कौड़ी से क्या बात बनेगी?

20. अकेली हथेली ताली न सुनाये।

21. कानी की शादी में अड़चन ही अड़चन।

22. अकेला बैल हल में किस काम का।

23. पेड़ अकेला, बने न बगीचा।

24. जिद्द पकड़ा है।

25. ஒத்துக்கு மத்தளம் வாசிக்கறாப்போல.

26. ஒத்து ஊதறதிலே கெட்டிக்காரன்.

27. ஒத்து ஊதினாத்தான் ஒருவாய் சோறாவது கிடைக்கும்.

28. ஒத்து வராததை உதறித்தள்ளு.

29. ஒப்புக்கு ஒப்பாரி வைக்கறவனாச்சே.

30. ஒப்புக்கு நடவடிக்கை எடுத்தாத் தப்புக் கணக்காய்த்தான் போகும்.

31. ஒப்புக்கு மாங்கொட்டை ஊருக்கு சப்பாணி.

32. ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம் உள்ளேப் பார்த்தால் ஈறும் பேனுமாம்.

33. ஒரு ஈ காக்கையைக் காணோம்.

34. ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்தாற் போல்.

35. ஒரு கண்ணுக்கு வெண்ணெய்! மறுகண்ணுக்கு சுண்ணாம்பா.

36. ஒரு ஊருக்கு ஒரு வழிதானா?

37. ஒரு ஊரிலே இரண்டு பைத்தியக்காரன்.

38. ஒரு உரையில் இரண்டு கத்தியா?

39. ஒரு கையைத் தட்டினா ஓசை வருமா?

40. ஒரு கதவு மூடினா, இன்னொரு கதவு தானே திறக்கும்.

41. ஒரு காக்கா செத்தா ஊர்க்காக்காய் அத்தனையும் அடிச்சிக்கிட்டு அழறாப் போல.

42. ஒருத்தனுக்குத் தெரிஞ்சா ரகசியம்.

43. ஒரு பக்கம் பெய்தால், ஒரு பக்கம் காயும்.

44. ஒரு காதாலே வாங்கி, இன்னொரு காதாலே விட்டுட வேண்டியது தான்.

45. ஒரு கை தட்டினா ஓசை வருமா?

46. ஒரு குருவி இரை எடுக்க, ஒன்பது குருவி வாய்த்திறக்க.

47. ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டு.

48. ஒரு பொறி போதுமே.

49. ஒரு பணம் கொடுத்து அழச்சொல்லி, ஒன்பது பணம் கொடுத்து ஓயச் சொன்ன கதையாச்சு.

50. ஒரு பிடி விதையும் ஒரு கலமாகும்.

25. ज्यों गीत के साथ ताल बिठाये।

26. हाँ में हाँ मिलाने में होशियार। जी हुजुरी में होशियार।

27. हाँ में हाँ मिलाओ तो काम बनेगा ही।

28. जंचे नहीं तो फेंक दो।

29. बहानेबाज़।

30. झूठ-मूठ कार्रवाई निकले गलत ही।

31. घड़ी की सूईऋ पड़ी की पड़ी।

32. वेणी बांधी फूलों की, जूँ की चली बरात।

33. न मक्खी न कौआ, बिलकुल वीरान।

34. जैसे घड़े भर दूध में, जौ भर ज़हर।

35. किसी को खिलाये जिलेबी, किसी की करे पिटाई।

36. मंजिल एक, रास्ते अनेक। हमारी भी एक रविश खुलेगी ही।

37. गाँव एक, पागल दो।

38. एक म्यान में दो खड्ग देखा सुना न कोय।

39. एक हाथ से ताली नहीं बजती।

40. एक रास्ता बंद हो जाय तो दूसरा खुलेगा ही।

41. कौआ एक मरे, चिल्लाये सारे कौए।

42. राज़ की बात बस एक कान तक।

43. कहीं धूप, कहीं बरसात। कहीं दिया, कहीं अन्धेरा।

44. एक कान से सुनना और दूसरे कान से छोड़ देना।

45. एक हाथ से बजे न ताली।

46. एक कमाये, कुनबा खाये। चोंच बराबर चिडिया लाये, पूरा घोंसला खाये।

47. एक गाल में थप्पड मिले तो दूसरा गाल दिखाना।

48. काफी है इक चिनगारी।

49. चिकोटी काटकर सताये, शहद खिलाकर खुश करे।

50. मुट्ठी भर बीज खेत भर सोना बनता है।

51. ஒரு குருடன் இன்னொரு குருடன் கிட்டே வழி கேட்டாப்போல.

52. ஒரு கூடைக் கல்லும் தெய்வமானால், கும்பிடறது எந்தக் கல்லை.

53. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

54. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்.

55. ஒரு நாள் கூத்துக்கு மீசையை சிரைச்சாப் போல.

56. ஒரு கூடைப் பழத்தையும் ஒரு அழுகல் பழம் கெடுத்துடும்.

57. ஒரு கூடை செங்கலும் பிடாரி.

58. ஒரு வாய் சோத்துக்கு நாயா அலையறான்.

59. ஒரு தலை ராகம்.

60. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்குமா?

61. ஒரு விளக்கைக் கொண்டு ஓராயிரம் விளக்கேற்றலாம்.

62. ஒரு முறம் பெருமை, புடைத்து எடுத்தால் ஒன்றுமில்லை.

63. ஒருவராகப் பிறந்தால் தனிமை இருவராகப் பிறந்தால் பகைமை.

64. ஒரு போதும் தவறு செய்யாதவன் ஒன்றுமே செய்யமாட்டான்.

65. ஒருவனுக்கு உணவாவது, மற்றவனுக்கு நஞ்சாகும்.

66. ஒரு மனிதன் கீழே விழுந்தால் ஊரே அவன் மேல் ஏறி ஓடும்.

67. ஒரு சின்ன ஓட்டை கூட பகல் வெளிச்சத்தை காட்டிவிடும்.

68. ஒரு கோழை ஊரையே கோழையாக்கி விடுவான்.

69. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

70. ஒரு வழி அடைச்சா ஒன்பது வழித்திறக்கும்.

71. ஒரே கந்தர்கோலமா இருக்கு.

72. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.

73. ஒரே குட்டையில் ஊறின மட்டைதானே?

74. ஒற்றுமையே உயர்வு.

75. ஒழுக்கம் என்னும் அஸ்திவாரத்தில் தான் இன்பமெனும் மாளிகை அமையும்.

76. ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம் உயிருனும் ஓம்பப்படும்.

77. ஒழுக்கத்தை விற்று செல்வத்தைத் தேடாதே.

51. जैसे अंधा अंधे से रास्ता पूछे।
52. सब पत्थर भगवान बने तो किसकी पूजा करे?
53. एक काम से सौ अंजाम। एक की पहचान सब की पहचान।
54. जब झूठ बने बाप, तो संतान निकले आठ-आठ।
55. मंच पर नाचने मूंछ की सफाई की। एक दिन का खेल और मूंछ मुडाया।
56. एक सड़ी मछली सारा तालाब गंदा करे।
57. सारे के सारे बने बेकार।
58. मुट्ठी भर खाने के लिए दर-दर भटकता फिरे।
59. एक तरफ़ा प्यार।
60. वक्त बदलता रहता है।
61. जोत से जोत जगाते चलो।
62. गजब की तारीफ़ असल में कुछ नहीं।
63. अकेले तो तनहाई साथ चले तो लड़ाई।
64. काम करे तो गलती, न करे तो आराम।
65. किसी का खाना, किसी का ज़हर।
66. फिसल गये तो सब तेरा दुश्मन। एक ठोकर और सब के हाथ में पत्थर।
67. एक छोटा छेद भी राज़ बता देगा।
68. एक कायर तो सारा शहर कायर। कायर की टट्टी ढीली शहर भर में बू।
69. एक पंथ दो काज।
70. एक रास्ता बंद तो, नौ-नौ रास्ते खुलेंगे।
71. सब गड़बड़ घोटाला।
72. बूंद-बूंद से घट भरता है।
73. एक ही ताल में भीगा भैंसा।
74. संघे शक्ति कलौ युगे / एक से एक मिले तो क़तरा बन जाता है दरिया।
75. चरित्र ही संतोष की बुनियाद है।
76. चरित्र उद्धार का जरिया है।
77. चरित्र बिगाड़कर धन न जोड़ना।

78. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

79. ஒத்தைக்கால் நாரை போல.

80. ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.

81. ஒண்ணா வைச்சு மண்ணாப் போகாதே.

82. ஒழுக்கம் என்பது நெடுநாள் வழக்கம்.

83. ஒழுங்கு ஒரு பணம், சளுக்கு (டம்பம்) முக்கால் பணம்.

84. ஒரு நாளும் சிரிக்காதவன் திருநாளில் சிரித்தான், திருநாளும் வெறுநாளாச்சுது

85. ஒன்றான தெய்வம் ஒதுங்கி கிடக்கறச்சே மூலை வீட்டு தெய்வம் குங்குலியம் கேட்குதாம்.

86. ஒரு முழுக்கிலே முத்து எடுக்க முடியுமா?

87. ஒருவன் அறிந்தால் ரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.

88. ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும், ஒட்டா விட்டால் கட்டிலும் கொள்ளாது.

89. ஒரு மரத்துப் பட்டை ஒரு மரத்திலே ஒட்டுமா?

90. ஒருமைப்பாடில்லாத குடி ஒருமிக்கக் கெடும்.

91. ஒத்தைக்காலும், ஒண்டிகட்டையுமா சம்சாரம் (குடித்தனம்) செய்யறான்.

92. ஒரு பிள்ளை பெத்தவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெத்தவளுக்கு நடுத்தெருவிலே ஓடு.

93. ஒரே சமயத்திலே இரண்டு தோணியிலே கால் வைக்க முடியுமா?

94. ஒரு சுருட்டு பத்து நாள் பிடிப்பான்.

95. ஒருதலை ராகம் பலிக்காது.

96. ஒரு மனப்படு, ஓதுவார்க்கு உதவு.

97. ஒருவனை கொன்றவன் உடனே சாவான். பலரைக் கொன்றவன் பட்டமாளுவான்.

78. संघै शक्ति कलौ युगे। एक से एक मिले तो ज़र्रा बन सकती है परबत।

79. ज्यों बगुला भगत। ठहरा किनारा, उछली मछली पकडा चोंच से।

80. तेरी तिजोरी के लिए दुहरी तालाबंदी।

81. मिलाकर रखोगे तो नुकसान ज्यादा।

82. चरित्र दीर्घकाल का अभ्यास है।

83. सादगी सस्ती, दिखावा महँगा।

84. बुद्धू बाबू हाथ उठाये, बनी बनायी बात बिगाड़े।

85. मालिक खामोश है और नौकर की चाल में आडंबर।

86. एक ही गोते में मोती नहीं मिलते।

87. राज़ बस एक कान तक।

88. जुड़ जाये तो बात बन जाये, रूठे तो बात बनने से रहे।

89. एक पेड़ की छाल, दूसरे पेड़ पर न जुडे।

90. एकता नहीं तो विनाश निश्चित, बिखरे बिखरे हज़म हज़म।

91. उसकी जीवन चक्की एक पाट से चलती है।

92. एक ही संतान तो घर में भोजन ; दो-चार संतान तो दर-दर भीख।

93. एक साथ दो नावों पर कैसे करे सैर।

94. एक बीडी दस पाँच धुआँ उडाये।

95. अकेला चना भाड नहीं फोड सकता।

96. एक मन धरो, भक्तों की पूजा करो।

97. एक की हत्या करे तो फांसी, अनेक की करे तो मिल जाए गद्दी।

# ஓ

1. ஓங்கி அறைந்தால் ஏங்கி அழ சீவன் இல்லை.

2. ஓசிப் பொடி வாங்கி நாசியில் போட்டாலும் காசிக்குப் போனாலும் கருமம் தீராது.

3. ஓட்டை சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.

4. ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.

5. ஓட்டை சட்டியை உலையில் ஏத்த முடியுமா?

6. ஓட்டை வாளியில் தண்ணி சேந்தினாப் போல.

7. ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினாப் போல.

8. ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.

9. ஓட்டைத் தோண்டிக்கு அறுந்து போன கயிறு சரி.

10. ஓடறவனை விரட்டுற தைரியசாலி.

11. ஓடறத் தண்ணியை அள்ளிக் குடிச்சா யாருக்குத் தெரியும்?

12. ஓட விட்டுட்டு விரட்டறாப் போல.

13. ஓடற கழுதை வாலைப் பிடித்தா உடனே கிடைக்கும் பலன் (உதை).

14. ஓட ஓட விரட்டறது.

15. ஓடவும் மாட்டான் பிடிக்கவும் மாட்டான், ஓயாமல் பேசுவான்.

16. ஓடமும் வண்டியிலே போகும், வண்டியும் ஓடத்திலே போகும்.

17. ஓடி ஓடி உழைச்சாலும் ஒட்டறதுதான் ஒட்டும்.

18. ஓடி ஒரு கோடி தேடறதைவிட, உட்கார்ந்து ஒரு காசு தேடறது மேல்.

19. ஓடி பழக்கமுள்ள கால் நிற்காது.

20. ஓடுகாலி.

21. ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு.

22. ஓடுகிற வெள்ளம் அணையில் நிற்குமா?

23. ஓடறவனைக் கண்டால் துரத்தறவனுக்கு இளக்காரம்.

24. ஓடும் குதிரையை ஓட்டத் தேவையில்லை.

1. थप्पड़ लगाये तो रोने का भी दम नहीं।
2. मुफ्त की सूंघनी नासिका में डालकर काशी जानेवाला करम गति नहीं टाल सकते।
3. बेकार क्यों न हो, काम बने तो सही।
4. टूटी नैया सात खेवैये।
5. फूटा घड़ा क्या पानी भरेगा।
6. बाल्टी में छेद और पानी भरते जाएँ।
7. टूटी छड़ी, तांबे की मूठ
8. घर का नुकसान घर को ही भरना है।
9. घडा टूटा, रस्सी टूटी। पानी भरा, पानी रूठा।
10. भागते का पीछा करे, खड़े से डरे।
11. बहते पानी में हाथ धोये, किसे पता क्या हुआ।
12. भगाकर पीछा करना।
13. भागते गधे की पूँछ पकड़े तो झट मिलेगा फल (लात)।
14. भागते को भगाये।
15. न भागेगा, न पकड़ेगा, बस बातें करता रहेगा।
16. कभी नाव गाड़ी पर, कभी गाड़ी नाव पर।
17. उतना ही पाये जितना नसीब में।
18. पसीने के करोड़ से बैठी कौड़ी बेहत्तर।
19. दौड़ते पैर कभी ठहरेंगे नहीं।
20. भगोड़ा। फक्कड आवारा किसे गवारा।
21. बगुला भगत मछली की तलाश में।
22. बहते पानी को बाँधे कौन।
23. भगोड़े को देखकर सभी करे मजाक।
24. भागते घोड़े के लिए लगाम की क्या जरूरत।

25. ஓடும் நாயைக் கண்டால் குரைக்கும் நாய்க்கு இளக்காரம்.

26. ஓடைத் தண்ணி கொக்கு போல.

27. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.

28. ஓந்தி வேலிக்குக் காவல், தவளைத் தண்ணீருக்குக்காவல்.

29. ஓரம் கட்டியாச்சு.

30. ஓரம் சொன்னவன் யாருக்கும் ஆகான்.

31. ஓர் உயிர் ஈருடல்.

32. ஓர் ஊர் பேச்சு. ஓர் ஊருக்கு ஏச்சு.

33. ஓரக் கண்ணனை பழிக்கிறானாம், ஒற்றைக் கண்ணன்.

34. ஓடறதுக்கு முன்னாடி நடக்கக் கத்துக்கோ.

35. ஓடுகிற பாம்பை பிடிக்கிற பருவம்.

36. ஓடிப் போனவளைத் தேடிப் போகாதே.

37. ஓதுவார்க்கு உதவு.

38. ஓரம் சொன்னவன் ஆருக்கு ஆவான்.

39. ஔடதச் சித்தியும் ஆண்டவன் அருளே.

25. भूंकता कुत्ता भागते कुत्ते को बुरा माने।

26. बहती सरिता, पास खड़ा बगुला।

27. पढ़ाई की आदत सदा बनाये रखना।

28. बाडे पर गिरगिट और पानी में मेंढक।

29. परे रख दिया। पंगत से निकाल दिया।

30. चुगलखोर सबका दुश्मन।

31. दो तन एक मन। दो ज़िस्म और एक जान।

32. एक देश की बोली दूसरे देश की गाली।

33. काना कहे अन्धे से मेरे सामने सारी दुनिया।

34. पहले चलना सीखो, फिर दौड़ना।

35. सरकते सांप को पकडने की आयु।

36. भाग गयीं तो पीछा न करो।

37. साधु सन्तों की सेवा करो।

38. चुगलखोर नाशकारी।

39. औषध से लाभ भी ईश्वर की कृपा से ही।

# க

1. கக்கத்திலேக் குட்டியை இடுக்கிண்டு ஊரெல்லாம் தேடறான்.

2. கக்க வெச்சிடுவான்.

3. கங்கையிலே பிறந்தாலும் நத்தை சாளக்கிராமம் ஆகாது.

4. கங்கணம் கட்டியாச்சு

5. கங்கையிலே குளிச்சாலும் பண்ணின பாவம் தொலையாது.

6. கங்கையிலேக் கலந்த வாய்க்கால் போல.

7. கங்கையே கங்கையில் குளிச்சாப் போல.

8. கங்கையிலேக் கலந்த சாக்கடையும் கங்கையானாப் போல.

9. கங்கையும் கைக் கிண்ணத்தில் வந்துவிடுவாள்.

10. கங்கையைக் குடத்துள் அடக்கமுடியுமா?

11. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?

12. கங்கையின் பயணம் கவனிக்கப்படும். சாக்கடையின் பயணத்தை யார் கவனிப்பார்?

13. கங்கையில் படர்ந்தாலும் பேய் சுரைக்காய் கறிக்கு உதவாது.

14. கங்கையில் மூழ்கினாலும் பாவம் தொலையலை.

15. கச்சைக் கட்டிண்டு வந்துட்டாள்.

16. கசடருக்கு இல்லை கற்றோர் உறவு.

17. கசையடியோ, வசையடியோ?

18. கஞ்சி வார்க்க ஆள் இல்லாமல் போனாலும், கச்சை கட்ட ஆள் இருக்கு.

19. கஞ்சிக்கே இல்லாதவன் காஞ்சிபுரம் பட்டுக்கு ஆசைப்பட்டாப் போல.

20. கஞ்சியோ, கூழோ கலந்து குடிச்சாத் தனி ருசிதான்.

21. கஞ்சி கலயத்தைக் காக்கா உருட்டினாப் போல.

22. கஞ்சி கலயத்திலே பல்லி விழுந்தாப் போல.

1. मुट्ठी में अंगूठी, गली-गली में तलाश।
2. उगलवा देगा। पेट में दाढी।
3. हर पत्थर सालिग्राम नहीं बनता।
4. कमर कस लिया।
5. इतना पाप, गंगा नहाने से थोड़े ही जायेगा।
6. गंगा में संग पायी नाली सा।
7. ज्यों गंगा ही गंगा नहाये।
8. इक नदिया इक नार कहावत मैलो नीर भरो, जब दोउ मिली इक बरन भये सुरसरी नाम पड़ो।
9. मन चंगा तो कठौती में गंगा।
10. गंगा को क्यूं घड़े में भरोगे।
11. गंगा नहाने से गधा घोड़ा नहीं बनता।
12. गंगा चले तो लोग देखें, नाली चले तो कौन देखे।
13. गंगा में पैदा होने से क्या जंगली तुरई थोड़े ही खा सकते हैं।
14. गंगा नहाने पर भी पाप न धुला।
15. कमर कसके आ गयी लडने।
16. मूरख न पाये पंडित की संगत।
17. कशाघात या शब्दाघात। बन्दूक की गोली या बोली की गोली।
18. खिलाने कोई नहीं, लड़ने झगडने सब तैयार।
19. ज्यों भिखारी चाहे घोडे पर सवारी।
20. रूखी-सूखी भी खाओ मिलकर सब एक रहो।
21. ज्यों रोटी का आखिरी टुकड़ा कौआ छीन ले जाय।
22. भात की कलसी, छिपकली जा गिरी।

23. கஞ்சியானாலும் குளித்துக் குடி. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

24. கஞ்சிக்கே இல்லாதவன் பஞ்சு மெத்தைக்கு ஆசைப்பட்டாப் போல.

25. கஞ்சி வரதப்பான்னா, எங்கே வரதப்பா என்றானாம்.

26. கட்டினவனுக்கு ஒரு வீடு, கட்டாதவனுக்கு பல வீடு.

27. கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் காத வழி வராது.

28. கட்டைக் கிடக்கிற கிடையைப் பார். கழுதை குதிக்கிற குதியைப் பார்.

29. கட்டிய வீட்டுக்கு எட்டு வக்கணை.

30. கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்லறவனாச்சே.

31. கட்டையிலே போற வேளையிலே கையிலே பிள்ளை வந்தாப் போல.

32. கட்டை காடு போற மட்டும் திருந்த மாட்டான்.

33. கட்டறுத்தக் காளை கம்பங் கொல்லையில் புகுந்தாப் போல.

34. கட்டிய தாலிக்குப் பின் தாலி முடியணுமா.

35. கட்டறுத்துக் கொண்டு ஓடி வரும் கன்றுக்குட்டி போல.

36. கட்டினவனைக் கண்டதும், கள்ளப் புருசன் நழுவினாப் போல.

37. கட்டுத் துறை சரியாக இருந்தால், கன்றுக்குட்டித் துள்ளி விளையாடும்.

38. கட்ட கருகுமணி இல்லாமல் போனாலும் பேர் என்னவோ பொன்னாத்தாள்.

39. கட்டி அழுகிற போதும் கைத் துழாவுமாம்.

40. கடல் நீரிலே கன்னல் சுவையைக் காண முடியாது.

41. கடமையை செய், உரிமையை பெறு.

42. கடலையை வித்து நஷ்டப்படறதைவிட, புழுதியை வித்து லாபமடையலாமே.

43. கடந்துபோனது கரணம் போட்டாலும் வராது.

44. கடன் வாங்கிய உடை குளிருக்கு ஆகாது.

45. கடன் பட்டாயோ? கடை கெட்டாயோ?

46. கடா ஆனாலும் உழக்குப் பால் கறக்காதா என்பவன்.

47. கடல் பெருகினால் த்ரை ஏது?

23. बासी भात भी नहाके खाना और चिथड़ा भी धुला ही पहनना।

24. घर में फूटी कौड़ी नहीं, लेटने को रेशम का बिस्तर चाहिए।

25. भूखे की आँख भोजन की दिशा में। हम तो न जाने चाँद न जाने सूरज, हमें तो यह नजर आती हैं रोटियाँ।

26. बना बनाया तो एक मकान किराये पर तो सारे मकान।

27. सिखाया-पढ़ाया साथ नहीं चलता।

28. यह मुँह और मसूर की दाल।

29. घर क्या बनाया, दुश्मनी मोल ली।

30. बने बनाये पर करे शिकायत।

31. एक पैर कब्र में तब घरवाली ने खुशखबरी सुनायी।

32. जो जैसा बना है वैसे ही मरेगा।

33. बेरोक टोक साँड ज्यों खेत में घुस जाये।

34. शादी हुई तो फिर क्या सबूत चाहिए।

35. जैसे बंधन से छूटा बछड़ा सा।

36. शौहर आया, यार चला गया।

37. लंबी ढील हो तो बछड़ा खुश रहेगा।

38. आँखों का अंधा नाम नयनसुख। फूला पेट, पीलू पैर नाम सुकुमार।

39. होंठों पे मरसिया नज़र दौलत पै।

40. समुन्दर का पानी मिठास क्या जाने।

41. फर्ज निभाओ। हक पाओ।

42. पसीने की बूंद में पैसा नहीं तो बैठे ही क्यों न रहें हम।

43. जो बीत गयी सो बात गयी। पिछवाडे की मुखाई फिर कभी न आयी।

44. उधार चद्दर ठंड से नहीं बचाये।

45. ऋण लिया, मान खोया।

46. सांड खरीदा, दूध का बर्तन ढूँढा।

47. समुन्दर उमड़ा तो जमीन कहाँ?

48. கடவுள் காட்டித்தான் தரும், ஊட்டித் தராது.

49. கடலில் கரைத்தப் பெருங்காயம் போல்.

50. கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி.

51. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

52. கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்.

53. கடலைத் தூர்த்தாவது காரியத்தை முடிக்க வேண்டும்.

54. கடப்பாறையை முழுங்கி சுக்கு கஷாயம் குடிக்கறவனாச்சே.

55. கடல் பெருகினால் கரையும் பெருகும்.

56. கடமைத் தவறாத கீரிப்பிள்ளை போல.

57. கடமையைச்செய், பலனை பகவான் மேல் போடு.

58. கடல் தாண்ட மனமுண்டு, கால்வாய்த் தாண்ட காலில்லை.

59. கடா கன்னு போட்டிருக்கு கொட்டகையில் பிடித்து கட்டுடா என்றானாம்.

60. கடலைத் தாண்டியவனுக்கு வாய்க்கால் தாண்டுவதா கஷ்டம்.

61. கடிவாளம் போட்ட குதிரை போல.

62. கடிக்கத் தெரியாவிட்டலும் சீறியாவது பயமுறுத்து.

63. கடிக்கத் தெரியாவிட்டாலும் குரைக்கத் தெரியணும்.

64. கடித்துப் போட்ட நக அளவு கூட இல்லே.

65. கடிக்க மாட்டாத பாக்கு உத்தம தானம்.

66. கடுங் காற்று மழை காட்டும், கடுநட்பு பகை காட்டும்.

67. கடுகு தின்னு தண்ணி குடிக்காம முடியுமா?

68. கடுகத்தனைத் தவறை மலையத்தனையாக் காட்டறது.

69. கடுகு மலையாச்சு, மலை கடுகாச்சு.

70. கடுகை மலையாக்கிடுவானே.

71. கடுகத்தனை உதவி செஞ்சாலும், மலையத்தனையா நினைச்சி மதிக்கணும்.

48. भगवान दिखायेगा, खिलायेगा नहीं।

49. ज्यों समुन्दर में घुला नमक।

50. उधार लेकर भी भूखा, शादी करके भी कुंवारा।

51. जाको राखै साइयाँ मारि न सक्के कोय।

52. ऐसे उदास ज्यों लिया हो उधार।

53. काम होना है तो समुन्दर भी सुखाया जाये।

54. मूसल को निगलकर, हजमूला खायेगा।

55. समुन्दर बढ़ा तो किनारा भी बढ़ेगा।

56. वफ़ादार नेवला सा।

57. कर्मण्येव अधिकारस्ते, मा फलेषु कदाचन।

58. मन से पहुंचे सागर पार, तन से अटके इसी किनार।

59. सांड ने जना है बच्चा, बांधो गोशाला में।

60. सागर लांघा, क्यों न नाला पार करेगा।

61. लगाम लगाये घोड़े-सा।

62. काटे नहीं तो क्या फुंकार मार दे।

63. काटे नहीं तो क्या, भूंका तो करो।

64. कटे नाखून की लंबाई भी नहीं।

65. सडी चीज बामन के हाथ। काम का नहीं तो पांडे के हाथ थमा दो।

66. तेज़ हवा तूफान लाये, गाढ़ी दोस्ती दुश्मनी लाये।

67. नमक खाये तो पानी पीना ही पड़ेगा।

68. तिल का ताड़ बनाना।

69. राई पहाड़ बनी, पहाड़ बना राई।

70. राई को पहाड़ बना देगा।

71. तिल बराबर मदद भी पहाड़ सा मानना चाहिए।

72. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைச்சாப்போல.

73. கடை அரிசி கஞ்சிக்கு உதவுமா?

74. கடையைக் கட்டியாச்சு.

75. கடைச் சரக்கல்ல.

76. கடைந்த மோரிலேயே வெண்ணை எடுக்கறவனாச்சே.

77. கடை பரத்தியாச்சு.

78. கடுகைத் துளைத்துக் கடலை புகுத்த முடியாது.

79. கண்ணைக்கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது.

80. கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டை.

81. கண்ணைவிட்டு விலகினா கருத்தை விட்டு விலகும்.

82. கண்ணுக்கு இமை பாரமா, கொடிக்கு காய் பாரமா?

83. கண்ணாடி வீட்டிலிருப்பவன், ஒருபோதும் கல் எறியக்கூடாது.

84. கண்டதைக் கொண்டு கரை ஏற வேண்டும்.

85. கண்ணைத் திறந்துண்டே பாம்பு புத்திலே கைவிட்டாப்போல.

86. கண்ணைக் கட்டி காட்டிலே விட்டாப்போல.

87. கண்ணாடி என்ன பொய்யா சொல்லும்.

88. கண்டதே காட்சி, கொண்டதே கோலம்.

89. கண்கெட்டப்புறம் சூரிய நமஸ்காரம் பண்றாப்போல.

90. கண்ணின் மணிபோல.

91. கண்ணிலே விளக்கெண்ணை விட்டுக்கிட்டு இருக்கணும்.

92. கண்ணான பேரையெல்லாம் புண்ணாக்கிக் கொண்டு கரும்பான பேரையெல்லாம் வேம்பாக்கிக் கொண்டான்.

93. கண்டால் காமாட்சி நாயகன், காணாவிட்டால் காமாட்டி நாயகன்.

94. கண்ணுக்குக் காட்ட புண்ணில்லை என்பதைப் போல.

95. கண்ணைப் பிடுங்கிட்டுக் கண்ணாடிக் காண்பிப்பதைப் போல.

72. पराया माल दोनों हाथ बाँट।

73. सपने की रोटी भूख न मिटाये।

74. बाजार बंद हो गया।

75. यह बाजार की चीज नहीं। इसे खरीददार की भूख नहीं।

76. इतना होशियार कि छाछ से मक्खन निकालेगा। रेत को रस्सी बना देगा।

77. हाट सजा दिया। माल तैयार, खरीददार कहाँ?

78. कूजे में दरिया नहीं भरा जा सकता है तो अंजली में भरना है सागर।

79. एक दरवाजा बंद होता है तो दूसरा खुलता ही है।

80. करनी न खाक की, बात करे लाख की।

81. आँख से दूर, दिल से दूर।

82. आँखों पर पलकों का बोझ नहीं होता।

83. जो शीशे के घर में है, उसे पत्थर नहीं फेंकना है।

84. तिनका पकड़ किनारे पहुँच। राम जी के हाथ का तिनका भी तीर है।

85. जान बूझकर खतरा मोल लिया, खुली आंख बम्बी में हाथ।

86. जैसे आँख बंद करके गुमराह कर दिया।

87. दर्पण झूठ ना बोले।

88. जो देखा वही सुहाना। जो मिला वही खज़ाना।

89. अब पछताये होत क्या, चिड़िया चुग गयी खेत।

90. आँखों का तारा।

91. सदा जागरूक रहना है। थोडी झपकी पूरा माल गुम।

92. अपनों से बैर मोल लिया। ईख की टुकडी को नीम बना लिया।

93. सामने हो तो साधु पति, दूर हो तो ठाकुर।

94. कहने को दुष्ट, दिखाने को कोई दोष नहीं।

95. जैसे मुँह बंद किया और खाना खिलाया।

96. கண்ணே காதே நமஸ்காரம், கண்டதை கேட்டதை சொல்லாதே.

97. கண்ணாடி வேறானாலும் முகம் ஒன்றுதானே.

98. கண்ணாடியில் கண்டபணம் கடனுக்கு உதவுமா?

99. கண்குத்தி பாம்பா காத்திருந்தான்.

100. கண்ணோ இரு புண்ணோ?

101. கண்ணை இமை காப்பதுபோல.

102. கண்ணை வித்து சித்திரம் வாங்கினாப் போல.

103. கண்ணை மூடிண்டு கிணத்திலே விழுந்தாப்போல.

104. கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்.

105. கண்ணிலே விழுந்த துரும்பு மாதிரி.

106. கண் தன்னைத் தானே பார்த்துக்க முடியுமோ?

107. கண்ணில் பட்டால் கரிக்குமா, புருவத்தில் பட்டால் கரிக்குமா?

108. கண்ணுக்கு வேணாத் திரை போடலாம், கருத்துக்குத் திரை போட முடியுமோ?

109. கணக்கன் ஊர் கணக்கறிவான், தன் கணக்கறியான்.

110. கண சித்தம், கண பித்தம்.

111. கண்ணிலே மண்ணைத் தூவி விட்டான்.

112. கண்டதை கற்க பண்டிதன் ஆவான்.

113. கண்ணுக்குக் கண்ணாக காப்பாத்தறது.

114. கண்ணிலே விரலை விட்டு ஆட்டறவனாச்சே.

115. கண்ணில்லாத கபோதி.

116. கண்ணிருந்தும் குட்டிச் சுவர்லே முட்டிண்டாப் போல.

117. கண் அளக்காததை கை அளந்து விடும்.

118. கத்திப் போச்சு, வால் வந்தது டும்டும்.

119. கத்தரிக்காய்க்கு காலும், கையும் முளைச்சாப் போல.

120. கத்தரிக்காய் வாங்கிட்டு, பூசணிக்காய்க் கொசுறா?

96. हे आँख हे कान सलाम सलाम, देखा सुना न कभी बताना।

97. आइना बदलने से चेहरा नहीं बदलता।

98. सपने में हीरे मिले, सारा कर्ज़ चुक गया क्या?

99. गिद्ध दृष्टि से देखता रहेगा।

100. ये आँखें हैं या दो घाव।

101. आँखों पर छायी पलकों सा।

102. आँखें बेचकर तसवीर मोल ली।

103. ज्यों आँख बंद कर गड्ढे में गिर गया।

104. न देखे पर भरोसा, न सुने पर भरोसा, सोच समझकर किये पर भरोसा।

105. जैसे आंख में पडी किरकिरी।

106. आँखें दुनिया देखती है, पर खुद को कहाँ?

107. देखे दुख होता। अनदेखे कुछ नहीं होता।

108. आँख पर पट्टी बांध सकते हैं। खयालों पर कैसे?

109. मुंशी जाने सब का हिसाब, पर न पहचाने खुद का हिसाब।

110. पल में तोला, पल में माशा। क्षेण रुष्टा, क्षणे तुष्टा।

111. आँखों में धूल झोंक दिया।

112. इधर उधर का बटोरा पंडित बन गया छोरा।

113. रक्षा करे ज्यों आँख की पुतली।

114. बड़ा कड़ा आदमी। हर पै का हिसाब, हर कै का हिसाब।

115. दिवांध। दिखती चीज़ जो देख न पाये।

116. आँखें खुली पर खाई में गिरा।

117. जिसे आँख से परख नहीं, वह हाथ से परख लेता है।

118. एक गयी, दूसरी आयी। बला गयी, आफ़त आयी।

119. वामनी कद बैंगनी रूप।

120. करे छोटा काम, माँगे बड़ा अंजाम। बैंगन लिया और कुम्हडा मुफ्त में माँगा।

121. கத்தும் பூனை எலியை பிடிக்காது.

122. கத்தரிக்காய் முளைச்சது, கடைத் தெருவுக்கு வந்தது என்கிறாப் போல.

123. கத்திரிக்காய் முத்தினா, கடைத் தெருவுக்கு வந்துதானே ஆகணும்.

124. கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு.

125. கதிர் முத்திப் போச்சு.

126. கதைக் கேட்ட நாயை செருப்பாலே அடி.

127. கதை கதையாம் காரணமாம், காரணத்திலே தோரணமாம்.

128. கதை கந்தலாகிப் போச்சு.

129. கதையும் முடிஞ்சிது, கத்தரிக்காயும் காய்ச்சுது.

130. கதை பேசியே காலம் கழிச்சிடுவான்.

131. கப்பல் ஓட்டி பட்ட கடன், கொட்டை வித்துத் தீருமா?

132. கப்பல்லிலே பாதிபாக்கு நானும் போட்டிருக்கேன்.

133. கப்பலிலே ஓட்டை விழுந்தாச்சு.

134. கப்பல் மூழ்கி போச்சு.

135. கப்பல் கவுந்தா மாதிரி கன்னத்தில் என்ன கை?

136. கப்பல் கரையேறியாச்சு.

137. கப்பலில் உட்கார்ந்த பறவை சுத்தி சுத்தி வருவதைப் போல.

138. கபட சொல்லைவிட கடிய சொல் மேல்.

139. கபட நாடகம் ஆடறான்.

140. கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்.

141. கம்பள வரவேற்பு.

142. கம்பங்கொல்லையிலே யானை புகுந்தாப் போல.

143. கம்மாளப் பொணம் போல.

144. கம்புக்குப் களை வெட்டினாப் போலும் இருக்கணும், தம்பிக்குப் பெண் பேசினால் போலும் இருக்கணும்.

145. கம்பி எண்ணிக்கிட்டிருக்கான்.

121. भूँकता कुत्ता कभी न काटता। करे मियाँऊ डरे चूहे से।

122. पकने पर बाजार आना ही पड़ेगा।

123. लड़की सयानी हुई तो किसी की बहू बननी ही।

124. अकल बड़ी है या भैंस। चाकू छोडो, बुद्धि तेज करो।

125. फली पक गयी।

126. धूर्त के लिए बस लाठी।

127. बात-बात से बनती है कहानी। तेरी व्यथा, मेरी व्यथा बन गयी देखो आज कथा।

128. हालत बिगड़ गई। मौसम सूना दुख भया दूना।

129. यों कहानी खतम हुई और यों बैंगन निकला।

130. बातों का भूत। बात ही बात में वक्त पर घात।

131. बड़े नुकसान को छोटी कमाई से भरे कैसे?

132. मेरा भी उसमें आधा हिस्सा।

133. ज्यों नैया में पड़े छेद।

134. क्यों इतनी उदासी? क्या दुनिया लुट गयी।

135. इनती उदासी गोया डब गया जहाज़।

136. नैया पार लग गयी।

137. जैसे उडे जहाज़ का पंछी, फिरि जहाज़ पै आवै।

138. कपटी शब्दों से कठोर शब्द भला।

139. नाटक करता है। घर में छोड आया मसाला, ढोंग रचाता साला।

140. तानसेन के घर का कौआ भी मलहार गायेगा।

141. शानदार स्वागत। घर बुलाया, लाल दरी बिछा दिया।

142. जैसे गन्ने के खेत में घुसे हाथी।

143. अकड़ा मुर्दा सा।

144. एक पंथ दो काज। लकडी भी कट गयी, भाई की शादी भी तय हो गयी।

145. जेल की हवा खा रहा है। ससुराल में तोंद सहला रहा है।

146. கயிறு எரிஞ்சாலும் முறுக்கு குறையலை.

147. கயிறு மேலே நடக்கறாப் போல.

148. கயிறு திரிக்கிறான்.

149. கயிறு அறுந்த பட்டம் போல.

150. கயவனுக்கு வாக்கப்படறதைவிட, குயவனுக்கு வாக்கப் படலாம்.

151. கற்பூர புத்தி.

152. கரி விற்றப் பணம் கருப்பாகாது.

153. கரும்பு கட்டுக்கு எறும்பு தானே வரும்.

154. கா்மமே கண்ணாயினார்.

155. கரிசனம் எல்லாம் கண்ணுக்குள்ளே, வஞ்சனை யெல்லாம் நெஞ்சுக்குள்ளே.

156. கருவாடு வித்த காசு நாறுமா, பூ வித்த காசு மணக்குமா?

157. கருவாட்டுக் கூடையிலே கருவேப்பிலை வைச்சாப்போல.

158. கருடி கற்றவன் (கழைக் கூத்தாடி வித்தை) இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை.

159. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

160. கரையான் புற்றில் கருநாகம் குடி புகுந்தாற்போல்.

161. கா்பகிருகத்து அம்பாள்/அம்பிகை போல.

162. கருவேல மரத்தடியிலே களைப்பாற முடியுமோ?

163. கருவேல முள்ளாக் குத்தறான்.

164. கரும்பு தின்ன கூலியா?

165. கருடனைக் கண்ட கருநாகம் போல.

166. கருவூலமா இருக்கான்.

167. கரும்புக் கட்டைத் தேடிண்டு ஈ வரத்தான் செய்யும்.

168. கரும்புத் தோட்டத்தைக் குரங்கு காத்தாப்போல.

169. கருமியும், கஞ்சனும் ஒண்ணா சேர்ந்தாற் போல.

146. रस्सी जली पर ऐंठन न गयी।

147. रस्सी पर पैर चले, कब गिरे कब ठहरे।

148. रेत को रस्सी बनाता है।

149. जैसे कटी पतंग।

150. छली से शादी से बुद्धू की बहु बनना भला।

151. जैसे काफुर सा घुलता दिमाग।

152. कोयले से आमदनी काली नहीं होती।

153. शक्कर बिखरा तो चींटी आयेगी ही।

154. अपने काम से मतलब जीने का मस्त नुस्खा।

155. मुँह में राम, बगल में छुरी। राम राम जपना पराया माल अपना।

156. बिक्री के बाद न मछली की गन्ध न फूल की खुशबू।

157. सूखी मछली की टोकरी में चंपा कली की वेणी।

158. नट गिरे भी तो करतब ही है।

159. आँसू के तेज़ाब में पत्थर भी पिघल जाये।

160. ज्यों बम्बी में साँप की बस्ती।

161. मंदिर की देवी सी।

162. बड़ा भया तो क्या भया, जैसा पेड़ खजूर। पंथी को छाया नहीं। फल लागे अति दूर।

163. बबूल सा पीड़ा देता है।

164. नेकी और पूछ पूछ।

165. जैसे मोर से डरे नाग सा।

166. आधारभूत-सा है।

167. गुड़ पर मक्खी भिनभिनायेगी ही।

168. म्याऊँ की रखवाली में दूध।

169. कंजूस और मक्खीचूस जैसे चले साथ-साथ।

170. கருடா சுகமான்னா, இருக்கிற இடத்திலே சுகம்னு சொல்லித்தாம்.

171. கர்ண பரம்பரை கதை.

172. கரண்டி பிடித்த கையும், கன்னக்கோல் பிடித்த கையும் சும்மாயிருக்குமா?

173. கரியைப் பூசிட்டான்.

174. கரிக் கடையிலே வேலை செய்யறவன் கை கரியாகாமலா இருக்கும்.

175. கருவேலங்காட்டிலே கருநாகமும் புகுந்தாப் போல.

176. கரையான் புற்றுக்குள் ஓணான் நுழைந்தாற் போல.

177. கருவேப்பிலைக் குச்சி போல ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு.

178. கல்லுக்குள் ஈரம்.

179. கல்லுக்குள் இருக்கும் தேரை போல.

180. கல்லுக்குள் இருக்கும் தேரையையும் காப்பவனாச்சே.

181. கல்லைக் கண்டா நாயைக் காணும், நாயைக் கண்டா கல்லைக் காணும்.

182. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்.

183. கல்லிலே நார் உறிக்கறவனாச்சே.

184. கல்லார் உறவினும், கற்றோர் பகையே மேல்.

185. கல்லாதவனுக்குக் கண், முகத்தில் இரண்டு புண்போல

186. கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார்.

187. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி.

188. கல்ப விருட்சம் போல.

189. கல் விதைத்து நெல் அறுக்க முடியுமா?

190. கல்லுப் பிள்ளையார்.

191. கல்லுளி மங்கன்.

192. கல்லை விட்டு எரியலாம், பழம் விழுந்தாலும் சரி, கல் விழுந்தாலும் சரி.

170. अपनी-अपनी जगह पर हर कोई खुश। अपनी बस्ती सर पै टोपी।

171. सदियों से चलती आती बात। किसी ने कहा, किसी ने सुना हज़ारों साल की है यह कहानी।

172. आदत नहीं छूटती।

173. कालिख लगा दी।

174. काजल की कोठरी में कोई रहे कैसे बेदाग?

175. जैसे झाड़ी में घुसे साँप।

176. ज्यों बाम्बी में घुसी चिपकली।

177. बड़ा लाड़ला, आँखों का तारा।

178. गीत गाया पत्थरों ने।

179. जैसे चट्टान के बीच मेंढक।

180. दाने दाने पे लिखा है खाने वाले का नाम। हाथी के लिए अपना मण चींटी के लिए अपना कण।

181. कभी कुत्ता, कभी पत्थर यही हमारी किसमत।

182. पति परमेश्वर। काना हो या बहरा अपना पति ही तो है।

183. रेत को रस्सी बनानेवाला।

184. नादान दोस्त से, दाना दुश्मन भला।

185. अनपढ़ को आँख से क्या काम।

186. बड़े काम बनते नहीं आसानी से।

187. हुई शादी पर रहा कुँवारा।

188. कल्प तरू-सा। अक्षय पात्र सा।

189. बौये आक तो आम कहाँ ते होय।

190. गोबर गणेश। आंगन का लट्टू

191. बड़ा घुटा साला।

192. कोशिश करे, बने तो बने। बिरवा पर फेंके पत्थर मिले तो आम नहीं तो पत्थर।

193. கல்வெட்டா பதிஞ்சு போச்சு.

194. கல்லடி பட்டாலும் கண்ணடிப் படக் கூடாது.

195. கல்லையும் செரிக்கிற வயசு.

196. கல்லுபோல் உடம்பு.

197. கல் கண்ணாடியிலே மோதினால் என்ன, கண்ணாடி கல்லிலே மோதினாலென்ன, உடையப் போறது கண்ணாடி தானே.

198. கல்யாண சந்தடியிலே மாப்பிள்ளையை மறந்து போனாப் போல.

199. கல்யாண அமர்க்களத்திலே தாலி கட்ட மறந்தாப் போல்.

200. கல்யாணம் ஆன புதுசிலே எட்டிக் காயும் இனிக்கும். வருஷம் போனா கரும்பும் கசக்கும்.

201. கல்லிலே நார் உரிக்க முடியுமா?

202. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.

203. கலாட்டாக் கல்யாணம்.

204. கலி முத்திப் போச்சு.

205. கவலைகளை மறக்க கடமைகளைச் செய்.

206. கவலையில்லாத கஞ்சி கால்வயிற்றுக்குப் போதும்.

207. கவலையை விலைக் கொடுத்து வாங்கினாப்போல.

208. கவளம் கண்டதும் கரையும் காக்கைபோல.

209. கவுரி மான்போல.

210. கவைக்கு உதவாதது.

211. கழுதைக்காமம் கத்தினால் தீரும்.

212. கழுதை பாரம் வண்ணானுக்கு எங்கேத் தெரியும்.

213. கழுதை உழுது கம்பு விளையுமா?

214. கழுத்து வெளுத்தாலும் காக்கை கருடனாகுமா?

215. கழுத்திலே கல்லைக் கட்டி விட்டா போல.

216. கழுதைப் புலி போல.

193. पत्थर की लकीर सा खिंच गया।

194. सहे पत्थर का प्रहार, पर नज़र से बचे रहना।

195. चढ़ती जवानी पत्थर को भी हजम कर जाये।

196. गठीला जिस्म, तगडी जवानी।

197. शीशा पत्थर से टकराये, पत्थर शीशे से, नुकसान तो शीशे का।

198. बारात में बिरादरी, पर घोड़े की पीठ खाली।

199. शादी में भीड़ है, पर मंडप में पंडित नहीं।

200. शादी का मज़ा घटता चाँद।

201. रेत से रस्सी बने कैसे। बीस में अस्सी निकले कैसे?

202. इन्साफ़ से पहले तकरार जरूरी है।

203. गड़बड़ घोटाला, शादी का मसाला।

204. करजुग का असर बढ गया।

205. फ़र्ज निभाओ, दर्द भूल जाओ।

206. थोड़ा खाये आराम से सोये।

207. ज्यों चिन्ता मोल ली।

208. कौर मिले तो मुँह खोले।

209. कस्तूरी हिरण सा।

210. बिल्कुल बेकार। न काम का, न काज का, दुश्मन अनाज का।

211. गधे का गुस्सा रेंगने तक।

212. गधे का बोझ धोबी क्या जाने।

213. गधे के हल चले तो कुछ भी पैदा नहीं होता।

214. गंगा नहाने से गधा घोड़ा नहीं बनता।

215. जैसे गले में भारी पत्थर बंधा हो।

216. ज्यों लकड़बग्घा सा। न गधा न शेर।

217. கழுதை வாலைப் பிடித்து கரையேற முடியுமா?

218. கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பானால் போல.

219. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.

220. கழுதையும், குதிரையும் ஒண்ணாகுமா?

221. கழுதை கெட்டா குட்டிச்சுவர்.

222. கழுதை விஷ்டி கை நிறைய.

223. கழுதை கூரைமேலேறி முட்டைப் போட்டது என்றால் அது பொன் முட்டையல்லவா போட்டது என்று சொல்வதைப் போல.

224. கழுதை கூட குட்டியிலே அழகாய்த்தானிருக்கும்.

225. கழுதைக்குப் பின்னால் போகலாமோ?

226. கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து.

227. கழுகுக்கு மூக்கிலே வியர்த்தாப்போல.

228. கழுகுப்பார்வை.

229. கழுதை கடித்ததுமல்லாமல், காலையும் மிதித்ததாம்.

230. கழுத்தைச் சுத்தின பாம்பு கடிக்காம விடாது.

231. கழுத்தைச் சுத்திக் காதை தொடறாப் போல.

232. கழு மரத்திலே ஏறின கட்ட பொம்மன்னு நினைப்பு.

233. கழைக் கூத்தாடி பிழைப்பு.

234. கழுவற நீரிலே நழுவுற மீனைப் போல.

235. கள்ளனுக்குள்ளே குள்ளன்னா அவன்.

236. கள்ளிக்கு ஏன் முள் வேலி.

237. கள்ளும் பழசாய் இருக்கணும், போதையும் குறைச்சலா இருக்கணும்.

238. கள்ளழகர் சீர் கொண்டு வந்தாப் போல.

239. கள்ளமில்லா உள்ளம் வெள்ளை.

240. கள்ளு குடிச்ச குரங்கு போல.

241. கள்ளன் கையிலேயே தாக்கோல் (சாவி) கொடுத்தாப் போல.

217. गधे की पूँछ पकड़कर किनारा कैसे लगे?

218. पहाड़ घिसकर बन गया राई।

219. खरहा क्या जाने कपूर की गंध।

220. गधा और घोड़ा क्या बराबर है।

221. गधा कहाँ जायेगा वीरान तक ही तो।

222. गधे की लीद ढेर सारी।

223. गधा लीद डाले तो क्या उसमें सोना होगा।

224. गधा भी बचपन में दिखता है सुन्दर।

225. गधे के पीछे चलें तो लात ही लात।

226. गधे का घाव गली की धूल से भरता है।

227. गिद्ध की सूँघ जैसी।

228. गिद्ध दृष्टि।

229. गधे ने काटा ही नहीं, पैरों को भी रौंध डाला।

230. पैरों में लिपटा साँप काटेगा ही।

231. जैसे द्राविड़ प्राणायाम।

232. मानो फांसी पर झूलता भगतसिंह हो।

233. कलाबाज का जीवन लटका रस्सी पर।

234. हाथ से फिसलती मछली सा चालाक।

235. चोरों की चोटी सदा हाथ से फिसलती।

236. बबूल के लिए बाड़ा क्यों?

237. शराब कड़ा हो, पर मस्ती न चढ़ी हो।

238. जैसे भगवान की बारात में बढ़ते बाराती।

239. निष्कपट हृदय धुली चाँदी सी।

240. मदिरा पिये मरकट सा।

241. जैसे चोर के हाथ में चाभी थमा दी।

242. கள்ளனை நம்பினாலும் நம்பலாம், குள்ளனை நம்பக் கூடாது.

243. களவும் கற்றுமற.

244. கள்ளு வித்து கலப்பணம் சேர்ப்பதை விட கற்பூரம் வித்துக் கால் பணம் சேர்ப்பதே மேல்.

245. கற்க கசடற கற்க, கற்றபின் நிற்க அதற்கு தக.

246. கற்றதைக் காய்ச்சியா குடிக்கப் போகிறாய்.

247. கற்றோனுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு.

248. கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே.

249. கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு.

250. கற்றது எல்லாம் வித்தையல்ல, பெற்றது எல்லாம் பிள்ளையல்ல.

251. கற்ற வித்தயைப் பெற்றதாயிடமே காட்டறாப்போல.

252. கறக்க சுரப்பது பசுவின்பால், கற்க சுரப்பது கல்வி.

253. கறிக்கில்லாத வாழைக்காய் கட்டித் தொங்குகிறதாம்.

254. கறுப்பும் ஒரு அழகு, காந்தலும் தனி ருசி.

255. கறுப்புக்கு நகை போட்டுப் பார்.

256. கறுப்புக்கு மை இட்டாப்போல.

257. கறுப்புப் பெண்ணுக்கு நகை போட்டுப் பார், சிகப்புப் பெண்ணுக்கு மை இட்டுப்பார்.

258. கன்னுக்குட்டியாத் துள்ளித் திரிந்தது. காளை மாடா நிக்குது.

259. கன்றின் குரல் கேட்டு கனிந்து வரும் பசு போல்.

260. கன்னான் வீட்டுக்குடமே ஓட்டையா?

261. கன்னி முயற்சி.

262. கன்றைக்காணாத பசுபோல்.

263. கன்றைக் கண்டதுமே மடி சுரக்கறாப் போல.

264. கன்றின் மணி ஓசைக் கேட்டத் தாய்ப் பசு போல.

265. கன்னத்திலே அறைஞ்சா, கண்ணிலேத் தண்ணி வராப்போல.

242. चोर पर चाहे भरोसा करें पर बौने पर नहीं।

243. चोरी भी सीखो और भूल जाओ।

244. शराब बेचकर झोली भरने से काफूर बेचकर हथेली भरना अच्छा।

245. सीखो तो चोखा, जिये तो सीख पर।

246. जो सीखा उसे घोलकर पी सकते हो क्या?

247. विद्वान की पूजा हर दिशा में होती।

248. भीख लेकर भी सीखो।

249. सीखा ज्ञान मुट्ठी भर का, अनसीखा दुनिया भर का।

250. जो भी सीखा वह ज्ञान नहीं, जो भी जना वह पूत नहीं।

251. सीखी होशियारी दिखाये, घर की चारदिवारी में।

252. दुहने से बढ़ता गाय का दूध, सीखने से बढ़ता ज्ञान।

253. काटने से काम न आये तो क्या चीरने से काम आता है।

254. हम काले हैं तो क्या हुआ दिलवाले हैं।

255. काली कन्या गहनों में चमकती।

256. जैसे कोयले पर काजल की लकीर।

257. काली को गहने पहनाओ, गोरी की आँखों पर काजल लगाओ।

258. बछड़ा सा उछलता था, अब साँड सा खड़ा है।

259. बछड़े की पुकार सुनकर दौड़कर आती गाय सी।

260. लुहार के घर के घड़े में ही छेद।

261. प्रारंभिक प्रयास, पदार्पण।

262. बछड़े की तलाश में भटकनेवाली गाय सी।

263. बछड़े को देखते ही थन दूध से भर जाता है।

264. बछड़े की आवाज़ सुनी गाय सी।

265. ज्यों थप्पड़ खाते ही भरती आँख सी।

266. கன்னம் சிவந்துடும்.

267. கனவிலே மண் விழுந்தாப் போல.

268. கனவு தானே, அது கன்னா பின்னான்னு அலைக்கழிக்காமல் விடுமா?

269. கனாக் கண்டு முழிக்கறதுக்குள்ளேயே, கலைஞ்சு போனாப் போல.

270. கனாவுலே கண்ட காசு செலவுக்கு ஆகுமா?

271. கனாவில் கண்ட சோறு வயிற்றை நிரப்புமா?

272. கனிந்த பழம் தானே விழும்.

273. கனி இருப்பக் காய் கவர்ந்தற்று.

274. கனி மரம் தேடித்தானே வௌவால் போகும்.

275. கனி மரத்தில் தானே கல்லெறிவார்கள்.

276. காக்காயுமல்ல, குயிலுமல்ல.

277. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தாற்போல.

278. காக்கை எச்சம் கோவிலை இடிச்சாப் போல.

279. காக்கை கொட்டை போட்டு, கோட்டையை இடிச்சாப் போல.

280. காக்கை கட்டிவைச்ச கூட்டிலே குயில் முட்டை இட்டாப் போல.

281. காக்கை கூட்டிலே விழுந்த குயில் போல.

282. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

283. காக்காயும் கருப்புத்தான், குயிலும் கருப்புத்தான்.

284. காக்கை எச்சத்திலே முளைச்ச மரம் போல.

285. காக்கை எது குயில் எதுன்னு காலம் வந்தா தெரியப்போறது.

286. காக்கைக் கூட்டம் போல.

287. காக்கும் காலம் காத்தால் தான், காய்க்கும் காலம் காய்க்கும்.

288. காகம் நாலு சோத்துப் பருக்கைக் கிடைத்தாலும், நான்கு காகத்தை அழைத்து வரும்.

289. காகிதக் கப்பல் பயணத்திற்கு பயன்படுமா?

290. காங்கேயம் காளை போல.

266. थप्पड़ मारूंगा।

267. आशाओं पर पानी फिर गया।

268. सपना भटकाये दूर तक।

269. आँखें खुलते ही सपना गायब।

270. सपने का रुपया दूकान में न चलता।

271. सपने की मिठाई से कभी मुँह मीठा न होता।

272. पका तो गिरेगा ही।

273. फल के रहते कौन फली खायेगा।

274. चमगीदड़ जाये फलवाले पेड़ पर।

275. पेड़ में फल हों तो पत्थर मारेंगे ही।

276. न तीतर, न बटेर।

277. काकतालीय सा।

278. कौए की बीट से मंदिर टूटा।

279. कौए ने बीज फेंका और दुर्ग ढह गया।

280. जैसे कौए के घोंसले में कोयल अंडा दे।

281. जैसे कौए के घोंसले का कोयल हो।

282. कौए को भी अपना चूज़ा प्यारा।

283. कोयल कौआ दोनों काला, इनमें बताओ कौन है आला?

284. कौए की बीट से उगे पेड़ सा।

285. कोयल कौआ पता चलेगा वसन्त ऋतु के आते ही।

286. काक वृन्द सा।

287. समय पर रक्षा करे तो समय पर फलेगा ही।

288. कौए खाये हिलमिलकर। रोटी बोटी बांटके खाना।

289. कागजी नैया न पार पहुँचाए।

290. ज्यों पछहिया साँड।

291. காசேதான் கடவுளடா.

292. காசிக்குப் போனாலும் கர்மம் தொலையல்லே.

293. காசிருந்தாத்தான் நேசமும் நட்பும்.

294. காசிருந்தா கட்டி அழ பத்து பேர்.

295. காசி யாத்திரைப் போன காளைமாட்டுக் கதைதான்.

296. காசைக் கொடுத்துத் தேளை கொட்டிண்டாப் போல.

297. காசு கொடுத்து சூனியம் வைத்துக் கொண்டாப் போல.

298. காசுக்கு ஒப்பாரி வைச்சி, கூலிக்கு மாரடிக்கறவனாச்சே.

299. காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும், காற்றைப் போல பறக்கவும் வேண்டும்.

300. காசு காசோடத்தான் சேரும்.

301. காசுக்கூண்டு (பெட்டி) கரிக்கூண்டாய்ப் போச்சுது.

302. காஞ்ச மாடு கம்பங் கொல்லையிலே புகுந்தாப் போல.

303. காஞ்சா கானாடு, பேய்ஞ்சா பொன்னாடு.

304. காஞ்சீபுரத்துக்குப் போனால் காலாட்டிண்டு சாப்பிடலாம்.

305. காட்டாற்று வெள்ளம் போல.

306. காட்டேறி மலையேறிடுச்சு.

307. காட்டு கூச்சலிலே கல்யாணி ராகம் எடுபடுமா?

308. காட்டுத் தீ போல.

309. காட்டில் எரிந்த நிலாவும், காலையில் பெய்த மழையும் போல.

310. காட்டுப் பன்னியை வேட்டையாட நாட்டுக்காப் போக முடியும்.

311. காட்டுக் கோழிக்கு உரல் குழியே கைலாசம்.

312. காட்டை வைத்துக் கொண்டுதானே வேட்டையாட வேண்டும்.

313. காடு வெட்டி சாய்த்தவனுக்கு கம்பு வெட்டவா பயம்.

314. காடு வாவாங்கறது, வீடு போபோங்கறது.

315. காணக் கண்கோடி வேண்டும்.

291. पैसा ही भगवान है। सबसे बडा रुपया।

292. गंगा नहाये भी न कटा पाप।

293. प्यार और रिश्ता पैसे पर ही बलता है।

294. दौलतमंद के इन्तकाल पर मरसिया गाये हजार।

295. नमाज पढ़ने चला, रोज़ा गले लगा।

296. आ बैल मुझे मार। हे साढे साती, तेरी मैरी शादी।

297. पैसे देकर मुसीबत मोल ली।

298. पैसा लेकर रोया, मजूरी लेकर मरसिया गाया।

299. दमड़ी मोल घोड़ा चाहिए, हवा जैसे उडना भी चाहिए।

300. तरबूजे को देखकर तरबूजा रंग बदलता है।

301. शमा पर मिटे परवाना, खर्च पर मिटे खजाना।

302. जैसे भूखा बैल झपटे खेत पर।

303. बरसा पानी तो पंजाब, सूखा पड़ा तो 'सहारा'।

304. रईस के चौपाल पर सदाव्रत चलता है।

305. जैसे बरसाती नदिया। गगन से उतरी कपिशा।

306. बात बन गयी। साथ निभ गया।

307. मेंढकों की टर टर में कोयल की कूक खतम / जब दादुर वक्ता भये कोयल को पूछे कौन।

308. दावानल सा। बांस से बांस का प्यार, जंगल का संहार।

309. खेती सूखे बरसे मेघ।

310. शूकर का संहार जंगल में ही संभव।

311. कुएँ के मेंढक को, वही वैकुंठ।

312. शिकार के लिए जंगल चाहिए ही।

313. जिसने पहाड़ खोदा उसे चट्टान हटाना क्या मुश्किल।

314. कब्र में एक पैर लटका सा है।

315. नयनाभिराम दृश्य।

316. காணக் கிடைக்காத காட்சி.

317. காணாதது கண்ட மாதிரி.

318. காணம் போட்ட செக்கு போல.

319. காண்பாரைக் கண்டு, கழுதையும் பரதேசம் போயிற்றாம்.

320. காணாதவன் கஞ்சியைக் கண்டால் ஓயாம ஒழியாம ஊத்திக்குடித்தானாம்.

321. காணி நிலமானாலும் சொந்த நிலமாச்சே.

322. காத்திருந்தவன் பொண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போனானாம்.

323. காத்தவராயன் பேச்சு, காத்தோடப் போச்சு.

324. காதலுக்குக் கண்ணில்லை.

325. காதலையும் கர்ப்பத்தையும் ஒளிக்க முடியுமோ?

326. காதறுந்த செறுப்பு காத வழிகூட வராது.

327. காதலாவது, கத்திரிக்காயாவது.

328. காத்தடிச்சா பொறியும் கனியும்.

329. காத்தடிக்கறப் பக்கமா சாயும் மரம்போல.

330. காத்தடிக்கறப்பக்கம் பறக்கும் காத்தாடி போல.

331. காத்து திசை மாறி அடிக்க ஆரம்பிச்சிடுத்து.

332. காத்துவாக்கிலே வந்து செய்தி.

333. காத்துக் கிடப்பவனுக்கு கணமெல்லாம் யுகம் ஆகும்.

334. காத்தும் மழையும் எல்லோருக்கும் பொது.

335. காதிலே பூ சுத்தறது.

336. காதறுந்த ஊசியும் வாராது கடைவழிக்கே.

337. காதும் குத்தி பூவும் சுத்திடுவானே.

338. காது குளிர்ந்து போச்சு.

339. காதும் காதும் வைச்சாப் போல.

340. காது காது என்றால் நாதி நாதி என்றானாம்.

316. अपूर्व दृश्य। न भूतो न भविष्यति।

317. जैसे अनहोनी हो गयी।

318. भरे कोल्हू सा। सूझे न कुछ, कमरे में बेचैन चक्कर।

319. देखादेखी गधा भी परदेश गया।

320. कई दिनों का भूखा लपक लपक कर खाता।

321. दो बीघा ही हो, पर अपनी जमीन है।

322. खड़ा था कतार में, पर उड़ा ले गया सियार।

323. हल्की बात हवा में उड़ गयी।

324. प्रेम अंधा है। दोनों की आंखें बन्द पर प्यार हो गया।

325. प्रेम और पेट छिपाये कौन।

326. फटा जूता किस काम का।

327. दिल-विल, प्यार-व्यार कुछ नहीं।

328. हवा साथ दे तो चिनगारी बन जाये आग।

329. घटा के साथ साथ, हवा के संग संग।

330. हवा की दिशा में उड़ती पतंग सी।

331. हवा की रूख बदल गयी।

332. हवा में उड़ता समाचार।

333. इंतजार में हर घड़ी युग बन जाती है / इंतजार की घड़ियाँ लंबी।

334. हवा पानी सब को बराबर। पानी बरसे सम विषम।

335. चकमा देना।

336. सुई की नोक भी साथ न चलेगी।

337. चकमा धोखा देने में हुशियार।

338. दिल भर गया।

339. कानों कान खबर न हो।

340. गधी कहे तो गदी मान लेता है।

341. காதிலே பஞ்சை அடைச்சிண்டிருக்கான்.

342. காத்தோடு காத்தா கலந்து போயாச்சு.

343. காந்தலே ருசி, கருப்பே அழகு.

344. காந்தம் இரும்பை இழுக்கறாப் போல.

345. காப்புக் கட்டியாச்சு.

346. காப்பு மாட்டியாச்சு.

347. காப்பவனிருக்கக் கவலைப் படுவானேன்.

348. காமத்திற்குக் கண்ணில்லை.

349. காமாந்தகாரன் கண்ணுக்கு கண்டவளெல்லாம் பெண்டாட்டி.

350. காமாலைக்காரன் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்தான்.

351. காய்த்தமரம் வளைந்து நிற்கும்.

352. காய்க்கும் மரத்திற்குத் தான் கல்லடிபடும்.

353. காய்ந்த மாடு கம்மாவுக்குப் போன கதைதான்.

354. காய்ந்த மாடு கம்பிலே விழுந்தாப்போல.

355. காய்ச்சிய பால் பொங்கினாப் போல.

356. காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா.

357. காயத்துக்கு மருந்துண்டு, கவலைக்கு மருந்துண்டோ?

358. காயா மரத்தில் கல்லெறிபடுமா?

359. காயம் ஆறினாலும் ரணம் ஆறல்லே.

360. காயத்துக்கு மேலே காயம் படறது.

361. காயத்தை ஏன் கிளறிவிடறே.

362. காயத்திரி மந்திரம் போல.

363. காய்ந்த காட்டிலே தீப் பிடிச்சாப் போல.

364. காய்க்க காத்தவனுக்கு, பழுக்கப் பொறுக்கலையே.

365. கார்மேக மழையில் காற்றடித்தால் போச்சு.

341. कानों पर जूं तक नहीं रेंगता।

342. हवा में घुल मिल गया।

343. काली खूबसूरत, कड़क जायकेदार। हम काले हैं तो क्या हुआ दिलवाले हैं।

344. चुंबक लोहे का चुंबन सा।

345. श्रीगणेश हो गया।

346. हथकड़ी पहना दी।

347. राखनहार के होते चिन्ता क्यों।

348. हवस अंधी होती है।

349. कामी आँखें हर औरत पर जाये।

350. पीलिया की आँखें पीला ही देखती।

351. पके फलों से भरी टहनी झुकी-झुकी सी सदा रहनी।

352. फल हो तो पत्थर फेंकेंगे ही।

353. जैसे भूखा बैल भूसे पर झपटा।

354. पेट में चूहा, हाथ में आया सो खाया।

355. जैसा गरमा दूध उफ़ना हो।

356. है बहारे बागे दुनिया चन्द रोज़।

357. घाव का उपचार हो सकता है, पर चिन्ता का नहीं।

358. फल नहीं तो पत्थर क्यों फेंके।

359. घाव भरा पर व्रण न भरा। एक पैर फिसला तो दूसरा भी फिसलेगा ही।

360. चोट पर चोट पड़ती जाय।

361. गड़े मुर्दे क्यों उखाड़ते हो।

362. पुनीत ज्यों गायत्री मंत्र। पूत मंत्र सविता सूत्र सा।

363. सूखे जंगल में दावानल-सा।

364. निकलते देखा फलने तक क्यों न रुकता?

365. घन घोर घटा के लिए चलती हवा काफी है।

366. கார் காலத்து மழை போல.

367. காரசாரமா பேசிட்டான்.

368. காரியத்தில் கண் இல்லாமல், வீரியத்திற்கு ஒண்ணும் குறைச்சலில்லே.

369. காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே.

370. காரியம் ஆகணும்னா கழுதையின் காலையும் பிடிக்க வேண்டியதுதான்.

371. காரியம் ஆகணும்னாக் காலைப்பிடி, காரியம் ஆனதும் மென்னியை (கழுத்தை) பிடி.

372. காரியத்தைப் பண்ணிட்டு கழுநீர்ப் பானையில் கை அலம்பினாப் போல.

373. காரிகைக் கற்று கவிபாடுவதிலும், பேரிகைக் கொட்டிப் பிழைப்பது மேல்.

374. கால்லே (காலில்) சக்கரம் கட்டிண்டு அலையறான்.

375. கால் பூமியிலே பாவல்லே.

376. காலத்துக்கு ஏத்த கோலம்.

377. காலத்திற்கு ஏற்ப கருத்தில் மாற்றம் வேண்டும்.

378. காலத்தை வீணாக்குவது எளிது, காலத்தைப் பொன்னாக்குவது கடினம்.

379. காலம் யாருக்காகவும் நிக்காது.

380. காலத்தோடு ஒத்துவாழ்.

381. காலத்தை அறிந்தவர் யார்?

382. காலியாயிருக்கறத் தலை எப்போதும் நிமிர்ந்திருக்கும்.

383. கால்படி அரிசி இருந்தா கஞ்சி, அரைப்படி இருந்தா அன்னம்.

384. காலால் இட்ட வேலையேத் தலையால் செய்யறவனாச்சே.

385. காலாகாலத்தில் கால் கட்டு போட வேண்டியதுதான்.

386. காலம் பொன்னானது.

387. காலம் விடை சொல்லும்.

388. காலிலே வெந்நீரைக் கொட்டிண்டாப்போல என்ன பரபரப்பு.

389. காலமெல்லாம் காத்திருந்தாலும் கிட்டுவது தான் கிட்டும்.

366. जैसे सावन की बरसात।

367. ईंट का जवाब पत्थर से दे दिया।

368. काम से चूका डींग तो खूब।

369. काम से वास्ता रखो।

370. काम बनना है तो पैर लगना पडेगा।

371. काम बनना है तो पाँव पकडो, बन गया तो गला पकडो।

372. काम किया अंजाम बुरा हुआ।

373. कवि बनकर भटकने से ढिंढोरा पीटकर खाना अच्छा।

374. पैरों में पहिये बाँधे भटकता है।

375. पाँव जमीन पर नहीं जमते।

376. गंगा गये गंगाराम, जमुना गये जमुनाराम।

377. वक्त के साथ कदम बढ़ाओ / चादर देख के पसारो पैर।

378. वक्त ज़ाया करना आसान, वक्त ठीक आजमाना कठिन।

379. समय किसी के लिए नहीं रुकता।

380. समय के संग बाना और समय के संग जामा।

381. ओ ज़माना वक्त के पैर सैर करना मुश्किल है मैंने यह आज माना। काल का जाल कभी भूल न जाना

382. दिमाग खोखला पर सर चढा ही चढा।

383. माया तेरे तीन नाम गंगू, गंगा, गंगाराम।

384. हुक्म सर आँखों पर।

385. उमर के रहते मंगनी होनी।

386. समय मूल्यवान है।

387. ज़माना जवाब देगा। ठहरो जनाब, मिलेगा जवाब

388. ऐसी क्या बेसब्री ज्यों आग पै पैर पडे हों।

389. ऋतु आये, फल होय।

390. காலனுக்கும் காலன்.

391. காலத்துக்கு ஏத்தாப்போல்.

392. கால் காசு பெறதாவன்.

393. கால் காசு பெறாத விஷயம்.

394. காலிலே கஞ்சியை கொட்டிண்டாப் போல.

395. கால் ஒரு காதம் போறதுக்குள்ளே, வாய் நூறு காதம் போயிடுமே.

396. காலம் போன காலத்திலே, மூலம் வந்து குறுக்கிட்டாப் போல.

397. காலம் மாறும்.

398. கால் பணம் கொடுத்து அழச் சொல்லி,
முக்கால் பணம் கொடுத்து ஓய்ச் சொன்னாப்போல.

399. காலமெல்லாம் ஆடி, சாகும் காலத்திலே சங்கரா, சங்கரா என்றானாம்.

400. காலைப்பிடி என்றால், கழுத்தைப் பிடிப்பவனாச்சே.

401. காலமில்லாக் காலத்தில் காய்த்ததாம் பேய்ச் சுரைக்காய்.

402. கால் கட்டு போட்டாச்சு.

403. கால் வயத்து கஞ்சி இல்லாதவள், காஞ்சிபட்டுக்கு ஆசைப்பட்டாளாம்.

404. கால் காசு பெறாத விஷயத்துக்கு காதும், மூக்கும் வெச்சிடுவானே.

405. கால் வாயைத் தாண்டாதவன், கடலையாத் தாண்டப் போறான்.

406. கால் போன போக்கிலே போறது.

407. கால் மேல் கால் போட்டுண்டு உட்கார்ந்திருக்கான்.

408. காலை சுத்தின பாம்பு கடிக்காம விடாது.

409. காலைப் பிடித்த சனியன் ஊரை சுற்றி அடிக்கும்.

410. காலை ஊன்ற ஒரு இடம் வேண்டும்.

411. காலை ஊன இடம் கிடைச்சாத் தானே, படுத்துத் தூங்கறதைப்பத்தி யோசிக்க முடியும்.

412. காலுக்குத் தக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும்.

413. காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி எறி.

390. काल का काल महाकाल, यमराज का भी सरताज।

391. समय के साथ चलते, बनते ढोंगी साधु।

392. फूटी कौड़ी के लिए भी नालायक।

393. बस छोटी-सी बात।

394. जैसे आग के दरिया में खडा है।

395. पैर चले चार कदम, जीभ पहुँचे आठों धाम।

396. वैसे समय ठीक नहीं, तिस पर शकुन ठीक नहीं।

397. ज़माना बदलेगा। देर सबेर बात बनेगी।

398. कौड़ी देकर चिउँटी काटी।
रुपये देकर रोना बंद किया।

399. क्या खूब जमाया रंग, अब रामकृष्ण के संग।

400. मदद माँगो तो निगल जायेगा।

401. बिन मौसम मल्हार गाना।

402. पायन बेडी पडत है ढोल बजाय बजाय।

403. पेट भूख पर चाहिए रेशम का कुरता।

404. तिल को ताड़ बना देगा।

405. मेंढ न पाये लांघ, पर्वत लांघने की करे चाह।

406. बिन मंज़िल भटकना।

407. घोड़ा बेचकर सो रहा है।

408. घर आया साँप डसकर ही छोडेगा।

409. आफ़त आयी तो दर-दर भटकायेगी।

410. पैर जमाने जगह चाहिए।

411. पाँव धरने की जगह मिले तभी न आराम की बात सोचें।

412. पाँव के लायक जूते, मज़दूरी के लायक मेहनत।

413. नालायक को फेंक दो। एक पैर का जूता न हाथ में न पैर पर।

414. காலுக்கு உறை போட காணாது.

415. காலம் பொன்னானது கடமை கண்ணானது.

416. காலத்தில் ஓட்டை அடைக்கலைன்னா, கப்பல் கவிழ்ந்துடும்.

417. கால் பணமானாலும் சொந்தப் பணம்.

418. காலம் தான் மனக்காயத்துக்கு நல்ல மருந்து.

419. காலம் மலையேறிப் போயாச்சு.

420. காலம் அறிந்து ஞாலம் ஒழுகு.

421. காலம் வந்தா காக்காயா, குயிலான்னுத் தானே தெரிஞ்சிடறது.

422. கால் மாடு, தலைமாடுத் தெரியாம கிடக்கிறான்.

423. காலோடு தலை விஷம்.

424. காலம் கலி காலம்.

425. காலத்தில் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது.

426. காலன் அடித்த ரணத்திற்கு காலம் தான் மருந்து.

427. காலத்தே பயிர் செய்.

428. காலிலே அடிபட்டா கண் அழறாப் போல.

429. *காலும் புரியல்லே, தலையும் புரியல்லே.*

430. கால் வைக்க இடமில்லே.

431. காலிலே கட்டியாச்சு.

432. காலணா கொடுக்கிறேன் என்றால் காதவழி நடப்பான்.

433. காலில் பட்டது கண்ணில் பட்டது போல.

434. காவடி பாரம் சுமப்பவனுக்குத்தான் தெரியும்.

435. காவல் தெய்வமாயிருப்பான்.

436. காவல் கீரி போல.

437. காவேரி காத வழி இருக்கறச்சயே, கோமணத்தை வரிஞ்சு கட்டிண்டானாம்.

438. காவலுக்கு வந்தவனே களவாடினாப் போல.

414. चरण रेणु के बराबर भी नहीं।

415. समय मूल्यवान है। कर्तव्य महान है। वक्त की सांस सब रोग हटा।

416. समय पर मरम्मत न करो तो सब विनष्ट हो जायेगा।

417. दमड़ी ही क्यों न हो, अपनी तो अपनी है।

418. समय से बड़ा उपचार क्या है। समय के हाथ आशिश की परस।

419. जमाना बदल गया। पहचान बदल लेना।

420. समय के अनुसार बाना पहनो।

421. कोयल की पहचान वसंत में ही। अमराई की डाली पर कोयल की बोली।

422. बेसुध पड़ा है।

423. आपाद मस्तक विष। सरापा जहर।

424. कलजुग है यह। इस हाथ दें उस हाथ लें।

425. वक्त पर की गयी मदद अच्छी है।

426. समय का प्रहार, समय का ही उपचार।

427. समय पर करो प्रयास।

428. पैरों में चोट और आँखों में पानी।

429. कुछ सूझता नहीं, कुछ बूझता नहीं।

430. तिल धरने की जगह नहीं।

431. सर पर थोप दिया।

432. कौड़ी का फायदा हो तो कोसों चलेगा।

433. टकराया तो नज़र आया।

434. कहार जाने पालकी का भार।

435. राखनहार बनेगा।

436. रक्षक नेवला जैसा।

437. शबिस्तान तो दूर रास्ते में ही सो पड़ा।

438. जैसे बाड़ ही खेत को खा जाये। पहरेदार ने क़हर मचाया।

439. காளிப்பட்டம் போனாலும், மூளிப்பட்டம் போகாது.

440. காளிக்குப் படையல் போடறதுக்கு முந்தி, பூசாரிக்குப் போட்டாகணும்

441. காளியோ, மூளியோ காரியம் செஞ்சா சரி.

442. காளி கோவில் பூசாரி போல.

443. காளை மாட்டையே கறக்கறவனாச்சே.

444. காளை கன்னுபோட்டுதுன்னு கேட்கும் முன்னே தும்பை எடு என்றானாம்.

445. காளை மாடு காசியாத்திரைக்குப் போனாற் போல.

446. காளை போன வழியே, கயிறு போகும்.

447. காளியாட்டம் ஆடறான்.

448. காளியம்மனுக்குப் படையல், மாரி அம்மனுக்கு மாவு.

449. காற்றுக்கென்ன வேலி.

450. காற்றாய்ப் பறந்து கற்பூரமா கரைஞ்சிடுத்து.

451. காற்றுப் போன பலூன் போல.

452. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

453. கானகத்து மயிலறியும் கார்காலம் குளத்து அல்லி அறியும் நிலவொளி

454. கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி

455. கானல் நீர் போல

456. கானல் நீராக இருந்தது பாலாகப் பொங்கி வழியறாப் போல

457. கானல் நீர் தாகம் தணிக்குமா

458. கானல் நீரைக் கண்டு தாவும் மான் கூட்டம் போல

459. கானகத்து மயிலுக்கு ஆடவாக்கத்துக் கொடுக்கணும்

460. கானகமே வானகமானது போல

461. கான கோகிலம் தான்

462. கிங்கிணிக்கு கிங்கிணியும், மழுங்குணிக்கு மழுங்குணியும்

463. கிட்டாதாயின் வெட்டெனமற

464. கிட்ட வந்தா முட்டப் பகை

439. पागल नाम गया। सनकी नाम तो नहीं गया।

440. देवी मैया को खुश करने के पहले पुजारी को खुश करना है।

441. नाटू हो, छोटू हो काम करे तो ठीक।

442. जैसे काली मैया के मंदिर का पुजारी।

443. बैल को ही दुहनेवाला, बडा ही होशियार।

444. साँड बछड़ा जना है, रस्सी लाओ, रस्सी लाओ।

445. जैसे सांड चले तीरथ यात्रा।

446. यथा राजा तथा प्रजा।

447. नाचता ऐसे जैसे काली मैया हो सवार।

448. छोटी बहू को न्योता, बड़ी बहू को दुत्कार।

449. हवा जहाँ चाहे जाये। हवा बड़ी मनमौजी।

450. हवा के साथ उड़कर काफुर सा गायब।

451. जैसे हवा निकला गुब्बारा।

452. मौका रहते आजमा ले। हवा के साथ साथ।

453. मोर जाने सावन की बहार और कुमुद जाने चांदिनी का प्यार।

454. मोर को नाचते देख बटेर नाचने लगा।

455. ज्यों मृग मरीचिका। आंखों के सामने पर हाथ के पास नहीं।

456. ज्यों मृगमरीचिका बन गयी अचनाक बहते दूध की धारा।

457. मृगमरीचिका से तृष्णा नहीं बुझती।

458. जैसे मरीचिका के पीछे दौड़ते मृग सा।

459. जंगल के मोर को नाचना कौन सिखायें।

460. जंगल में मंगल। वीराना बन गया सुहाना।

461. ज्यों गानेवाली कोयलिया। बडी लता मंगेश्कर हो।

462. उस्तादों का उस्ताद।

463. जो न बदा हो, भूल जाओ उसे।

464. गले मिलो तो दुश्मनी।

465. கிட்டேப் போனா முட்டும், பின்னே போனா உதைக்கும்.

466. கிட்டாத கனிக்கு கொட்டாவி விட்டானாம்.

467. கிடுக்கிப் பிடி.

468. கிட்டினதை விட்டுட்டு எட்டாததை பிடிக்கறாப் போல.

469. கிட்டிக்கட்டிடுவான்.

470. கிடைச்சா கஞ்சித்தண்ணி, கிடைக்காட்டி கிணத்துத்தண்ணி.

471. கிடைச்சா கைலாசம், கிடைக்காட்டி வனவாசம்.

472. கிணத்துத் தவளை போல.

473. கிணத்து ஜலத்தை வெள்ளமா கொண்டு போயிடும்.

474. கிணத்துத் தவளை தண்ணிக் குடித்ததை கண்டது யார், குடிக்காததை கண்டது யார்?

475. கிணத்துத் தவளைக்கு கிணத்து வட்டம் தான் ஆகாயம்.

476. கிணத்துத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்.

477. கிணத்தைப் பனித்துளியாலே நிரப்ப முடியுமா?

478. கிணறு வெட்ட பூதம் கிளம்பின கதையாச்சு.

479. கிணத்துலேக் கல்லைப் போட்டாப் போல.

480. கிணறு வெட்டறவன் ஒருத்தன், தண்ணீர் குடிப்பவர் பல பேர்.

481. கிணத்து ஆழமும் கயிற்றுக்கு நீளமும் பார்க்க வேண்டும்.

482. கிணற்றுக்குத் தப்பி துரவில் விழுந்தான்.

483. கிராமத்துச் சண்டை கோழி போல.

484. கிராமத்துச் சண்டை கோழி சந்தையிலே நின்னு கூவினாப்போல.

485. கிராம தேவதைக்குப் பொங்கலிட்டப் பறம் தான் வீட்டு தேவதைக்குப் படையல் போட முடியும்.

486. கிராம கணக்கன் தன் வீட்டுக் கணக்கைப் பார்க்கமாட்டான்.

487. கிழியோ கிழின்னு கிழிச்சிட்டான்.

488. கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்தாப்போல

465. कभी सींग मारे, कभी लात मारे।

466. दूर की चीज़ के लिए साँस मत भरना।

467. जबरदस्त पकड़।

468. हाथ आये को छोड़कर उड़ता पकड़ना।

469. पकडकर जकड लेगा।

470. कभी घी घना, कभी थोथे चना, कभी वह भी मना।

471. मुट्ठी भरे तो खजाना, काली हो जाये तो रोना।

472. कूप मंडूक सा। ज्यों कुए की मेंढकी सरफिरो को समझे राजकुमार।

473. कुएँ का जल बाढ में न बहे।

474. कुएँ का मेंढक करे या भरे, किसने देखा।

475. कूप मंडूक के लिए कुआँ ही आसमान।

476. मुल्ला की दौड़ मसजिद तक पांडे के जूते गंगा तीरे।

477. ओस चाटकर प्यास नहीं बुझती।

478. खोदे कुआँ निकला भूत। पेड छुआ बेताल कंधे पर बैठा।

479. ऐसा खामोश जैसे कुएँ का पत्थर।

480. बिरवा बोये एक, फल खाये अनेक।

481. कुएँ की गहराई और रस्सी की लंबाई मिलाकर देखना है।

482. आसमान से गिरा, खजूर पे अटका। कुएँ से बचा पोखर में गिरा।

483. गांव के मुठभेड़ी बटेर सा।

484. गाँव का पहलवान जो मेढ़ पर खड़ा है।

485. पहले ग्राम देवता की पूजा फिर अपने पेट की पूजा।

486. दूरंदेशी पर घर में कमीबेशी।

487. तोड़-फोड़ कर सत्तर-अस्सी कर दिया।

488. पालकर तोता बिल्ली के हवाले किया।

489. கிளி கொஞ்சும் சோலையிலும், ஆந்தை அலறத்தான் செய்யும்.

490. கிளி கொஞ்சறது.

491. கிளியைக் கூண்டிலே அடைச்சாப் போல.

492. கிளிப் பிள்ளைக்குப் பாடம் செல்லறாப் போல.

493. கிள்ளிக் கொடுக்க மனசு வராதே.

494. கிள்ளிப் போட சதையில்லை, துள்ளற துள்ளலைப் பாரு.

495. கிள்ளுக் கீரைன்னு நினைச்சிட்டானோ?

496. கிள்ளக் கிள்ளத் துளிர்க்கும் கிளுவை மரம் போல.

497. கிளி கொத்தினபழம் பகு ருசி.

498. கிளையைத் தாங்கும் ஆலம் விழுது போல.

499. கீசகன் மரணம் போல மர்மமாயிருக்கு.

500. கீரைத் தண்டு மாதிரி தளதளன்னு இருக்காள்.

501. கீரைத் தண்டு பிடுங்க ஏலேலோ பாட்டா.

502. கீரை உணவு கீழேத்தள்ளாது.

503. கீரியும் பாம்பும் போல.

504. கீழே விழுந்தவனுக்குக் கைகொடு.

505. கீழே விழுந்தாலும் மண் ஒட்டல்லைங்கறாப் போல.

506. கீழேத் தள்ளினதும் இல்லாம, குழியும் பறிச்சுதாம்.

507. கீழே இருக்கறவன் மேலே போறாப் போல, மேலே இருக்கறவன் கீழே வந்துதானே ஆகணும்.

508. கீழ் வானம் வெளுத்தாச்சு.

509. கீழே சிந்தின பொருளை அள்ளலாம், வாயிலேந்து சிந்தின சொல்லை அள்ள முடியுமோ.

510. கீறின கோட்டைத் தாண்ட மாட்டான்.

511. கீறல் விழுந்த கிராம போன் ரிகார்டு போல.

512. கீறிக் கிளறி புண்ணை ரணமாக்கறாப் போல.

489. गुलशन में बुलबुल भी, उल्लू भी। डाली में फूल भी कांटा भी।

490. क्या कमाल की खूबी।

491. जैसे तोते को पिंजड़े में बंद किया है।

492. ज्यों तोते को रटा रहा हो।

493. दमड़ी देना भी कबूल नहीं।

494. कांटे सा सूखा है, पर ऐंठ अभी तक गया नहीं।

495. क्या मुझे रास्ते का पत्थर समझ लिया। हम क्या सेंत मेंत के है।

496. जितना काटो, उतना भर जाएगा ही।

497. गिलहरी चखा अमरूद मीठा ही मीठा दाँत पड़े तोते का, स्वाद बढ़े फल का।

498. बरगद की जडें डालियों को संभाले।

499. कीचक वध सा रहस्यपूर्ण है।

500. हरे भरे खेत सी जवां दीखती है। ये बला का हुस्न और यह जवानी।

501. छोटे से काम के लिए बड़ा इंतज़ाम।

502. साग सब्जी बीमारी से रखे दूर।

503. साँप-नेवला सा।

504. गिरों को संभाले।

505. रस्सी जली पर ऐंठन न गया।

506. गिराया ही नहीं दफ़ना भी दिया।

507. ऊपर-नीचे, नीचे-ऊपर लहर चले जीवन की।

508. उद्धार का वक्त आ गया। उगता सूरज सामने आ गया।

509. बिखरे दानों को बटोर सकते हैं, निकले शब्द को कौन बटोरे।

510. लक्ष्मण रेखा न करेगा पार।

511. खरौंच भरे ग्रामफोन रिकार्ड सा। हर बार वही घिसी पिटी बात।

512. खरौंच खरौंच कर घाव को हरा कर देता है।

513. கீறின கோட்டைத் தாண்டிய சீதை கதிதான்.

514. குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா?

515. குசேல வாழ்வு தான்.

516. குசேல வஸ்த்திரம்.

517. குசேலன் குபேரன் ஆனாப் போல.

518. குச்சிலே ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், மச்சிலே ஏறி மயிலாப் பிடிக்கப் போறான்.

519. குச்சு வீடு மச்சு வீடாச்சு, மச்சு வீடு குட்டிச்சுவராச்சு.

520. குஞ்சும் குளுவானுமாய் வீடு கலகலக்கறது.

521. குட்டிச் சுவராட்டமா.

522. குட்டி குலைச்சு நாயின் தலையிலே வைச்சாப் போல.

523. குட்டிச் சுவருக்கு ஆகிற வயசாச்சு.

524. குட்டி போட்ட பூனை போல.

525. குட்டியை கட்டிண்டு அலையற குரங்குபோல.

526. குட்டிச் சுவரிலே முட்டிக்கறதுக்கும் முக ராசி வேணும்.

527. குட்டியையே விழுங்கும் பாம்பு போல.

528. குட்டி நாய் வேட்டை நாயை விரட்டினாப் போல.

529. குட்டி யானையும் குளத்தைக் கலக்கும்.

530. குட்டி ஆடு செத்ததென கோனார் குந்தி அழுதானாம்.

531. குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுபடணும்.

532. குட்டக்குட்ட குனிஞ்சிண்டே இருந்தா குட்டுப்பட்டே சாக வேண்டியது தான்.

533. குட்டக் குட்ட குனியறாப் போல.

534. குட்டிச்சுவரில் தேள் கொட்டிக் கட்டுத்தறியிலே நெறிகட்டுமா?

535. குடலுக்குள்ளே நாக்கை வழிக்கற பயலுங்க.

536. குடலேத்தம் தெரியாம கோடிப் பொன் செலவு செய்தானாம்.

537. குடத்துள் இட்ட விளக்கு போல்.

513. लक्ष्मण रेखा लांघनेवाली सीता। पार करे तो मैया भी धोखा खाये।

514. खर को कहा अरगजा लेपा।

515. सुदामा सा गरीबी में जीवन।

516. फटा जीर्ण वस्त्र। जिसका न आदि न अन्त।

517. रंक चले सिर छत्र धराई।

518. खच्चर पर सवारी करना न जाने, हाथी के अंबार को कैसे पहचाने।

519. झोंपड़ी महल बनी और महल बन गया झोंपड़ी।

520. नन्हू-मुन्नु-चुन्नू से भरा है घर में मेला।

521. खंडहर सा ढह पड़ा है।

522. पिल्ला चिल्लाये और कुतिया मार खाये।

523. पेड़ की ठूंठ सा खड़ा बेकार। कटी डाली, पंछी से खाली।

524. ज्यों बच्चे जने बिल्ली।

525. ज्यों बच्चे को चिपकायी बंदरिया सी।

526. खंडहर बनने के लिए भी किस्मत चाहिए।

527. जैसे संतान को निगलते साँप समान।

528. जैसे पिल्ला भगाये शिकारी कुत्ते को।

529. हाथी बैठा भी घोड़ा बराबर।

530. मेमना मरा, गड़रिया आंसू बहाये।

531. सर पर प्रहार भी राजदंड का हो।

532. सर झुकाकर मार खाये तो फूटे सिर मरना है।

533. जैसे मार खाकर हार मानना।

534. दिया कहीं का, तेल कहीं का।

535. पेट में दाडी। इतना होशियार की भागते की लंगोटी उदार लें।

536. जरा सी बात न पहचाने, हजारों रुपये उड़ा दिये।

537. घटदीपवत्

538. குடல் அறுந்த நரி எந்த மட்டும் ஓடும்?

539. குடி குடியைக் கெடுக்கும்.

540. குடித்தனமோ துரைத்தனமோ?

541. குடியைக் கெடுக்க வந்த கோடாரி காம்பு போல்.

542. குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு.

543. குடிக்கிற சட்டியையும் கெடுத்தானாம் கன்னாரக்குப்பன்.

544. குடிக்கிற சட்டியிலேயே ஓட்டை போடறவனாச்சே.

545. குடியும் குடித்தனமுமா இருக்கான்.

546. குடித்தனம் பண்ணிக் குப்பை கொட்டினால் போலத் தான்.

547. குடிசையிலே இருந்துண்டு கூழைக்குடிச்சாலும் அது அமிர்தமாகும்.

548. குடிக்கக் கூழில்லாமல் இருக்கலாம் உடுக்கத் துணியில்லாமல் இருக்க முடியுமோ.

549. குடியிருப்பது குச்சு, கனா காண்பது மச்சு.

550. குடிக்கறது கூழ், கொப்பளிக்கறது பன்னீர்.

551. குடிக்கறது கூழ், ஏறுவது பல்லக்கா.

552. குடிக்கக் கூழ் இல்லேனாலும் ஐம்பத்துக்கு ஒண்ணும் குறைவில்லை.

553. குடிக்கத் தண்ணியில்லாதவன் தண்ணீர் பந்தல் வைத்தாற் போல.

554. குடும்பம் ஒரு கோவில்.

555. குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்.

556. குடும்ப வண்டியை இழுக்க இரண்டு மாடும் தேவை.

557. குடு குடுப்பாண்டி போல.

558. குடு குடுன்னு போனானாம், குடுமியை சிரைச்சானாம்.

559. குடுமி என் கையிலே.

560. குடும்ப மானம் அரங்கேறியாச்சு.

561. குண்டு சட்டியிலே குதிரை ஓட்டி, நண்டு சட்டியிலே நாரை பிடிச்சானாம்.

538. घायल सियार गिरने तक। बदहाल हुए अब सिमटने भर की देरी है।

539. बोतल से बड़ा कातिल नहीं। खराब करे शराब।

540. घर चला रहा है या साम्राज्य।

541. कुल नाशी कुल्हाड़ी के मूठ सा।

542. शराबी की बात रात भर की।

543. और अभी क्या बाकी, सब को बिगाड़ दिया।

544. जिस थाली में खाया उसी में छेद डाला।

545. घर बार संसार सजाकर बैठा है।

546. गिरस्थी चलाये क्या, मिटाये क्या।

547. अपनी झोंपड़ी, अपना लोटा, इससे बढ़कर और क्या बड़ा।

548. भूखा ठीक, पर नंगा नहीं। पेट के अन्दर खाना नहीं पर पेट के ऊपर ताना बाना होना।

549. झोंपडी में बस्ती, आसमान का सपना।

550. घर में नहीं दाने, अम्मा चली सुनार बुलाने।

551. रूखी रोटी खाये, चढ़े पालकी जाये।

552. खोटा पैसा नहीं, पर शान की नहीं कमी। तन पै लंगोटी ही पर अकड गयी नहीं।

553. पीने को बूंद नहीं। प्याऊ का करे इंतजाम।

554. परिवार एक मंदिर।

555. परिवार एक पाठशाला।

556. परिवार की गाड़ी चले दो बैलों के सहारे।

557. जैसे मदारी सा।

558. बड़ी तेजी से गया, पर बेकार काम किया। बेटा गया चोटी काटी।

559. उसकी चोटी मेरे हाथ।

560. कुल गौरव का हो गया नीलाम।

561. छोटी पहुँच बड़े अरमान।

562. குண்டு சட்டியிலே குதிரை ஓட்டறது.

563. குண்டுப் பெருச்சாளி.

564. குண்டக்க, மண்டக்க.

565. குண்டோதரனுக்குப் போட்டுக் கட்டுபடியாகுமோ?

566. குண்டி காய்ஞ்சா குதிரையும் வரகன் வைக்கோலைத் தின்னுமாம்.

567. குண்டைத் தூக்கிப் போட்டான்.

568. குணக் குன்று.

569. குணம் கெட்ட இடத்திலே குந்து மணிக்கூட விக்காது.

570. குணத்துக்கு மதிப்பு பணமிருந்தாத் தான்.

571. குணத்தைக் கொண்டு போய் குப்பையில் போடு.

572. குத்துக்கல் போல.

573. குத்துகிற உரல் பஞ்சம் அறியுமா?

574. குத்திக் கெட்டது பல், குடைந்து கெட்டது காது.

575. குத்திக் குத்தியேப் புண்ணை ரணமாக்கிடுவானே.

576. குத்தி வடித்தாலும் சம்பா, குப்பையில் போட்டாலும் தங்கம்.

577. குதிரையை இழுப்பதைவிட சேணத்தை இழுப்பது மேல்.

578. குதிரை கொள்ளுன்னா வாயைத் திறக்கும், கடிவாளம்னா முகத்தைத் திருப்பிக்கும்.

579. குதிரைக்கு மூக்கு வெளுத்தால் கழுதை.

580. குதிரைக்கு வால் எட்டடி மட்டும் வீசும்.

581. குதிரை கீழேத் தள்ளியதுமில்லாமல், குழியையும் பறித்ததாம்.

582. குதிரை குருடானாலும் கொள்ளு தின்பதில் குறைவில்லை.

583. குதிரையின் புத்தி சண்டையில் தான் தெரியும்.

584. குதிரை செத்ததுமல்லாமல், குழித் தோண்ட பத்துபணம்.

585. குதிரைக் கொம்பாப் போச்சு.

562. मुल्ला की दौड़ मसजिद तक।

563. खाऊ उड़ाऊ।

564. अंटम फंटम इकडं तिकडं।

565. बकासुर को कोई कहाँ तक खिलाये।

11. जैसे कीचड़ में गिर जाये। कर्दम के जूते और सफेद फ़ीते।
12. कीचड़ में नहायी और तौलिये से सफ़ाई।
13. कीचड़ देखे तो पैर डालेगा, पानी देखे तो धोयेगा।
14. कीचड़ का दीनार घोड़ा भी खरीदेगा।
15. औरों को रास्ता दिखाये, खुद गुमराह हो जाये।
16. अपशकुन।
17. शकुन देखकर मोरी में गिर पड़ा।
18. शकुनि मामा आ गये।
19. सब तीर्थों का तीर्थ समुद्र है। आकाशात् पतितं तोयम् यथा गच्छति सागरम्।
20. हरफ़न मौला
21. बोली में मिठास, काम में खटास
22. भगवान का राग अलापने से भूख नहीं मिटेगीं
23. परेशानी की बात को पहले छोड़ दो। छोड़ो मुझे साढ़े साती।
24. सिग्नल हो गया। शंख बज गया।
25. मुर्गा बाँग देने से सबेरा होता है?

26. சங்கே முழங்கு.

27. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

28. சங்கிலே விட்டாத்தீர்த்தம், மொந்தையில் விட்டாத் தண்ணி.

29. சங்காத்தமே வேண்டாம்.

30. சட்டி சுட்டதடா, கை விட்டதடா.

31. சட்டத்திற்குக் கண் இல்லை.

32. சட்டாம் பிள்ளை வேலையைக் காட்டாதே.

33. சட்டமும், சம்பிரதாயமும் இல்லாதவனுக்குத்தான்.

34. சட்டம் ஓர் இருட்டறை.

35. சட்டியில் இருந்தாத்தானே ஆப்பையில் வரும்.

36. சட்டியிலேந்து தப்பி அடுப்பில் விழுந்த கதையாச்சு.

37. சட்டி சோத்துக்கு ஒரு சோறு பதம்.

38. சட்டியோடு அகப்பைத் தட்டாமல் போகுமா?

39. சட்டியோடு தின்னு பானையோடு கை அலம்புகிறது.

40. சட்டியைப் போட்டு உடைச்சிட்டான்.

41. சட்டி ஓட்டை ஆனாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.

42. சட்டியிலே தலையை விட்டுண்ட பூனை போல.

43. சட்டிப் பானை கடையிலே பெருச்சாளிப் புகுந்தா போல.

44. சட்டி தூக்கியாச்சு.

45. சட்டத்துக்கு சந்து பொந்து உண்டு.

46. சட்டியில் என்ன இருக்கோ அதுதானே ஆப்பையில் வரும்.

47. சட்டி சோறு, சாணா வயிறு.

48. சட்டதிட்டமெல்லாம் பிறத்தியாருக்குத்தான்.

49. சட்டுபுட்டுன்னு செஞ்சானாம், சட்டி பானையை உடைச்சானாம்.

50. சண்டி குதிரைக்கு நொண்டினதே சாக்கு / சண்டி குதிரைக்கு சறுக்கினதே சாக்கு.

51. சண்டி குதிரை போல.

26. शंख बजाओ।

27. तपने पर भी सोना कोयला नहीं बनेगा।

28. शंख में तीर्थ जल, बाहर बस पानी।

29. साथ ही नहीं चाहिए / तुम्हारा साथ, तोबा तोबा।

30. श्मशान वैराग्य, दस दिन भर का।

31. इन्साफ़ अंधा है।

32. मुख्तार जैसे पेश न आओ।

33. समाज और कानून के बंधन बस गरीबों के लिए।

34. कानून एक अंधेरा बंद कमरा है।

35. अंटी में हो तभी पैसा निकलेगा।

36. आसमान से टपका खजूर पै अटका/कढाही से गिरा चूल्हे में जल गया।

37. हजार खरीदो, एक परखो।

38. दाना मिले तो दाल नहीं मिलेगा क्या?

39. एक दम डकार, एक दम हजम।

40. आधार को ही नष्ट कर दिया।

41. रास्ता न हो मंजिल सही।

42. कीलोत्पाटी वानर इव। ओखली में सिर।

43. मिट्टी के बरतनों के बीच चूहा।

44. काम तमाम हो गया।

45. कानून में गली नुक्कड होते हैं। इधर फँसे उधर से खिसके।

46. बरतन में जो हो वही थाली में आयेगा।

47. पेटू के लिए बरतन भर खाना।

48. कायदे कानून परायों के लिए।

49. बेसब्री से बस नुकसान

50. अडियल घोडा फिसलने भर की देर है।

51. अडियल घोडा सा।

52. சண்டி குதிரைக்கு ஏற்ற மொண்டி சாரதி.

53. சண்டி, முண்டி, சாமுண்டி.

54. சண்டைக் கோழி போல.

55. சண்டி மாடு, ஓட்டை வண்டி, வண்டிக்காரன் நொண்டி.

56. சண்டி யானைக்கு மொண்டி பாகன்.

57. சண்டமாருதம் போல.

58. சண்டைக்கு அலையறான்.

59. சண்பக மலரை வண்டு நாடாது.

60. சண சித்தம் சண பித்தம்.

61. சத்திய மேவ ஜயதே.

62. சத்தியம் சாகாது.

63. சத்தியம் நிச்சயம் காக்கும்.

64. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவன்.

65. சத்தியம் தவறாத தசரதன் போல.

66. சத்திய சோதனை.

67. சத்திய அரிச்சந்திரன்னு நினைப்பு.

68. சத்தான விஷயம்தான்.

69. சத்திரத்து ஆண்டி சாவடி பண்டாரத்தை விரட்டினாப் போல.

70. சத்திரத்தில் இன்னும் நுழைய விடவில்லை. இலை கிழிசல் என்றானாம்.

71. சத்திரத்து சோத்துக்கு அப்பணயங்கார் உத்திரவு என்ன வேண்டியிருக்கு.

72. சத்திரா போஜனம், மடாநித்திரை.

73. சத்திரம் கண்ட இடத்திலே சோத்தைத் தின்னு, மடம் கண்ட இடத்திலே தூங்கறவன் தானே.

74. சத்திரத்து நாயை அடித்தால், கேட்பார் யார்?

75. சதிர் தேங்காய் உடைக்கறாப் போல.

76. சதுரங்கம் ஆடின பாண்டவர் போல.

77. சதிரும் முடிந்தது, புதிரும் அவிழ்ந்தது.

78. சதுரங்கம் சத்ருரங்கமா ஆயிடுத்து.

52. अडियल घोडा लंगडा सवार।

53. मुँहफटी औरत।

54. झगडालू बटेर सा।

55. बूढा है घोडा, लाल है लगाम कैसी यह जोडी मिलाये मेरे राम।

56. जिद्दी हाथी हठीला माहौत।

57. तूफ़ानी हवा सा। प्रचण्ड मारुत सा।

58. झगडे को हाथ खुजलाता है। आदत से झगडालू।

59. चंपा पर भौंरा भटके न।

60. घडी में बिगडे, घडी में झगडे।

61. सत्यमेव जयते।

62. सत्य नित्य है। सांच को आंच नहीं।

63. सचाई सदा बचायेगी।

64. प्राण जाहिं, पर वचन न जाये।

65. सत्य वाक् का दशरथ सा सदा अनुचर।

66. सत्य की परीक्षा।

67. मानो सत्यवादी हरिश्चंद्र हो।

68. सारगर्भित विषय।

69. जैसे भिखमंगा भगाये भिखारी को

70. मिला ही नहीं माल, कहता है चोखा नहीं।

71. धर्मशाला के भोजन के लिए किसकी आज्ञा जरूरी है।

72. सराय में खाना, विहार में सोना।

73. धर्मशाला में खाकर, सराय में सोनेवाला।

74. गली के कुत्ते को मारे तो कौन तारे?

75. भंडा फोड दिया। जैसे जल में अपान।

76. चौरस खेले पांडवों सा।

77. पर्दा गिरा, भंडा खुला।

78. शतरंज बन गया मैदाने जंग।

79. சத்தியவான் உயிரைக்காத்த சாவித்திரி போல.

80. சந்தடி சாக்கிலே சுருட்டினது லாபம்.

81. சந்தடி சாக்கிலே கந்த பொடி கால் பணம்.

82. சந்தனம் தேயத் தேய மணம் தருவதை போல.

83. சந்தேகம் தீராத வியாதி.

84. சந்தம் இல்லாக்கவிக்கு அந்தம் இல்லை.

85. சந்தனம் மிஞ்சிப் போச்சேன்னு சூத்தாமட்டையில் தடவிண்டானாம்.

86. சந்தன வாசனை சாக்கடைக்கு எங்கேத் தெரியப் போறது.

87. சந்தனக்கோல் குறுகினாலும் பிரப்பங்கோல் ஆகாது.

88. சந்தனம் தெளிச்ச கையாலே சாணி தெளிக்க ஆச்சுது.

89. சந்தனமரம் போல் பிள்ளை, சம்பங்கிப் பூ போல பெண்.

90. சந்நியாசி பூனை வளர்த்த கதையாச்சு.

91. சந்நியாசி சம்சாரி ஆனாப் போல.

92. சந்நியாசி பிரயாணம் திண்ணை விட்டு இறங்கினா ஆச்சு.

93. சந்நியாசம் போன பூனை போல.

94. சந்து பொந்தெல்லாம் தெரிஞ்சவன்.

95. சந்தைக் கோலம் (பிச்சை) தந்தப் பல்லக்கா?

96. சந்திரனையும் கிரகணம் பிடிக்கும்.

97. சந்தில் சிந்து பாடுகிறான்.

98. சந்திர சூரியர்கள் உள்ள வரையில்.

99. சந்திரனைக் கண்ட அல்லி மலர் போல்.

100. சந்திரனை மூடிய கருமேகம் போல.

101. சப்பைக் கட்டுக் கட்டாதே.

102. சப்பை மாட்டுக்கு நொண்டி மாடு துணை போச்சாம்.

103. சப்பாணிக்கு நொண்டி குடுகுடுப்பை.

104. சப்பாணி மாப்பிள்ளைக்கு சந்து ஒடிந்த பெண் சாதி.

79. सत्यवान की प्राणरक्षा करनेवाली सावित्री सा।

80. झमेले में जो भी हाथ आभा वह काफ़ी।

81. गडबड घोटाले में अपना भी मसाला।

82. घिसत घिसत चंदन पै आवे बास सुबास

83. शक लाइलाज रोग/शक्की खुद का धक्का खायेगा। संशयात्मा विनश्यति।

84. छंद नहीं तो कविता में कोई स्वाद नहीं।

85. इत्र मुफ़्त मिले तो क्या चूतड में लगायेंगे।

86. खर को कहाँ अरगजा लेपा।

87. घिसकर भी चंदन महक न छोडे।

88. जिस जीभ से स्तुति की अब उसी से करे निंदा।

89. चंदन सा बेटा, चंपा सी बेटी।

90. ज्यों साधु ने बिल्ली पाली।

91. ज्यों साधु ने चलाया गिरस्थी का चक्कर

92. सन्यासी की सफ़र चबूतरे तक

93. बगुला भगत सा।

94. सभी राज़ जाननेवाला। गली नुक्कड का बादशाह। सडक छाप सम्राट

95. पालकी पर सवार और फैलाये हाथ।

96. चाँद पर भी गहन पडेगा।

97. मौका मिला तो मस्ती करता है। फक्कड की झोली में नुक्कड।

98. आचंद्रतारार्क। जब तक पहाड तब तक दहाड।

99. चाँद को देखकर खिलते कुमुद सा।

100. ज्यों चाँद पर छाया बादल।

101. बहाना न बनाना। फसाना न सजाना।

102. ज्यों बेकार को बेकार का सहारा। लंगडा बैल धुरी बिन गाडी।

103. लंगडे को लूला सहारा।

104. काना है दामाद बहरी है बहू।

105. சப்பையோ சொள்ளையோ சும்மா வந்தது தானே?

106. சப்த நாடியும் ஒடுங்கிப் போச்சு.

107. சம்மட்டி அடி.

108. சம்பளம் பாதி, கிம்பளம் பாதி.

109. சம்பளம் அரைப் பணமானாலும் சலுகை இருக்க வேண்டும்.

110. சம்பளம் அரைப் பணமானாலும் சளுக்கு முக்கால் பணம்.

111. சம்சாரிகளுக்குத் தொடர்ந்து வரும் துன்பம் போல.

112. சம்சாரியும் சந்நியாசியும் ஒண்ணாகுமா?

113. சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்துக்குப் போனால் ஏச்சுமில்லை, பேச்சுமில்லை.

114. சம்சாரம் சாகரம்.

115. சம்சாரம் பண்ணிக்குப்பைக் கொட்டினாபோலத்தான்.

116. சமய சஞ்சீவி.

117. சமர்த்துள்ள சேவகனுக்குப் புல்லும் ஆயதம்.

118. சமர்த்தன் சந்தைக்குப் போனால் கொள்ளவும் மாட்டான், கொடுக்கவும் மாட்டான்.

119. சமயத்துக்கேத்தாப் போல நிறம் மாறணும்.

120. சமயத்துக்கேத்தாப் போல நிறம் மாறும் பச்சோந்தி அவன்.

121. சமுத்திரத்திலே முழுகி சாகப் போறவனுக்கு தோணியும் துடுப்பும் எதற்கு?

122. சமுத்திரத்திலே என்னிக்கு அலை ஓயறது என்னிக்கு ஸ்நானம் பண்ணறது.

123. சமுத்திரத்திலே அலை ஓயுமோ?

124. சமுத்திரத்தில் ஏற்றம் போட்டு தண்ணி இறைத்தாப் போல.

125. சமுத்திரத்திலே முங்கினாத் தான் முத்தெடுக்கலாம்.

126. சமுத்திர மணலை எண்ண முடியுமோ?

127. சமுத்திரம் பொங்கினால் கிணறு கொள்ளுமா?

128. சமைஞ்ச பெண்ணுக்குத் தை மாசம், சர்க்கார் பதவிக்கு ஒரு மாசம்.

129. சமைக்கப் படைக்கத் தெரியாமல் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.

130. சமுத்திரத்திலே கரைச்ச சந்தனம் போல.

105. कटा या बिगडा मुफ़्त का मिला।

106. सारा सरीर सुन्न पड गया। सप्त नाडी सुप्त हो गयी।

107. ऐसी मार कर न सके कोई तार।

108. मासिक वेतन साथ ऊपरी आय।

109. वेतन कम हो, पर सहूलियतें ज्यादा हो।

110. कौडी की आय, और उसमें रौनक आधी।

111. गृहस्थी के साथ फली दुख की परछाईं सी।

112. गृहस्थ और सन्यासी क्या बराबर है।

113. समधी समधी साथ चले तो झगडा क्यों?

114. गृहस्थी एक सागर है। संसार सागर में सैकडों संहारक।

115. क्या घरबार चलाया? सत्यानाश किया।

116. वक्त पर उपकार करनेवाला।

117. समर्थ के लिए घास भी औजार है। समर्थ के लिए तृण भी तलवार है।

118. होशियार बाज़ार में न ले न दे।

119. गंगा गये गंगादास, जमुना गये जमुनादास।

120. रंग बदलनेवाला गिरगिट।

121. चले मौत से गले लगाने, अब नाव क्या पतवार क्या?

122. लहरें थमें कब, नहायें कब ?

123. समुन्दर में लहरें कब थमेंगी

124. समुन्दर का पानी चढाये कौन उतारे कौन?

125. जिन ढूँढा तिन पाइया गहरे पानी पैठ

126. समुन्दर की रेत को गिने कौन?

127. समुन्दर की उफ़ान को कुआँ क्या थामेगा।

128. सयानी लडकी की सगाई अभी, सरकारी नौकरी बस एक महीने में।

129. बनाना न आये बिगाडने में माहिर।

130. समुन्दर में धुले चंदन सा।

131. சம்பா விளைந்து சாய்ந்து கிடக்குது, உண்பாரில்லாம ஊர்க்குருவி மேயுது.

132. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாப் போல.

133. சர்க்கரைப் பாகுத் தோண்டியிலே தாழ மொண்டாலும் தித்திப்பு, மேலே மொண்டாலும் தித்திப்பு.

134. சரக்கு மலிந்தா தானே சந்தைக்கு வரும்.

135. சர்க்கரையும் தேனும் சித்தப்பா, ஏட்டில் எழுதி நக்கப்பா.

136. சரியான முட்டுக் கட்டை.

137. சரியான புண்ணாக்கு.

138. சரியான மரமாம்பழம் (யாருக்கும் பயன்படா தவன்).

139. சரியான மரமண்டை.

140. சரியோ தப்போ சரிகட்டிண்டுதான் போகணம்.

141. சல்லிக் கட்டு மாடுக்குச் சொல்லித்தர வேண்டுமா?

142. சல்லிக் கட்டுக் காளை போல.

143. சல்லடை போட்டு சலிச்சாச்சு.

144. சல்லி பெறாத விஷயம்.

145. சல்லி காசுக்கு வகையில்லாதவன்.

146. சல்லோ பில்லோன்னு இருக்கான்.

147. சலுகை உள்ளமாடு படுகையெல்லாம் மேய்ந்ததாம்.

148. சவாலே சமாளி.

149. சவுக்கைச் சொடுக்கினாத் தான் குதிரை ஓடும்.

150. சனி பிடித்ததோ, சனி பிடித்ததோ.

151. சளி வருதுங்கறதுக்காக மூக்கை அறுத்தெறிய முடியுமா?

152. சரியான கஜனி முகமது.

153. சரெட்டெனத் தீக்குச்சி கிழிச்சாப் போல நெருப்பைக் கொட்டாதே.

154. சறுக்கி விழுந்தவன் காலில் கல்லைக் கட்டி கிணற்றில் தள்ளி விட்ட கதைதான்.

155. சரியான தலையாட்டி பொம்மை.

156. சனத்தோடு சனம் சேரும், சந்தனத்தோடு கற்பூரம் சேரும்.

131. खलिहान भरा है। खानेवाले कोई नहीं।

132. सोने में सुगंध। दूध की सरिता में बहता शहद की धारा।

133. शीरीनी उंगली पर मीठी, गले में मीठी।

134. माँग कम हो तो हाट में आना ही पडेगा।

135. शक्कर शहद मीठे हैं। अक्षर लिखकर चाटो जी।

136. काम पर रोक थाम करनेवाला।

137. बिलकुल गोबर गणेश।

138. निरा निकम्मा। अनाज का दुश्मन, न खुद का न किसी का।

139. काठ का उल्लू

140. सही या गलत गले लगाकर ही जाना है।

141. होशियार के लिए इशारा काफ़ी।

142. सन्नद्ध साँड सा।

143. छलनी से छान लिया।

144. कोई बडी बात नहीं।

145. कौडी की भी कमाई नहीं।

146. बडा मिलनसार।

147. जमीन्दार का बैल जहाँ चाहे चरे।

148. चुनौती संभाल लो।

149. लकडी के बल बन्दरिया नाचे।

150. जुकाम चढा कि शैतान चढा।

151. जुकाम है इसलिए नाक से नाता नहीं तोड सकते।

152. बडा अनथक आदमी।

153. चिनगारी मत उगालो, जीभ थाम लो।

154. फिसले को गढे में धकेलना।

155. हाँ में हाँ मिलानेवाला। सलाम सलाम मेरा नाम, जी हुज़री।

156. लोग जमे भीड बने। सियार की टोली में गधे न जमे।

157. சனபலம் இருந்தால் மனப் பலம் வரும்.

158. சனிப் பிணம் தனி போகாது.

159. சனியன் தொலைந்தால் போதும், சங்கடம் தீர்ந்தால் போதும்.

160. சனிப் பிடித்தவனுக்கு சந்தையிலும் கந்தை அகப்படாது.

161. சனியைப் போல கொடுப்பவனுமில்லை சனியைப் போல கெடுப்பவனுமில்லை.

162. சன்னதம் வந்தவன் போல ஆடறான்.

163. சாக்கடையில் கல் எறிஞ்சாப் போல.

164. சாக்கடைப் பன்னிக்கு சந்தனம் ஒரு கேடா?

165. சாக்கடையில் கலந்த பன்னீர் போல.

166. சாக்கடையில் நீர் எடுத்து பல் துலக்கினாப் போல.

167. சாக்கடையைக் கிளறினால் நாத்தம் தான் மிஞ்சும்.

168. சாக்கடை நீர் சமுத்திரத்தில் சங்கமம் ஆனாப் போல.

169. சாக்கடைப் பன்னிக்கு கும்பியே சந்தனம்.

170. சாக்கடைக் கும்பிக்குப் போக்கிடம் எங்கே?

171. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலளவு.

172. சாகும் காலத்தில் சங்கரா சங்கரா என்பதைப் போல.

173. சாகத் துணிந்தவனுக்கு கயிறென்ன, விஷமென்ன?

174. சாக வேண்டும் என்கிற சதுரியை விட்டு விட்டு வா. வாழ வேண்டு மென்கிற வயதியை அழைத்து வா.

175. சாகப் போது இருந்தாலும், வேகப் போது இல்லை.

176. சாகிற நாய் வீரத்தைக் காட்டினது போல.

177. சாகிற வரையில் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.

178. சருகு பொறுக்க நேரமிருந்தாத்தானே குளிர் காய.

179. சருகாப் போயிட்டான்.

180. சரியான கை நாட்டு.

157. जन बल हो तो मनोबल होगा।

158. शनिवार का मरा साथ ले चलेगा (किसी को)।

159. पिंड छूटे तो ठीक, परेशानी हटे तो ठीक।

160. साढसाती का मारा हर तरह से बेचारा।

161. शनि लूटे, लुटाये।

162. लकवा मारा सा हिल रहा है।

163. ज्यों कीचड में पत्थर फेंका हो।

164. ज्यों मरकट भूषण अंग।

165. ज्यों कीचड से धुला चंदन।

166. मोरी के पानी से कोई दाँत मांजता है।

167. मोरी से मिलेगी क्या कीचड ही।

168. इक नदिया इक नार कहावत, मैलो नीर भरो, जब दोऊ-मिली इक बरन भये तो, सुरसरी नाम परो।

169. सुअर के लिए कीचड ही चंदन है।

170. गंदी नली का कीडा गंदगी में समाया।

171. जो मरने से न डरे, वह सब करने को तैयार।

172. मौत आयी तो भगवान मीत बने। शव बनने से पहले शिव की याद आयी।

173. मरने को तैयार तो ज़हर क्या, समुन्दर क्या?

174. मरने का ख्याल छोडो। जीने का ख्याल थामो।

175. साँस निकलती है, पर आस नहीं निकलती।

176. मरने से पहले दिलेरी दिखाना। आखिरी सांस आखिरी जोश।

177. मरने तक छोडे न हकीम, मरने पर भी छोडे न पंडित।

178. वक्त रहे तभी न मौज मस्ती।

179. सूखकर कांटा बन गया।

180. काला अक्षर भैंस बराबर।

181. சாட்டை சுத்தின பம்பரம் போல.

182. சாட்டையில்லா பம்பரம் போல.

183. சாட்சிக்காரன் காலிலே விழறதை சண்டைக்காரன் காலிலே விழலாம்.

184. சாடிக்கு ஏத்த மூடி.

185. சாண் பாம்பானாலும் முழத்தடி வேணும்.

186. சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை.

187. சாண் செடியிலே முழத்தளவு வெட்டலாமா?

188. சாண் ஏறினால் முழம் சறுக்கறது.

189. சாண் போனா என்ன, முழம் போனா என்ன?

190. சாண் வயிறா? சரீரமெல்லாம் வயிறா?

191. சாணி மிதிக்கிறவளுக்கு சந்தன பூச்சு எதற்கு?

192. சாண் குருவிக்கு முழம் வாலாம்.

193. சாணி மிதிக்கிறவளுக்கு சலங்கை ஒரு கேடா

194. சாணுக்கு முழம் கொசுறா?

195. சாணக்கிய சபதம்.

196. சாத்தாணி (முழுமொட்டை) குடுமிக்கும், சந்நியாசி பூணலுக்கும் முடிச்சுப் போடறாப் போல.

197. சாத்தான் சாமிக்கு வரம் கொடுக்கறாப் போல.

198. சாத்திரம் படித்தாலும் ஆத்திரம் போகாது.

199. சாத்திரமும், சம்பிரதாயமும் சாதகமா இருக்கும் வரை தான்.

200. சாத்திரம் பார்த்தால் மூத்திரம் பெய்ய இடமில்லை.

201. சாதகப் பறவை போல.

202. சாதி ஒளிக்குமா? சத குப்பை நாற்றம் போகுமா?

203. சாது மிரண்டால் காடு கொள்ளாது.

204. சாது பசுவையும் ஏழை பிராமணனையும் நம்பாதே.

205. சாது சாதுங்கற சந்நியாசிக்கு ஏழு எட்டு குஞ்சு குளுவானாம்.

206. சாப்பிட்டு ஏப்பமும் விட்டுட்டான்.

207. சாப்பாட்டு ராமன்.

181. रस्सी से बंधा लट्टू सा।

182. बिन रस्सी के लट्टू सा।

183. गवाह से मुद्दई ही बेहत्तर।

184. लायक जोडी।

185. साँप छोटा हो पर लाठी बडी चाहिए।

186. नाटा ही क्यों न हो पर लडका है।

187. छोटे फैलाव में लंबा कटाव कैसे?

188. थोडी प्रगति बडी दुर्गति।

189. इत्ता जाये या पूरा जाये।

190. पेट का फैलाव, पूरे शरीर में।

191. गोबर पोतनेवाली को चंदन से क्या मतलब।

192. नन्ही सी चिडिया, पर पूंछ इतनी बडी।

193. चले गोबर रौंधने, पहने पायल क्यों?

194. किसमिस मुट्ठी भर खरीद और काजू थैली भर मुफ्त में मांग।

195. चाणक्य का शपथ।

196. दरिद्र और निर्धन की जोडी।

197. जैसे शैतान भगवान को दे वरदान।

198. शिक्षित भी क्रोधी बनता है।

199. शास्त्र और संप्रदाय अनुकूल रहने तक

200. शास्त्र पर अंधविश्वास सदा दुखदायी। शास्त्र देखा मूतने को जगह नहीं।

201. चातक पक्षी सा।

202. न छिपती जाति न जाती गंध लहसन की।

203. संत का क्रोध सत्यानाश का हेतु।

204. भोली गाय और ब्राह्मणी साधु बिगड जाये तो बने तूफान।

205. सन्यासी की संतान (का हेतु) एक नहीं सात।

206. निगलके डकार भी दिया।

207. पेटूमल थाली देखी और बैठ गया।

208. சாப்பாடு கண்ட இடம் சொர்க்கம், படுக்கை கண்ட இடம் கைலாசம்.

209. சாப்பாட்டுக்கேத் தாளம்.

210. சாபக் கேடு.

211. சாப விமோசனம் பெற்ற அகலிகை போல.

212. சாபமே வரமானாப் போல.

213. சாம்பலிலேப் புரளும் நாய்க்கு பூர்வ ஞானம் உதயமாகுமாம்.

214. சாமிக்குப் படைச்சதை சாத்தான் சாப்பிட்டாப் போல.

215. சாம்பலை நக்கும் நாயைச் சாப்பாட்டுக்கு காவல் வைக்கக்கூடாது.

216. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்கலை.

217. சாமி கைக் காட்டும், எடுத்து ஊட்டுமா?

218. சாமி ஆட ஆரம்பிச்சாச்சு.

219. சாமிக்கு மட்டும் படைச்சாப் போறாது, பூசாரிக்கும் படைக்கணும்.

220. சாமி பேரைச் சொல்லி பூசாரி சாப்பிடறாப் போல.

221. சாம தான பேத தண்டம்

222. சாயம் வெளுத்துப் போச்சு, வேஷம் கலைஞ்சிப் போச்சு.

223. சாயம் போனாலும் பட்டு பட்டுதான்.

224. சாயம் போன சீலை போல.

225. சாயத்தொட்டியிலே விழுந்த நரி போல.

226. சாயறப் பக்கமே சாயறாப் போல

227. சாயங்கால ஒளி இருள் போல.

228. சாராயம் குடிச்ச குரங்கு போல.

229. சாரையும் சர்ப்பமும் இழைவது போல.

230. சாரமில்லாத சமாசாரம்.

231. சாரத்தை உட்கொண்டு, சக்கையை உமிழ்ந்து விடுவது போல.

232. சாலவாயும், பானை வயிறும், குதுரு உடம்பும், பொண்ணு மகா அழகுதான்.

233. சாலை மாமரத்துக்கு வேலி என்ன வேண்டியிருக்கு?

208. जहाँ भोजन वहां स्वर्ग, जहाँ बिछावन वहाँ कैलाश।

209. खाना खारे, दोपहर को कहाँ जेवण? रात को कहाँ भोजन?

210. अभिशाप।

211. शाप मुक्त अहल्या सा।

212. शाप जो बन गया वरदान सा।

213. राख में लोटते कुत्ते को बीती बात याद आती।

214. भगवान की भेंट शैतान के पेट में।

215. राख चाटते कुत्ते को, रसोई का रखवाला न बनाना।

216. भगवान सहारा दे। पर पुजारी ठुकरा दे।

217. बडे राह दिखाते, साथ नहीं चलते।

218. शैतानियत सर पर सवार हो गयी।

219. भगवान को भेंट चढाओ, पुजारी के लिए भी थोडा लाओ।

220. भगवान के नाम पर पुजारी खायेगा।

221. साम दाम भेद दंड।

222. पोल खुल गयी। मुलम्मा उतर गया।

223. फीका पडेपर रेशम रेशम ही।

224. रंग उतरी साडी सी।

225. नीली की नांद में गिरी लोमडी सी।

226. जी हुज़ूर, जी हुज़ूर, हम हाज़िर अभी हाज़िर।

227. सांझ का धुंधलका सा।

228. मदिरोन्मत्त मरकट सा। बन्दर और बोतल उसके अन्दर।

229. जैसे नाग और नागिन लिपटे।

230. सारहीन बात।

231. सार चूसा कचडा छोडा / सार निगला कचरा उगला।

232. उभरे दाँत, चिपके गाल, घट सा पेट क्या खूब सुन्दरी।

233. गिरते पेड के लिए बाड क्यों?

234. சாலையோரத்து மரம் போல.

235. சாவி கொடுத்த பொம்மை போல.

236. சாவும், சனனமும் நம் கையிலா இருக்கு.

237. சாஸ்திரத்திற்கு சாஸ்திரம், சுகத்துக்கு சுகம்

238. சிட்டுக்குருவிக்குப் பட்டம் கட்டினால் சட்டி பானையெல்லாம் லொட லொடன்னு கத்தும்.

239. சிக்கலைத் தீர்ப்பான் சிங்கார வேலன்.

240. சிக்கி முக்கிக் கல்லைப் போல.

241. சிக்கல் விழுந்தாச்சு.

242. சிக்கல் உண்டாவதே அதிலிருந்து விடுபடத்தானே.

243. சிக்கினாக் குடுமி, சிக்காட்டா காலு.

244. சிங்கத்தின் குட்டி சிறு நரியாகுமா?

245. சிங்கத்தின் குட்டி சிங்கமாய்த்தானிருக்கும்.

246. சிங்கம் குகையிலே உட்கார்ந்து நகத்துக்கு அழுக்கா எடுத்திண்டிருக்கும்.

247. சிங்கத்தின் காட்டை சிறு நரிவளைத்தாற்போல்

248. சிங்க சொப்பனம் கண்ட யானை போல.

249. சிங்கத்தைக் காப்பாத்தின சுண்டெலி போல.

250. சிங்கத்திற்கு நாயா சிங்கார முடிசூட்டுவது.

251. சிங்கத்தின் வாயிலே போயிட்டுத் தப்ப முடியுமா?

252. சிங்கத்து வாயிலே தலையைக் கொடுக்கறாப்போல.

253. சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா?

254. சிங்கத்தை வென்ற சிறு முயல் போல.

255. சிங்க நடை.

256. சிங்காரமும், ஒய்யாரமும் சிண்டுள்ள வரைதான்.

257. சிங்கம், புலி வாழும் காடே மேல்.

258. சிங்கக் குட்டினா அவன்.

259. சிட்டுக்குருவி மேல் பிரம்மாஸ்திரம் தொடுக்கலாமா?

234. सडक के किनारे के पेड सा।

235. जितनी चाभी दी है राम ने, उतना चले खिलौना।

236. जनम, मरण, बारात, तीनों विधाता के हाथ।

237. शास्त्र भी सधा, स्वार्थ भी सधा।

238. चिडिया के हाथ में राजदंड दे तो दाने दाने में हलचल मचेगा।

239. बाधा मिटाये कान्हा।

240. चकमक पत्थर सा।

241. गांठ पड गयी।

242. समस्याएँ ले जाती हैं समाधान की ओर।

243. या तो चोटी पकडो या पैर।

244. शेर का बच्चा सियार नहीं बनता।

245. शेर का बच्चा शेर ही रहेगा।

246. शेर क्या श्रृंगार कर बैठेगा।

247. शेर की गुफ़ा को सियारों ने धेर लिया।

248. सिंह का सपना देखे हाथी सा।

249. जैसे चूहिया शेर को बचाये।

250. शेर को सजाने में सियार का क्या काम?

251. शेर के मुँह से बचे न कोई।

252. शेर के मुँह में सर देना।

253. भूखा शेर क्या चींटी मारे ?

254. शेर को जीतनेवाला खरगोश सा।

255. सिंह की चाल।

256. श्रृंगार और अलंकार शिखा रहने तक।

257. हिंस्र जन्तुओं का जंगल ही भला।

258. सिंह शावक सा वह साहसी है।

259. मक्खी मारने बंदूक क्यों?

260. சிட்டுக்குருவிக்கு நாட்டாமை கொடுத்தா சட்டிப்பானையை உருட்டுமாம்

261. சிட்டுக் குருவி போல.

262. சிடுக்குத் தலையும், சொடுக்குப் பேனும்.

263. சிண்டு முடியறவனாச்சே.

264. சிண்டு சும்மாவா ஆடும்.

265. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

266. சித்தம் போக்கு சிவன் போக்கு, அத்தன் போக்கு அதன் போக்கு, பித்தன் போக்கு பெரும் போக்கு.

267. சித்திர மாம்பழம் சுவைக்க உதவுமா?

268. சித்திரத்தில் மலர்ந்த தாமரை போல.

269. சித்திரக் கொக்கே, ரத்தினத்தைக் கக்கு.

270. சித்திரத்தைக்குத்தி, அப்புறத்தே வைப்பவளாச்சே.

271. சித்திரபுத்திரனுக்குத் தெரியாமல் சீட்டு கிழியுமா.

272. சித்திர புத்திரன் கணக்கு போல.

273. சித்திரபாவை போல.

274. சித்திரா பவுர்ணமி நிலவு போல.

275. சித்திர சுரைக்காய் கறிக்கு ஆகுமா?

276. சித்து விளையாட்டு காட்டறான்.

277. சித்தி கிடைச்சா முக்தி கிடைக்கும்.

278. சித்தம் தெளிந்தால் பித்தம் (பைத்தியம்) தெளியும்.

279. சிதம்பர ரகசியம்.

280. சிந்தித்து செயல்படு.

281. சிந்தாமணி போல (சிந்தித்ததைத் தரும்).

282. சிந்தையில் உதித்தால் செயலில் தெரியும்.

283. சிந்தனைச் சிற்பி.

284. சித்தாளுக்கு ஒரு முட்டாள், செருப்புத் தூக்கிக்கு ஒரு அடப்பைக்காரன்.

285. சிந்தின வீட்டிலே சேராது, மங்கின வீட்டிலே வராது.

260. उल्लू को डोर दे तो डाली डाली चिडिया पकडे।

261. चिरैया सा। नन्हीं मुन्हीं चिडिया सा।

262. खिचडी केश, जुओं का बसेरा।

263. आग लगानेवाला चुग़लखोर।

264. चोटी हिले तो कोई मतलब है।

265. बनते बनते तस्वीर, बोलते बोलते भाषा।

266. मन चले मौज की तरह, पैर चले बादल की तरह।

267. तस्वीर की तरकारी घरबारी में काम नहीं।

268. चित्र लिखित सरोज सा।

269. तस्वीर का बगुला मछली नहीं पकडेगा।

270. बाप रे बाप! बडे होशियार।

271. मौत आती है चित्रगुप्त के हिसाब से।

272. चित्रगुप्त का हिसाब सा।

273. चित्र लिखित प्रतिमा सी।

274. चैत की चाँदिनी सी।

275. खीर की तस्वीर बस पीर ही लाये।

276. कमाल दिखाता है।

277. सिद्धि मिले तो मुक्ति मिलेगी।

278. मन साफ़ तो सब साफ़

279. बडी राज़ की बात

280. सोचकर काम करो।

281. मुँह खोले तो वरदान।

282. विचार में आया तो काम बनेगा।

283. चिन्तन में सरताज

284. नौकर का एक पिछलगुआ।

285. जहाँ बिखरता वहाँ न जमता।

286. சிப்பிக்குள் முத்து போல.

287. சிப்பியும் முத்தும் ஒண்ணாகுமா?

288. சிம்ம சொப்பனம்.

289. சிம்பிலே வளையாதது கம்பிலே வளையுமா?

290. சிரங்கு பிடிச்சவன் கை சும்மா இருக்குமா?

291. சிரிப்பாய்ச் சிரிச்சு சீலைப் பேன் குத்தியாச்சு.

292. சிரிக்க சிரிக்க சொல்லுவா ஊர் மனுஷா, அழ அழச் சொல்லுவா தன் மனுஷா.

293. சிரைத்தால் கூலி, சேவித்தால் சம்பளம்.

294. சிரிப்பாய்ச் சிரிச்சுப் போச்சு.

295. சிலந்தி வலையில் சிக்கின ஈ போல.

296. சிலுவையிலே அறைஞ்சாப் போல.

297. சிவ பூசையில் கரடி புகுந்தாப் போல.

298. சிவன் சொத்து குல நாசம்.

299. சிவன் கழுத்து பாம்பு போல.

300. சிவத் துரோகம் குல நாசம்.

301. சிவப்பு விளக்கு ஏத்தியாச்சு.

302. சிவலிங்கத்துக்கு மேலே எலி ஓடறாப் போல.

303. சிவலிங்கத்தின் மேலிருந்து சிரிக்கும் எலியை அடித்தால் சிவன் மீது விழாமல் தப்புமா?

304. சிவன் கோவில் பெருச்சாளி அர்ச்சகருக்கு அஞ்சாது.

305. சிறகொடிந்த பறவை போல.

306. சிறு பிள்ளை செய்த வேளாண்மை வீடு வந்து சேராது.

307. சிறுகக் கட்டி பெருக வாழ்.

308. சிறு துளி பெரு வெள்ளம்.

309. சிறு பொறி பெருந்தீ.

310. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

311. சிறுமையில் கல்வி சிலையில் எழுத்து.

286. ज्यों सीपी में मोती।

287. सीपी और मोती न होते एक सा।

288. भीगी बिल्ली। बडा डरावना सपना।

289. बचपन में न सीखे तो बुढापे में न आयेगा।

290. हाथ में खुजली, खामोश रहे कैसे?

291. इज़्ज़त मिट गयी धूल में।

292. अपने तो आँसू बहायेंगे, पराये खिल्ली उडायेंगे।

293. मुंडन करे तो मज़दूरी, दंडवत करे तो वेतन।

294. बडी बेशरमी हो गयी। जगहँसाई हो गयी।

295. मकडी के जाल में फँसी मक्खी सी।

296. जैसे सूली पर चढा दिया।

297. बेवक्त बाधा पडी।

298. शिवजी का भंडार छुए तो सर्वनाश।

299. जैसे शिवजी के गले का साँप।

300. शिव द्रोह कुल नाश

301. लाल बत्ती जल गयी।

302. जैसे शिवलिंग पर चढता चूहा।

303. शिवलिंग पर बैठे चूहे को मारें तो शिवलिंग पर भी पडे प्रहार।

304. शिवजी के मंदिर का छछुंदर पुजारी से नहीं डरता।

305. पर कटे पंछी सा।

306. नादानों की खेती खेत में ही खतम।

307. बूंद बूंद से भरे घडा।

308. बूंद से बूंद मिले तो बने सागर।

309. चिनगारी से निकले दावानल।

310. काम आवे कहीं सुई और कहीं चाकू।

311. बचपन की सीख पत्थर की लकीर।

312. சிறு முள் குத்தி பெருமலை நோகுமா?

313. சிறு மீன் ஓட பெருமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு.

314. சிறு உளியும் பாறையை உடைக்கும்.

315. சிறு விதை ஆலமரமாகும்.

316. சிற்றானைக் குட்டிக்கு சிற்றெறும்பு சளைக்காது.

317. சிற்றெறும்பை சிற்றெறும்பும், கட்டெறும்பை கட்டெறும்பும் நாடும்.

318. சிற்றானைக் குட்டிக்குப் பட்டை நாமம் சாத்தியது போல.

319. சின்ன மீனைப் போட்டு தானே பெரிய மீனை பிடிக்க முடியும்.

320. சீசீ என்றதும் இந்த வாய் தான், சிவசிவா என்றதும் இந்த வாய் தான்.

321. சீட்டு கிழிஞ்சிடும்.

322. சீதை முகத்திலே சிரிப்பு வந்துடுத்தே!

323. சீதைக்கும் விடிவு காலம் வந்தாச்சு.

324. சீப்பை ஒளிச்சு வைச்சா கல்யாணம் நின்னுபோயிடுமா?

325. சீவி முடிச்சி சிங்காரிக்கறத்துக்குள்ளே பட்டணம் கொள்ளை போயிடும்.

326. சீரங்கத்து உலக்கை போல.

327. சீனி போட்டால் யானைத் தின்னுமா?

328. சுக்கு செத்தாலும் சுரணை போகாது.

329. சுக்கு கண்ட இடத்திலே பிள்ளைப் பெத்துக்கறவளாச்சே.

330. சுக்குக்கு மிஞ்சின மருந்துமில்லை, பட்டினிக்கு மிஞ்சின பத்தியமும் இல்லை.

331. சுக்கா காய்ஞ்சு போயிடுத்து.

332. சுட்டாலும் சங்கு வெண்மைதரும்.

333. சுட்ட நண்டுக்கு வேலி கட்டின சுடுகாட்டுப் பள்ளி போல.

334. சுட்டுப் போட்டாலும் ஏறாது.

335. சுடச் சுடதங்கமும் பொன்னாகும்.

336. சுட்ட களியை நாய் புரட்டுகிறாப் போல.

337. சுட்ட கத்திரிக்காய் போல்.

312. छोटे काँटे से पहाड नहीं खोदा जाता।

313. बगुला करे इंतजार बडी मछली का।

314. छेनी से पर्वत टूटता है।

315. बीज के गर्भ में छिपा विशाल वट वृक्ष।

316. हाथी से न डरती चींटी।

317. नस्ल नस्ल को पहचानता है।

318. मोटी तोंद पर मोटा जनेऊ।

319. छोटी मछली डालकर बडी मछली पकडना है।

320. चल हट उसी ज़ुबान से, आ आ उसी ज़ुबान से।

321. टिकट कट जायेगी।

322. दुखिया सीता भी देखो मुसकुराती है।

323. सीता के भी उद्धार का समय आ गया।

324. कंघी नहीं तो क्या शादी रुक जायेगी?

325. सजते-सँवारते साँझ ढल जायेगी।

326. हाथों हाथ बदलता चक्कर।

327. हाथी क्या शक्कर खायेगा।

328. सोंठ सूखे भी, तीखापन नहीं जाता।

329. बहते पानी में हाथ धोनेवाला।

330. सोंठ से बडी दवा नहीं। भूख से बडा पथ्य नहीं।

331. सोंठ सा सूख गया।

332. शंख रहेगा सदा सफेद।

333. मरे पर करे क्यों लाठी का प्रहार।

334. काठ का दिमाग, कुछ चढे नहीं।

335. तपते तपते सोना बनता है कुंदन।

336. बासी भात कुत्ता खाये। थूक वमन कौआ खाये।

337. भुने बैंगन सा।

338. சுட்டிப் பயல்.

339. சுட்டி மகன் பேச்சு கல்லுக்குக்கல் அண்டைகொடுத்தது போல.

340. சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா.

341. சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்.

342. சுண்டெலிக்குப் பயந்தது மத்தகஜம், சுக்குக்கு பயந்தது வாதரோகம்.

343. சுண்ணாம்பிலிருக்கு சூட்சுமம், சூட்சுமத்திலிருக்கு மோட்சம்.

344. சுண்டைக்காயில் கடிக்கறது பாதி, வைக்கறது பாதியா.

345. சுண்ணாம்பு கலயத்தை நாய் தூக்காது.

346. சுண்டி விட்ட காசு போல.

347. சுத்தம் சோறு போடும்.

348. சும்மா கிடக்கிற சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி.

349. சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம்.

350. சும்மா இருக்கிற சிட்டு குருவிக்கு சோத்தைப் போடுவானேன். அது கொண்டையைக் கொண்டையை ஆட்டிண்டு கொத்த வருவானேன்.

351. சும்மா இரு என்றால் அம்மானைப் போல குதிக்கிறாயே.

352. சும்மாவே மெல்லற வாய்க்கு ஒரு பிடி அவலும் கிடைத்தாப் போல.

353. சும்மாவே கூத்தாடற குரங்குக்கு கள்ளையும் ஊத்திக் கொடுத்தாப் போல்.

354. சும்மா போற சனியனை விலைக் கொடுத்து வாங்கினாப் போல.

355. சும்மா இருந்தா சோறு ஆகுமா, வாடா சித்தா கால் ஆட்ட.

356. சுயம்பாகம் தான்.

357. சுயம் வரத்திற்கு வந்த ராஜகுமாரனைப் போல.

358. சுரண்டல் பேர்வழி / சுரண்டல் பெருச்சாளி.

359. சுருட்டுப் பாயும், குருட்டுப் பெண்ணும் போல.

360. சுரைக்காய்க்கு உப்பில்லை.

361. சுரைக்காய் பையில் முளைச்சாலும் சமயம் வந்தா கூரை மேல் ஏறும்.

362. சுருட்டை சோறு போடும், பம்பை பால் வார்க்கும் கோரை குடி கெடுக்கும்.

363. சுருக்கு முடி போட்டு இழுத்துட்டான்.

364. சுவத்தை வெச்சிதானே சித்திரம் எழுத முடியும்.

338. होशियार लडका।

339. होशियार के शब्द पत्थर पर जमा पत्थर सा।

340. नकद चाहिए या उधार। काम की चाहिये या दाम की।

341. मक्खी बांधने रस्सी ढूँढना।

342. चुहिया से डरे हाथी, सोंठ से डरे वात रोग।

343. मर्म छिपा है चूने में, मोक्ष छिपा है मर्म में।

344. बेर को क्या खाये आधा और जमाये आधा।

345. चूनादान को कुत्ता न सूंघेगा।

346. चित्त या पट में फंसा पैसा सा।

347. सफाई खिलाये।

348. आ बैल मुझे मार।

349. मुफ़्त में मिलेगा क्या भगवान का प्रसाद।

350. सुस्त पडे को खिलाकर झगडा मोल लिया।

351. बैठो कहा तो गेंद की तरह उछलते हो।

352. मुँहजोर को मिल गया बकवास का मसाला।

353. उछलते बंदर को ठर्रा पिलाया।

354. पडोस के साढसाती को बारात में बुला लिया।

355. सुस्त पडने से काम नहीं बनता, कम से कम पैर तो हिलाओ।

356. खुद की रसोई। खाये मलाई न खाये मलाई।

357. स्वयंवर में शामिल शाहजादा सा।

358. उचक्का आदमी। गिरह कट आदमी।

359. फ़टी चटाई और बेक़ार की लुगाई।

360. अनर्गल बात। न नमक न स्वाद।

361. कद्दू वक्त आये तो छत पर चढेगा।

362. घुंघराले बाल खिलाये, भरे बाल पिलाये, खडे बाल करे बरबाद।

363. गांठ डालकर खींच लिया।

364. भित्ती न हो तो चित्र कहाँ?

365. சுவத்துக் கீரையை வழிச்சி போடுடி சுரணை கெட்ட வெள்ளாட்டி.

366. சுவரோடயாவது சொல்லி அழு.

367. சுவத்துக்கும் காது உண்டு.

368. சுவர் மேல் பூனை போல.

369. சுவரில்லாத வீட்டுக்கு கூரை போடறாப் போல.

370. சுழலில் சிக்கிய துரும்பு போல.

371. சுழி சரியா இருந்தா வழிதானேத் தெரியும்.

372. சுற்றி விட்ட பம்பரம் போல.

373. சுற்றம் வேண்டின் குற்றம் பாராதே.

374. சூடு மிதிக்கற மாட்டின் வாயைக் கட்டலாமா?

375. சூடு சுரணையே இல்லாத ஜன்மம்.

376. சூடு கண்ட நாய் சாம்பல் குளிக்காது.

377. சூடு கண்ட பூனை போல.

378. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையில் சேராது.

379. சூடு சுரணை அற்றவனுக்கு நாடு நகரம் ஏது.

380. சூடியும் உணர்ச்சி வராது சுரணைக் கெட்டமாட்டிற்கு.

381. சூதும் வாதும் வேதனை செய்யும்.

382. சூரனுக்கும் துரை மக்கள் துரும்பு.

383. சூரியனைக் கண்ட பனி போல.

384. சூரியனைப் பார்த்து நாய் குலைச்சாப் போல.

385. சூரியனைக் கண்ட தாமரை போல.

386. சூரியனுக்கும் குளிர் எடுக்கும்.

387. சூரியனையும் கிரகணம் பிடிக்கிறது.

388. சூரியனுக்கு விளக்கு காண்பிக்கறாப் போல.

389. சூரியனைக் கையால் மறைக்க முடியுமோ?

390. சூரியனைப் பார்த்துத் துப்பினால் மார் மேலதான் விழும்.

365. फेंका जो माँगा वही, शरम की बात रही कि रही।
366. भित्ती से बताकर उफ़ान उतारना।
367. दीवार के भी कान होते हैं।
368. भित्ती पर बैठी बिल्ली सी।
369. भित्ती ही नहीं तो छत क्यों?
370. भवंडर में फंसा तिनका सा।
371. किस्मत में लिखा हो तो रास्ता खुलेगा ही।
372. घूमता लट्टू सा।
373. रिश्ता चाहिये तो दोष न देखना।
374. फटी खोपडी पर क्यों डंडा मारे।
375. बेहया, बेशरम।
376. दूध का जला छाछ भी फूंक फूंक कर पियेगा।
377. जैसे भीगी बिल्ली सा।
378. जली बिल्ली, चूल्हे से दूर।
379. बेहया को ठौर ठिकाना कहाँ?
380. लात पर भी न माने उसे बेशरम पहचाने।
381. छल-कपट देगा दुख।
382. वीर न डरे किसी से।
383. सूरज की किरणों से सूखनेवाले ओस कणों सा।
384. सूरज को देख भूंकता कुत्ता सा।
385. सूरज को देखकर खिले कमल सा।
386. सूरज को भी ठंड लग सकती है।
387. सूरज पर भी ग्रहण पडता है।
388. जैसे सूरज को दिया दिखाना।
389. सूरज को कहीं हथेली से छिपा सकते हैं।
390. सूरज पर थूके तो छाती पर गिरे।

391. செக்கு மாடு போல.

392. செக்கு உலக்கையை விழுங்கினவனுக்கு சுக்கு கஷாயம் மருந்தாகுமா?

393. செக்கு மாட்டுக்குத் தான் சுத்தறதே உலகம்.

394. செக்கு மாடு மாதிரி சுத்தி சுத்தி வரான்.

395. செக்கு உலக்கை போல.

396. செட்டும் கட்டும் சொல்லிக் கொடுத்தா வரும்.

397. செடியிலே வணங்காதது, மரத்திலே வணங்குமா?

398. செடியிலிருக்கிற ஓணானை மடியில் விட்டுக் கொண்டு குடையதே குடையதே என்றானாம்.

399. செடி வெச்சவன், தண்ணியும் ஊத்துவான்.

400. செட்டியார் ஜம்பம், விளக்கெண்ணைக்குக் கேடு.

401. செட்டி பிள்ளையோ, கெட்டிப் பிள்ளையோ.

402. செட்டியார் சிண்டு சும்மா ஒண்ணும் ஆடாது.

403. செட்டி முடுக்கோ, சரக்கு முடுக்கோ.

404. செட்டி ஆதாயமில்லாமலா ஆத்தோட போவான்.

405. செட்டி சிங்காரிக்கறத்துக்குள்ளே பட்டணம் பறிபோயிடும்.

406. செத்தவன் வீட்டிலே கெட்டவன் யார்?

407. செத்தமாடு புல் தின்னுமா.

408. செத்தவன் கண்ணு செந்தாமரைக் கண்ணு.

409. செத்தும் கொடுத்தான் சீதக்காதி.

410. செத்த நாய்த் திரும்ப கடிக்காது.

411. செத்த பாம்பை அடிக்கறவன்.

412. செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு.

413. செத்தாலும் ஆனை ஆயிரம் பொன்.

414. செத்த இடம் புல்லு முளைச்சுப் போயாச்சு.

415. செத்தன்னிக்கு வாடான்னா, பத்தன்னிக்கு வருவான்.

416. செத்த பாம்பை ஆட்டுவாளாம், வித்தைக்கார பொம்பளை.

391. कोल्हू के बैल सा।

392. मूसल निगलनेवाले को हाजमा कहाँ से मिलेगा।

393. कोल्हू के बैल के लिए चक्कर ही संसार है।

394. कोल्हू के बैल सा चक्कर काटता है।

395. कोल्हू के मूसल सा।

396. किफायत आदत है, सिखाई नहीं जाती।

397. छुटपन में आया नहीं तो बुढापे में क्या आयेगा?

398. आ बैल मुझे मार।

399. पेड लगाया तो पानी सींचेगा ही।

400. बनिये का बडप्पन, तेल का नुकसान।

401. सेठ का बेटा, गांठ का पक्का।

402. पांडे की चोटी बिन फ़ायदे न हिलेगी।

403. माल तगडा या सेठ तगडा।

404. सेठ का हर कदम मुनाफ़े का कदम।

405. बन ठनकर निकलने के पहले काम उजड जायेगा।

406. ग़मी के वक्त सभी साधु बनते हैं।

407. मरी गाय क्या घास खाये?

408. मरे की तारीफ़ करे सभी।

409. कर्ण मरे पर कवच देकर ही।

410. मरा कुत्ता कभी न काटे।

411. मरे साँप को मारनेवाला।

412. मरे तो पता चले सेठ की आन बान।

413. मरे भी हाथी नौ लाख का।

414. जहाँ दफ़नाया वहाँ घास उग गयी।

415. ज़नाजे में बुलाया तो फ़ातिहा को आया।

416. होशियार डराये मरा साँप दिखाकर।

417. செத்த மீன்கள் வெள்ளத்தோடு போய்விடும்.

418. செத்தவன் கண் கடா கண், இருக்கறவன் கண் இல்லி (சின்ன)க் கண்.

419. செத்தவன் உடைமை இருந்தவனுக்கு அடைக்கலம்.

420. செத்தைப் பொருக்கினாதானே குளிர் காய முடியும்.

421. செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன் நூலைக் குறைத்தான்.

422. செப்பு காசுக்குக் கூட வழி கிடையாது.

423. செப்புடு வித்தை காட்டறான்.

424. செம்மறி ஆட்டுக் கூட்டம்.

425. செம்மறி ஆடு போல.

426. செய்தவினை செய்தவர்க்கே.

427. செய்வன திருந்தச் செய்.

428. செய்யும் தொழிலே தெய்வம்.

429. செருப்புன்னா அதை வாசல்லதான் கழட்டி வைக்கணும்.

430. செருப்பு கடிச்சி செத்தவங்களும் உண்டு, பாம்பு கடிச்சி பொழைச்சவங்களும் உண்டு.

431. செருப்படி பட்டாலும் திருட்டுப் பழக்கம் போகாது.

432. செருப்பு தேய்ஞ்சி போச்சா, தூக்கி எறி.

433. செருப்பு கடிக்கறதேன்னு, திருப்பி கடிக்க முடியுமா?

434. செருப்புக்குத் தக்க காலை வெட்ட முடியுமா?

435. செருப்பு பிய்ஞ்சிடும்.

436. செருப்பா உழைக்கறவன்.

437. செல்வ சீமாட்டி சீரங்க நாயகிக்கு சீதனம் வந்ததாம் வறையோடு (சட்டி பானை).

438. செல்லாக் காசா போயாச்சு.

439. செல்வர்க்கழகு செழுங்கிளைத் தாங்குதல்.

440. செல்லும் செல்லாததற்கு செட்டியார் இருக்கார்.

441. செல்லரிச்சிப் போயாச்சு.

442. செல்லுபடியாகாத சரக்கு போல.

417. मरी मछली बाढ के साथ।

418. मरे की किस्मत उलट गयी, रहे की किस्मत जम गयी।

419. मरे की मिल्कियत, जिन्दों का आश्रय।

420. लकडी जोगाड करो, ठंड चली जायेगी।

421. दाम घटा, माल घटा।

422. फूटी कौडी के लिए भी चारा नहीं।

423. कलामुंडी दिखाता है।

424. भेडों का झुंड।

425. भेड सा।

426. अपनी करनी, अपनी भरनी।

427. जो भी करो, ठीक करो।

428. काम ही राम है।

429. हर चीज़ अपनी जगह।

430. जूत के काटे भी मरे, साँप के काटे भी जिये।

431. चोरी की आदत छूटती नहीं आसानी से।

432. जूता घिस गया तो फेंक दो।

433. जूता काटे तो उल्टा काट नहीं सकते।

434. चप्पल के बराबर पैर नहीं काट सकते।

435. खूब जूता पडेगा।

436. काम से घिस-पिस गया है।

437. धनवान की बेटी लायी तवा घडा दहेज़ में।

438. खोटा पैसा बन गया।

439. धनी वही जो सब को सहारा दे।

440. खुद फंसा और दूसरों को फंसाया।

441. दीमक खा गयी।

442. माल पडा है, मोल नहीं।

443. செல்வம் செல்வோம் செல்வோமென்று சென்றுவிடும், தரித்திரம் தரித்து இரோமென்று தப்பி விடும்.

444. செல்வத்துள் செல்வம் மழலைச் செல்வம்.

445. செல்வம் வந்திடில் பணிவு போய் விடும்.

446. செவிடன் காதிலே ஊதின சங்கு போல.

447. செவிடும் குருடும் சேர்ந்து சந்தைக்குப் போனாப் போல.

448. செவிட்டுக்கு சூனியம், அசட்டுக்கு ஆங்காரம்.

449. செடியிலே பட்ட தழும்பு, மரத்தோட மரமா வளர்றாப் போல.

450. செட்டற்ற குடித்தனம், மட்டற்ற தரித்திரம்.

451. சேக்கிழார் கோவில் கட்டினாப் போல.

452. சேக்குப் போக்குத் தெரியாதவன்.

453. சேத்திலே கல்லை விட்டு எறிஞ்சா மேலத்தான் தெறிக்கும்.

454. சேத்தில் முளைத்த செந்தாமரை.

455. சேத்தை வாரி பூசிண்டாச்சு.

456. சேத்திலே காலை வைச்சாத்தான் சோத்திலே கையை வைக்க முடியும்.

457. சேத்திலே காலை வைக்கறச்சத்தான் தயக்கம்.

458. சேத்திலே கிடக்கிற எருமையைத் தூக்குவானேன்.

459. சேத்திலே புதைந்த யானையைக் காக்காயும் கொத்தும்

460. சேத்திலே மேய்கிற பிள்ளைப் பூச்சி போல.

461. சேத்திலே நட்ட கம்பம் போல.

462. சேர்ந்து வாழ்ந்தால், நேர்த்தியாய் வாழலாம்.

463. சேர இருந்தால் செடியும் பகை, தூர இருந்தால் துரட்டியும் உறவு.

464. சேலை முள்ளு மேலே விழுந்தாலும், முள்ளு சேலை மேல் விழுந்தாலும் நஷ்டம் சேலைக்குத் தான்.

465. சேவல் போட்ட முட்டையை சிவக்க வறுத்து கொடடி என்றானாம்.

466. சேணம் கட்டின குதிரை போல.

467. சேணியன் பேச்சு புடவையோட, வாணியன் பேச்சு எண்ணையோட.

468. சேணியனைக் கெடுக்க, சாண் குரங்கு பத்தாதா?

443. अमीरी और गरीबी आती-जाती रहती है।

444. संतान ही सर्वोत्तम संपत्ति। तुतली बोली, बडी दौलत।

445. दौलत आदमी को मगरूर बनाता है।

446. बहरे के कान में बजी शंख ध्वनि सी।

447. जैसे बहरा और अंधा मिल के गये हाट में।

448. बहरा और बेवकूफ सुने नहीं कुछ।

449. बचपन का घाव बुढापे तक रहेगा।

450. गिरस्थी में किफ़ायत, सुख संपन्नता का साधन।

451. ज्यों कबीर ने बनाया मंदिर।

452. सीधा और भोला।

453. कीचड में पत्थर फेंको तो छितरेगा तुम्हारे तन पर ही।

454. पंक से निकले पंकज सा।

455. पूरी बदनामी हो गयी। दाग लग गया।

456. खेत में हल पकडे तभी पेट में भोजन जायेगा।

457. बदनामी में पहला कदम ही उठाने से हिचकते हैं।

458. कीचड में पडी भैंस को उठाये क्यों?

459. परेशानी में जकडे का हर आदमी दुश्मन।

460. जैसे कीचड में पडा कीडे सा।

461. कीचड में गडा खंभा सा।

462. मिल्लत में ताकत है।

463. दूर की ढोल सुहानी।

464. काँटे पर कपडा पडे या कपडे पर काँटा, नुकसान तो कपडे का ही है।

465. मुर्गे ने अंडा दिया है, उसे जल्दी पका दो।

466. लगाम लगाये घोडा सा।

467. जुलाहे की बात कपड़े के साथ, तेली की बोली तेल तक।

468. बुनकर के घर में बंदर, पकड में न आये जकडता जाये।

469. சேணியனுக்கு நூற்கக் கத்துக் கொடுக்கணுமா?

470. சேணியன் காலாட்டினாத்தான் சீவியம் நடக்கும்.

471. சைத்தான் வேதம் ஓதினாப் போல.

472. சைவம் முற்றி, எலும்பு எலும்பாய்க் கழியுது.

473. சொக்குப் பொடி போட்டுட்டான்.

474. சொட்டைத் தலையன், வழுக்கைத் தலையனுக்கு வாரி விட்டாப் போல.

475. சொடக்குப் போட்டா போதும்.

476. சொத்தும் - பத்தும் இருந்தாத்தான் அண்ணனும் தம்பியும்.

477. சொத்தைக்குப்பயந்து, சொத்தை பிரிப்பதா?

478. சொந்தக் காலில் நிற்கப் பழகு.

479. சொந்தமும் பந்தமும் பசையுள்ளவரைதான்.

480. சொல் புத்தியும் கிடையாது, சுயபுத்தியும் கிடையாது.

481. சொருகிக்கிடந்த அகப்பையும், சோறு அள்ளப் புறப்பட்டது.

482. சொறி பிடிச்சவன் கை சும்மா இருக்குமா.

483. சொறிந்த கையும், கொறிச்ச வாயும் சும்மா இருக்குமா

484. சொறிந்து தேய்க்காத எண்ணையும், பரிந்து இடாத சோறும் வீண்.

485. சொறி பிடித்தவன் அதைத் தோண்டி தோண்டி ரசிப்பது போல.

486. சொறி சொறிகிற சுவாரசியத்தில் யானை விலை கேட்டாப் போல.

487. சொன்னால் ஆத்தா செத்துப் போவா, சொல்லாட்டி அப்பன் செத்துப் போவான்.

488. சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை.

489. சொன்னதை விட்டுட்டு சுரைக்காயை பிடுங்கினானாம்.

490. சொன்னது ஒண்ணு, செஞ்சது ஒண்ணு, நடந்தது ஒண்ணு.

491. சொல்லாமல் வரும் பொல்லாத காலம்.

492. சொல்லறவன் சொன்னா, கேக்கறவனுக்கு மதி எங்கே போச்சு.

493. சொர்க்கத்தின் முதல் படியிலே காலை வைச்சாச்சு.

494. சொர்க்கத்துக்குப் போகும் போதும் கக்கத்தில் கழுதைக்குட்டியா?

469. बुनकर को बुनना कोई क्या सिखाये।

470. जुलाहा करघा चलाये तभी बनेगा काम।

471. ज्यों शैतान ने नसीहत दी।

472. ढोंगी भगत। भभूत रमाया पर सन्त का सबूत गवाया।

473. जादू टोना कर दिया।

474. खिचड़ी बालवाले ने गंजे को कंघी की।

475. चुटकी भरे तो काफ़ी।

476. मिल्कियत हो तो भाईचारा।

477. कमी-खामी देखकर बंटवारा कर लेना।

478. अपने पैरों पर खड़े रहना सीखो।

479. रिश्ते नाते धन के रहते।

480. सोचता नहीं, सुनता भी नहीं। खुद भी न जाने, समझाना न माने।

481. बेकार भी काम करने निकला। खाली हांडी खाने को निकला।

482. खुजली खामोश कैसे रहे।

483. खुजलाते हाथ और चबाते मुँह चुप रहे न।

484. प्यार मुहब्बत के बिना खिलाना पिलाना बेकार।

485. खुजली को खुरेद खुरेद कर मज़ा लेना। आता है मज़ा।

486. खुजली की मस्ती में हाथी का दाम पूछना।

487. आगे खाई, पीछे कुआँ।

488. रटता जाये तोता।

489. बस की बात छोडकर बेबस की तरफ़ हाथ बढाया।

490. जाने क्या तूने कही। जाने क्या मैंने सुनी बात कुछ बन ही गयी।

491. बुरा जमाना दस्तक देकर नहीं आता।

492. कहनेवाले हज़ार कहेंगे, सुननेवाले की बुद्धि क्या घास चरने गयी।

493. अच्छे दिन आ गये। स्वर्ग नसेनी में चढ गये।

494. ज़न्नत का रास्ता साथ चले बेढंगा।

495. சோத்தாலடிச்சு சோறு.

496. சோத்துக்கேத்த தாளம்.

497. சோதனை மேல் சோதனை, போதுமடா சாமி.

498. சோத்துக்குப் பஞ்சமில்லை.

499. சோத்துக்கேத் தாளம், பருப்புக்கு நெய் கேக்கறதோ.

500. சோத்துக்கு வீங்கின நாயே, மாட்டுப் பொங்கலுக்கு வாயேன்.

501. சோத்துப் பானை உடைஞ்சா, மாத்துப் பானை கிடையாது.

502. சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோட.

503. சோத்தை விடுவானேன், சொல்லைக் கேட்பானேன்.

504. சோத்திலே பாத்தி கட்டறவன்.

505. சோளக் கொல்லை பொம்மை போல.

506. சோளக் கொல்லையில் மாடு மேயந்தால் சொக்கனுக்கென்ன?

507. சோறு கண்ட இடம் சொர்க்கம்.

508. சோறு கண்ட இடம் சொர்க்கம், திண்ணை கண்ட இடம் கைலாசம்.

509. சோறு கிடைக்காத போது ஜோடி நாய் எதற்கு?

510. சோறு சிந்தினா பொருக்கலாம், சொல் சிந்தினா பொறுக்க முடியுமா?

511. சோழன் பிரமஹத்தியாட்டம்.

512. சோழியன் குடுமி சும்மா ஒண்ணும் ஆடாது.

513. சோறும், துணியும் தவிர மற்றதெற்கெல்லாம் குறைவில்லை.

514. சோற்றிலே கிடக்கிற கல்லை எடுக்க மாட்டாதவன் ஞானத்தை எப்படி அறிவான்.

495. पेटू खाता जाये।

496. जैसा खाना वैसा गाना।

497. बस अब आगे सहा नहीं जायेगा।

498. खाना तो मिलेगा ही।

499. कौर ही न मिले तो घी की तलाश क्यों?

500. परसों से भूखा आज तरसने आ जा।

501. एक भी साबित बरतन नहीं।

502. सुस्त खाये केला छिलके के साथ ही।

503. न्योता न माना, गाली खायी।

504. बड पेटू ठूंसता ही जाये।

505. खेत में खडा काक भगोडा।

506. खेत में बैल घुसे तो परायों को क्या?

507. जहाँ भोजन वहीं स्वर्ग।

508. जहाँ भोजन वहाँ स्वर्ग, जहाँ बिस्तर वहीं नींद।

509. भूख ही भूख, साथ जोडी क्यों?

510. भात बिखरे तो जमा सकते हैं, बात बिखरे तो कैसे जमायें?

511. जैसे कोई महापाप किया हो।

512. ब्राह्मण की चोटी बेकार न हिलेगी।

513. खाना-कपडा छोडकर बाकी सब मयस्सर।

514. जो चावल के कंकड न निकाल सके, वह शंकर की बात कैसे जाने?

# ஞ

1. ஞாலம் அனைத்தும் காலன்.
2. ஞாபகம் இல்லை என்று எவனும் சொல்லுவான், ஞானமில்லையென்று எவனும் சொல்ல மாட்டான்.
3. ஞாயிற்றுக்கிழமை ஒரு பொழுது நண்டு வேண்டாம், சாறு விடு.
4. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே
5. ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பம்.
6. ஞானம் எல்லாம் ஒரு மூட்டை, உலகமெல்லாம் ஒரு கோட்டை.
7. ஞானிக்கு மன்னம் துரும்பு

# ட

1. டமாரக் காளை போல் அலையாதே.
2. டம்பாச் சாரி.
3. டில்லிக்கு ராஜாவானாலும் தாய்க்குப் பிள்ளை தான்.
4. டமார மடிச்சிட்டு வந்தாச்சா?
5. டமார செவிடு.
6. டாம்பீகத்துக்கும் தடபுடலுக்கும் குறைச்சல் இல்லை.
7. டில்லி தர்பார்னு நினைப்போ.

முதல் பாகம் முற்றிற்று

1. कालो जगत् भक्षकः। जगत चबेना काल का। कछु मुख में, कछु गोद
2. शिकायत करेंगे कि याद नहीं, कभी न कहेंगे पता नहीं।
3. इतवार का दिन है रोजा रखेंगे, खिलाओं हमें मांस - मछली।
4. भूखे भजन न होय गोपाल।
5. ज्ञानी न भोगे सुख-दुख की घात।
6. ज्ञान एक गठरी, दुनिया एक पटरी।
7. ज्ञानी के सामने सल्तनत धूल बराबर।

1. ढोल ढोता बैल-सा भटकता है।
2. ठाठ का टट्टू। खाने को भंग, नहाने को गंग, चढ़ने को तुरंग।
3. शाहजादा भी अपनी मां का बेटा है।
4. ढिंढोरा पीट लिया।
5. एकदम बहरा। बस कान बहूदूर
6. आडंबर और दिखावे में कमी नहीं।
7. नवाब का दरबार समझ रखा है। उन्नीस सौ तेरह का नशा चढा आंखों पर।

**भाग - 1 समाप्त**